





# தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com








CHENNAI | Volume- 3 | Issue:139 | 04-12-2025 | வியாழக்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி


### இன்றைய பஞ்சாங்கம்

04.12.2025 கார்த்திகை 18
வியாழக்கிழமை

சூரிய உதயம் 6.16

திதி:
இன்று காலை 7.54 வரை
சதுர்த்தசி பின்பு பௌர்ணமி.

நட்சத்திரம்:
இன்று மாலை 3.08 வரை
கார்த்திகை பின்பு ரோகிணி.

யோகம் :
இன்று பிற்பகல் 1.03 வரை
சிவம் பின்பு சித்தம்.

கரணம் :
இன்று காலை 7.54 வரை
வணிசை பின்பு மாலை 5.55
வரை பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று காலை 6.15 வரை
அமிர்த யோகம் பின்பு யோகம்
சரியில்லை.

சந்திராஷ்டமம்
இன்று மாலை 3.08 வரை
சித்திரை பின்பு சுவாதி

நல்ல நேரம்
காலை 10.45 – 11.45.
இராகு காலம்
பிற்பகல் 1.30 – 3.00.


எமகண்டம்
காலை 6.00 –7.30.


குளிகை
காலை 9.00 – 10.30.

காலை 9.00 – 10.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
**இராமமூர்த்தி**
செல்: 8189908040

# திருவண்ணாமலையில் 2,668 அடி மலை உச்சியில் மகா தீபம் ஏற்றப்பட்டது: பல லட்சம் பக்தர்கள் தரிசனம்





**திருவண்ணாமலை, டிச.4:**

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலில் மிகவும் பிரசித்தி பெற்ற விழாவான கார்த்திகை தீப திருவிழா மிகச் சிறப்பாக கொண்டாடப்படுகிறது . இந்த ஆண்டு கார்த்திகை தீபத் திருவிழா கடந்த நவ.24-ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாள் உற்சவம் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து நடைபெற்று வந்த உற்வசத்தில் கடந்த நவ.30-ம் தேதி மகா தேரோட்டம் நடைபெற்றது. விநாயகர், வள்ளிதெய்வானை சமேத முருகர், உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையார்,பராசக்தி அம்மன் மற்றும் சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் தனித்தனி தேர்களில் எழுந்தருளி பவனி வந்தனர்.

10-வது நாள் உற்சவமான நேற்று அண்ணாமலையார் சன்னதியில் உள்ள அர்த்த மண்டபத்தில் அதிகாலை 4 மணிக்கு ஏகன் அநேகன் தத்துவத்தை உலக்குஎடுத்துரைத்து பஞ்சபூதங்களும் நானே என்பதை இறைவன் உணர்த்தும் பரணி தீபத்தை சிவாச்சாரியார்கள் ஏற்றினர்.

பின்னர் பரணி தீபமானது அம்மன் சன்னதி ,விநாயகர் சன்னதி உள்ளிட்ட அனைத்து சன்னதிகளுக்கும் கொண்டு செல்லப்பட்டு தீபம் ஏற்றப்பட்டது. இதில் ஏராளமான பக்தர்கள் மழையையும் பொருட்படுத்தாமல் திரண்டிருந்து தரிசனம் செய்தனர்.

மாலையில் மகா தீபப் பெருவிழா நடைபெற்றது. 4 மணி முதல் அண்ணாமலையார் கோயில் 3-ம் பிரகாரத்தில் உள்ள கொடிமரம் முன்பு உள்ள தீப தரிசன மண்டபத்தில் பஞ்சமூர்த்திகளா விநாயகர், வள்ளிதெய்வானை சமேத முருகர், உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையார், பராசக்தி அம்மன், சண்டிகேஸ்வரர் ஆகியோர் சிறப்பு அலங்காரத்தில் எழுந்தருளினர். பின்னர் ஆண் - பெண் சமம் என்ற தத்துவத்தை உலகுக்கு உணர்த்த உமையாவளுக்கு தனது இடபாகத்தை வழங்கிய அண்ணாமலையார் "அர்த்தநாரீஸ்வரர்" ஆக ஆனந்ததாண்டவத்துடன் மாலை 5.50 மணி அளவில் தங்க கொடிமரம் முன்பு எழுந்தருளினார்.

ஆண்டுக்கு ஒரு முறை மகா தீபத்தன்று மட்டுமே சில நிமிடங்கள் காட்சி தரும் அர்த்தநாரீஸ்வரர் காட்சியை தரிசித்த பக்தர்கள் அண்ணாமலையாருக்கு அரோகரா என பக்தி பரவசத்துடன் முழக்கமிட்டனர். அப்போது, கொடிமரம் அருகே உள்ள அகண்ட தீபம் ஏற்றப்பட்டதும், மாலை 6 மணிக்கு 2,668 அடி உயர மலை உச்சியில் பருவதராஜ குல வம்சத்தினர் மகா தீபம் எற்றினர். மகா தீபம் ஏற்றப்பட்டதும்,கோயிலின் நவ கோபுரங்கள் மற்றும் வளாகங்களில் மின்விளக்கு அலங்கரம் ஜொலித்தது. மேலும், கோயில், வீடுகளில் அகல் விளக்கு ஏற்றி பக்தர்கள் வழிபட்டனர்.

மலை மீது மகா தீபம் ஏற்ற 3,500 கிலோ நெய், ஆயிரம் மீட்டர் திரி பயன்படுத்தப்பட்டது. மலைமீது ஏற்றப்பட்ட மகா தீபம் தொடர்ந்து 11 நாட்கள் பக்தர்களுக்கு காட்சி அளிக்கும். கார்த்திகை தீபத்திருவிழாவையொட்டி 14 கி.மீ. தொலைவு உள்ள தீபமலையை சுற்றி அதிகாலையில் இருந்து பக்தர்கள் கிரிவலம் சென்றனர். விட்டு விட்டுபெய்த மழையினையும் பொருட்படுத்தாமல் இன்று விடிய விடிய 30 லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் மேற்கொள்கின்றனர்.

மேலும், இன்று முதல் 3 நாட்களுக்கு இரவு ஐயங்குளத்தில் தெப்பல் உற்சவம் நடைபெற உள்ளது. அதைத் தொடர்ந்து, உண்ணாமுலையம்மன் சமேத அண்ணாமலையார் கிரிவலம் செல்லும் நிகழ்வு நடைபெறும். பின்னர் கார்த்திகை தீபத்திருவிழா டிச.7-ம் தேதி சண்டிகேஸ்வரர் உற்சவத்துடன் நிறைவு பெறுகிறது.

இந்த விழாவில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, உச்ச நீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன், ஆட்சியர் க.தர்ப்பகராஜ், மாநில தடகள சங்கதுணைத்தலைவர் மருத்துவர் எ.வ.வே.கம்பன், முன்னாள் நகராட்சி தலைவர் இரா.ஸ்ரீதரன் உள்பட முக்கிய பிரமுகர்கள், அரசியல் கட்சியினர், அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

தீபத் திருவிழாவையொட்டி வடக்கு மண்டல காவல் துறை தலைவர் அஸ்ராகார்க் தலைமையில் 15 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

# திருப்பரங்குன்றம் முழுவதும் 144 தடை உத்தரவு வாக்குவாதம், தள்ளுமுள்ளு, பதற்றம்

**மதுரை, டிச.4:**

144 தடை உத்தரவால் திருப்பரங்குன்றம் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற சிஐஎஸ்எப் வீரர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் வாக்குவாதமும், தள்ளுமுள்ளும் ஏற்பட்டது. தொடர்ந்து பதற்றமான சூழலால் தென்மண்டல ஐஜி பிரேம் ஆனந்த் சின்கா, மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

திருப்பரங்குன்றம் மலை உச்சியிலுள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்றுவதற்கு உயர் நீதிமன்றம் மதுரை அமர்வு உத்தரவிட்டது.

இந்த உத்தரவை நிறைவேற்றாததால் வழக்கு தொடர்ந்த மனுதாரர்கள், மத்திய தொழிலக பாதுகாப்புடன் திருப்பரங்குன்றம் மலை உச்சிக்கு சென்று தீபத்தூணில் தீபம் ஏற்ற நீதிபதி ஜிஆர். சுவாமிநாதன் புதன்கிழமை மாலை உத்தரவிட்டார்.



இதைத் தொடர்ந்து மனுதாரரான ராமரவிக்குமார், சக மனுத்தாரர்கள், இந்து அமைப்பினர் 60-க்கும் மேற்பட்ட மத்திய தொழிலக பாதுகாப்பு வீரர்களுடன் புதன்கிழமை இரவு திருப்பங்குன்றம் சென்றனர். முருகன் கோயிலுக்கு அருகிலுள்ள பழனியாண்டவர் கோயில் பாதை வழியாக மலை உச்சிக்கு செல்ல முயன்றனர். அப்போது, அவர்களை அங்கு போலீஸார் தடுப்பு வேலிகளை போட்டு மறைத்து அனுமதி மறுத்தனர்.

திருப்பரங்குன்றம் முழுவதும் 144 தடை உத்தரவு பிறக்கப்பட்டுள்ளதாலும், தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டு இருப்பதாலும் இதில் முடிவு வரும் வரையிலும் யாரையும் மலைக்கு போகக் கூடாது போலீஸார் அறிவுறுத்தனர்.

இது தொடர்பாக இரு தரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்தது. தொடர்ந்து அப்பகுதியில் இந்து அமைப்பினர் ஏராளமானோர் திரண்டனர். அவர்களும் தடுப்புகளை மீறி மலைக்கு மேல் செல்ல முயன்றனர்.

அவர்களை போலீஸார் தடுத்ததால் ஆத்திரத்தில் தடுப்புகளை தள்ளிவிட்டும், மதில் சுவர்களில் ஏறியும் மலை பாதைநோக்கி ஓட முயன்றனர். தடுப்பு வேலிகளும் இந்து அமைப்பினரால் தூக்கியதில் போலீஸ்காரரர் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

முருகன் கோயிலுக்கு புகுந்து சிலர் போராட்டம் நடத்தினர். தொடர்ந்து பதற்றமான சூழலால் தென்மண்டல ஐஜி பிரேம் ஆனந்த் சின்கா, மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் ஏராளமான போலீஸார் குவிக்கப்பட்டுள்ளனர். பதினாறு கால் மண்டபம் , கோயில், மலை பகுதி போலீஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது.

# எடப்பாடி பழனிசாமியுடன் அன்புமணி பிரிவு பாமக நிர்வாகிகள் சந்திப்பு!

**சென்னை, டிச.4:**

அதிமுகபொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை அன்புமணி பிரிவு பாமக நிர்வாகிகள் இன்று சந்தித்தனர்.

இதுகுறித்து அதிமுக வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘ கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை, சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள செவ்வந்தி இல்லத்தில், பாட்டாளி மக்கள் கட்சியை சேர்ந்த வழக்கறிஞர் கே. பாலு, முன்னாள் எம்எல்ஏ கணேஷ்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்தார்கள்’ எனத் தெரிவிக்கப் பட்டது.

பாமக வழக்கறிஞர் கே.பாலு வெளியிட்ட எக்ஸ் பதிவில், ‘பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் 17ஆம் தேதி சென்னையில் நடைபெற உள்ள சாதிவாரி கணக்கெடுப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புமணி ராமதாஸ் எழுதிய கடிதத்தை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் கட்சி முக்கிய நிர்வாகிகளுடன் சென்று வழங்கிய போது’ எனத் தெரிவித்தார்.

2024 மக்களவைத் தேர்தலில் பாஜகஅணியில்இடம்பெற்றிருந்த பாமக, 2026 சட்டப்பேரவை தேர்தல் கூட்டணி குறித்த நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை. அதே நேரத்தில் தற்போது பாமக அன்புமணி தலைமையில் ஒரு பிரிவும், ராமதாஸ் தலைமையில் ஒரு பிரிவும் செயல்பட்டு வருகிறது. இந்த சூழலில் அன்புமணி பிரிவு பாமக இன்று எடப்பாடி பழனிசாமியை சந்தித்துள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.






# ரஷ்ய அதிபர் புதினின் இந்திய பயணத்துக்காக விமானத்தில் வந்த சொகுசு கார்!


**புதுடெல்லி, டிச.4:**

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதின் 2 நாள் அரசுமுறைப் பயணமாக இன்று (டிச.4) இந்தியா வருகிறார். அவர் வருகையை ஒட்டி ஐந்து அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதில், அவருக்காக பிரத்யேகமாக அவர் பயன்படுத்தும் ஆரஸ் செனட் ரக சொகுசு கார் விமானத்தில் வரவழைக்கப்பட்டுள்ளது கவனம் பெற்றுள்ளது.

இந்தக் கார் புதினின் அரணாக விளங்குகிறது. இது ரஷ்ய ஆட்டோமொபைல் நிறுவனமான ஆரஸ் மோட்டார்ஸ் நிறுவனத்தால் 2018-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் இந்தக் காரை ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் அதிபரின் பாதுகாப்பு







கருதி மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களுடன் ‘நகரும் பாதுகாப்பு அரண்’ (Fortress on wheels) என்று வர்ணிக்கப்படும் அளவுக்கு உருவாக்கினர்.

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சொகுசு மற்றும் பாதுகாப்பு அம்சங்கள் நிறைந்த வாகனங்களை ரஷ்ய அதிபர் தொடங்கி முக்கியத் தலைவர்கள், அதிகாரிகள் வரை பயன்படுத்த வேண்டும் என்று அந்நாடு ‘கார்டெஸ்’ ( Kortezh ) என்ற திட்டத்தை முன்னெடுத்தது. அதன்படி, உருவாக்கப்பட்ட ஆரஸ் செனட் கார் புதின் வெளிநாட்டுப் பயணங்களுக்குச் சென்றால் முன்கூட்டியே அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

சமீபத்தில் சீனாவில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு கூட்டமைப்பின் உச்சி மாநாட்டின் போதும் புதினுக்காக இந்த கார் எடுத்தச் செல்லப்பட்டது. அந்தக் காரில் தான் பிரதமர் மோடி, புதினுடன் பயணித்தார் என்பது நினைவுகூரத்தக்கது. மேலும், இந்த ரக காரை ரஷ்யா அதன் நீண்ட கால நட்பு நாடான வட கொரியாவின் அதிபருக்கும் தயாரித்து வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

இத்தனை சுவாரஸ்யங்கள் நிறைந்த காரில் தான் புதின் டெல்லியில் வலம்வர இருக்கிறார். பாரத் மண்டபத்தில் நடக்கும் நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார்.

மேலும், குடியரசுத் தலைவர் மாளிகையில் அவருக்காக விருந்து உபசரிப்பு நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

டெல்லியில் புதினுக்கான பாதுகாப்பு வளையத்தில், வெளி வட்டாரப் பாதுகாப்பில் டெல்லி போலீஸ் ஈடுபடுகின்றனர். ரஷ்ய அதிபரின் உள்வட்டார பாதுகாப்பை அவரது பாதுகாப்பு குழுவினரே கவனிக்கின்றனர். ரஷ்ய அதிபர் பிரதமர் மோடியை சந்திக்கும் போது, இந்தியாவின் எஸ்பிஜி எனப்படும் சிறப்பு பாதுகாப்புக் குழுவினர் பாதுகாப்பு வழங்குகின்றனர்.

அதுமட்டுமல்லாது புதின் தங்கவிருக்கும் ஓட்டல் முழுவதுமாக சானிட்டைஸ் செய்யப்பட்டுள்ளது. மேலும், அங்கு ரஷ்ய பாதுகாப்பு அதிகாரிகள் சிறப்பு சோதனையையும் மேற்கொண்டு வருகின்றனர். அதுதவிர ரஷ்ய அதிபர் செல்லவுள்ள இடங்களிலும் அவர்கள் முழுமையாக சோதனை நடத்தி பாதுகாப்பை உறுதி செய்துள்ளனர்.



## திருக்குறள் குறள்-459

மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்
இனநலத்தி னேமாப் புடைத்து



மனத்தின் நன்மையால் மறுமை இன்பம் உண்டாகும், அதுவும் இனத்தின் நன்மையால் மேலும் சிறப்புடையதாகும்.

## சிந்திக்க ஒரு நொடி



கஷ்டப்பட்டு முன்னுக்கு வருவது தப்பில்லை ஆனால் மற்றவரை கஷ்டப்படுத்தி முன்னுக்கு வருவதுதான் தப்பு

**வெ நாராயணன்**
லால்குடி

# வடமலைப்பட்டி சிவாலயத்தில் தீபத் திருவிழா





**கிருஷ்ணகிரி, டிச.04:** போச்சம்பள்ளி வடமலம்பட்டி சர்வலிங்கேஸ்வரர் ஆலயத்தில் தீப திருவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆலயத்தில் அதிகாலை பரணி தீபம் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாலை திருவண்ணாமலையில் மகா தீபம் ஏற்றப்பட்டதற்கு பின்பு ஆலயத்தில் மகா தீபமும் அதைத் தொடர்ந்து சிவலிங்க உருவத்தில் அலங்கரிக்கப்பட்ட அகல்விளக்குகளுக்கும் திருவண்ணாமலை கோபுர வடிவில் அலங்கரிக்கப்பட்ட அகல் விளக்கிற்கும் பக்த கோடிகள் விளக்குகள் ஏற்றி மகிழ்ந்தனர். சிவனடியார்கள் பன்னிரு திருமுறைகள் இசைத்து தீபத் திருவிழாவை கொண்டாடினர்.

## திருக்கார்த்திகை தீபத் திருவிழா முன்னிட்டு ஸ்ரீ சுப்ரமணியர்க்கு தீர்த்தவாரி



**திருவண்ணாமலை, டிச.04:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திருக்கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு பத்தாம் நாளான நேற்று பிரம்ம தீர்த்தத்தில் தீர்த்தவாரி நடைபெற்றது ஸ்ரீசுப்பிரமணியர் அலங்காரத்துடன் அருள் பாலிக்கும் காட்சி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம்



**திருப்பத்தூர், டிச.04:**
திருப்பத்தூர் மாவட்ட காவல் அலுவலகத்தில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முத்துக்குமரன், தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மொத்தமாக 15 மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்.

## அனைத்து ஓய்வூதியர் நல அமைப்பு சங்க கூட்டம்



**ஆரணி, டிச.04:**
தமிழ்நாடு பேரூராட்சி நகராட்சி மாநகராட்சி அனைத்து ஓய்வூதியர் நல அமைப்பு சங்க கூட்டம் (டிசம்பர் 2 ) ஆரணியில் வட்டத் தலைவர் எஸ் குமார் தலைமையில் நடைபெற்றது.16அம்ச கோரிக்கை வலியுறுத்தி 11.12.25 மாநிலம் தழுவிய மாவட்ட தலைநகர் ஆர்ப்பாட்டம் ஆரணியில் நடத்துவது என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்க ஆரணி வட்ட கிளைத்தலைவர் அமிர்தலிங்கம் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். நிர்வாகிகள் ஓய்வூதியர்கள் கலந்து கொண்டார்கள்.

# கார்த்திகை மாதம் கிருத்திகை சிறப்பு வழிபாடு




**திருவண்ணாமலை, டிச.04:**
திருவண்ணாமலை திண்டிவனம் சாலை ஸ்ரீ அருணகிரிநாதர் சித்தர் பீடத்தில் எழுந்தருளியுள்ள சோ. கீழ்நாச்சிப்பட்டில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீ அறிவுக்கோற்கையன் சுவாமி திருக்கோயில் கார்த்திகை மாதம் கிருத்திகை முருகனடிமை வேத வித்து அவர்களால் மூலவர்க்கும், உற்சவருக்கும் அபிஷேகங்கள், வண்ணமலர் மாலைகளால் அலங்கரித்து,வேத மந்திரங்கள் ஒலிக்க, சங்குகள் முழங்க, ஹோமங்கள், வளர்த்து மங்கள வாத்தியங்கள், மேள தாளங்கள் இசைக்க, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், மகாதீபாரதனையும் நடைபெற்றது.

பின்னர் உற்சவர் மேள தாளத்துடன் ஆலயம் சுற்றி வந்தது. ஏராளமான பக்தர்கள் அரோகரா அரோகரா என்று கோஷமிட்டு வேண்டி அருள் பெற்றனர்.700-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மஹா வைஷ்ணவ தீப உற்சவம்



**தஞ்சாவூர்,டிச.04:**
தஞ்சாவூர் மகர்நோம்புச் சாவடி V.P. கோவில் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீதேவி பூதேவி ஸ்ரீ அலமேலு மங்கா ஸமேத ஸ்ரீ ப்ரஸன்ன வேங்கடேஸப் பெருமாள் திருக்கோவிலில் வருகிற (04.12.2025) திருக்கார்த்திகை முன்னிட்டு காலை பெருமாளுக்கு திருமஞ்சனமும், மாலை சுவாமி 7 மணியளவில் பிரகார புறப்பாடும் மற்றும் சொக்கப்பாணை தீபம் ஏற்றுதல் நடைபெற்ற உள்ளது.

அனைவரும் வருக! எம் பெருமான் அருள் பெறுக!! நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் நிர்வாக பரம்பரை அறங்காவலர் திரு.B.S. சேஷாத்திரி அவர்கள் மற்றும் உபயதாரர்கள் செய்து வருகின்றனர்

**செய்தி: தேனே T.P.குமரன், மகர்நோம்புச்சாவடி, தஞ்சாவூர்**

## புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு



ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியம் குருக்காட்டூரில் புதிதாக கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகத்தை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் நேற்று திறந்து வைத்தார்.

## சிறப்பாக பணியாற்றிய நூலகர்களுக்கு விருதுகள்



தர்மபுரியில் தேசிய நூலக வார விழாவில் சிறப்பாக பணியாற்றிய நூலகர்களுக்கு கலெக்டர் சதீஸ்குமார் விருதுகள் வழங்கினார்.

## பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



நாமக்கல்லில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை கலெக்டர் துர்காமூர்த்தி வழங்கினார்.

## எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணி



தர்மபுரியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எய்ட்ஸ் விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் சதீஸ்குமார் துவக்கி வைத்தார்.

# திருக்கார்த்திகை தீபத் திருவிழா பத்தாம் நாள் கார்த்திகை மகா தீபம்

**திருவண்ணாமலை, டிச.04:**
திருவண்ணாமலை அருள்மிகு அண்ணாமலையார் திரு கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு இன்று அதிகாலை பரணி தீபமும், மாலை 6 மணிக்கு 2668 அடி உயர மலை உச்சியில் வானவேடிக்கையுடன், சங்குகள் முழங்க, மேள தாளத்துடன் மகா தீபம் ஏற்றப்பட்டது.

பஞ்ச மூர்த்திகள் பத்தாம் நாள் இரவு அலங்காரத்தில் காட்சி அளிக்கும் காட்சி அண்ணாமலையார், உண்ணாமலையம்மன், திருவண்ணாமலை பருவத ராஜனின் மகள் பார்வதி வழிவந்த வம்சவாலியினருக்கே தீபம் ஏற்றும் உரிமை 48 நாட்கள் விரதம் இருந்து பரிவட்டத்துடன் மலை ஏறி தீபம் ஏற்றுவார்கள்.

ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காட்சியளிக்கும் அர்த்தநாரீஸ்வரர் ஆட்டம் பார்க்க கண்கொள்ளாக் காட்சி. அக்னி வடிவில் ஜோதியாக காட்சி அளிக்கும் அண்ணாமலையார்.



பக்தர்கள் அரோகரா அரோகரா என்று முழக்கமிட்டு அண்ணாமலையார் உண்ணாமலை அம்மனை வேண்டி அருள் பெற்றனர்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## பச்சரிசி மலையில் தீபம்



திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, கோயில் எதிரே உள்ள பச்சரிசி மலையில் 200 கிலோ நெய் மற்றும் நீள திரியால் தயாரிக்கப்பட்ட விளக்கில், தீபம் ஏற்றப்பட்டது.

## 99.20 சதவீதம் வாக்காளர்களுக்கு கணக்கீட்டு படிவங்கள் வழங்கல் தேர்தல் ஆணையம் தகவல்

**சென்னை, டிச.4:**

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளின்கீழ் தமிழகத்தில் 6 கோடியே 35 லட்சத்து 99 ஆயிரத்து 698 கணக்கீட்டு படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்தது. இது 99.20 சதவீதமாகும். அவற்றில் 91.49 சதவீதம் பதிவேற்றம் செய்யப்பட்டு உள்ளது. நவம்பர் 4 முதல் 68,470 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று படிவங்களை வழங்கி வருகின்றனர். தமிழகத்தில் கடந்த அக்.27 ஆம் தேதி நில வரப்படி மொத்தம் 6 கோடியே 41 லட்சத்து 14 ஆயிரத்து 587 வாக்காளர்கள் உள்ளனர். அவர்களுக்கு வழங்குவதற் காக அதே அளவில் கணக்கீட்டு படிவங்கள் அச்சடிக்கப்பட்டு உள்ளன. புதுச்சேரியில் மொத்தம் 10,21,578 வாக்காளர்கள் உள்ளனர். அங்கு 10,16,423 கணக்கீட்டு படிவங்கள், அதாவது 99.50 சதவீத படிவங்கள் வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

## கரூர் சம்பவம்: உச்சநீதிமன்ற நீதிபதி குழு விசாரணை

**கரூர், டிச.4:**

கரூர் கூட்ட நெரிசல் உயிரிழப்பு சம்பவம் குறித்து விசாரணை நடத்த உச்ச நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோக்கி தலைமையிலான மேற்பார்வை குழுவினர் திங்கள்கிழமை கரூருக்கு வருகை தந்தனர். கோவை விமான நிலையத்திலிருந்து வந்த குழுவினர் ஏற்கனவேவிசாரணையில் ஈடுபட்டிருந்த சிபிஐ அதிகாரிகளு டன் ஆலோசனை நடத்தினர். உயிரிழந்த மற்றும் காய மடைந்தவர்களின் குடும்பத்தினரை நேரில் சந்தித்து விசா ரணை மேற்கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. டிஐஜி அதுல்குமார் தாகூர் திங்கள்கிழமை கரூரில் சிபிஐ அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின் சம்பவம் நடை பெற்ற வேலுச்சாமிபுரத்திற்கு சென்று ஆய்வு செய்தார். முன்னதாக மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் மற்றும் கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல் உள்ளிட்டோர் உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோக்கி தலைமையி லான குழுவினரை மரியாதை நிமித்தமாக சந்தித்து பேசினர்.

## நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் 9.86 லட்சம் பேர் பயன்

**சென்னை, டிச.4:**

நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தின் செயல் பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டார். முகாம்களுக்கு வரும் மக்களுக்கு குடிநீர், இருக்கை வசதி கள், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதி கள் செய்து தரப்படுவதை உறுதி செய்திட வேண்டும். வழிகாட்டுதல் வழங்க போது மான அளவு தன்னார்வலர்களை நியமிக்க வேண்டும் என்று அலுவலர்களுக்கு அறி வுறுத்தினார். முகாம்கள் நடைபெறுவது குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் விளம்பரம் செய்து விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும். தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டுவதற்கு தனியாக அறை ஏற்படுத் திட வேண்டும். முதியோர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு உரிய வசதிகளை செய்து தர வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். திட்டத்தில் மாநி லம் முழுவதும் இதுவரை 632 முகாம்கள் நடத்தப்பட்டு 9,86,732 பேர் பயனடைந்து உள்ளனர்.

## ரூ.302 கோடி வருமானம்

**சென்னை, டிச.4:**

தமிழக அரசின் பத்திரப் பதிவு துறை, அரசுக்கு வரு வாய் ஈட்டி தருவதில் முக்கிய பங்கு வகிக் கிறது. பத்திரப் பதிவுத் துறை வரலாற்றில் இது வரை இல்லாத அள வாக டிசம்பர் 1 ஆம் தேதி ஒரேநாளில் ரூ.302 கோடி வருவாய் ஈட்டி பதிவுத் துறை சாதனை படைத்து உள்ளது.

## திமுக எம்எல்ஏ மீதான வழக்கு ரத்து

**சென்னை, டிச.4:**

இராம நாதபுரம் மாவட்டம், முது குளத்தூர் திமுக எம்எல்ஏ முருகேசன் மீதான வழக்கை ரத்து செய்து சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவிட்டு உள்ளது. 2021 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது வாக் காளர்களுக்கு பணப் பட்டுவாடா செய்ததாக பதியப்பட்ட வழக்கு இது. முதுகுளத்தூர் தொகுதி யில் திமுக சார்பில் போட்டியிட்டு முருகே சன் வெற்றி பெற்றிருந்தார்.

## பாம்பனில் ஓரா மீன் வரத்து அதிகரிப்பு!



**ராமேசுவரம், டிச.4:**

டிட்வா புயலுக்கு பின்னர், கடலுக்குச் சென்ற பாம்பன் மீனவர்கள் வலையில் ஓரா மீன்கள் அதிகமாக கிடைத்தன.

இலங்கை அருகே தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் உருவான டிட்வா புயலால் தமிழகத்தில் மீனவர்கள் கடலுக்குச் செல்ல மீன்வளத் துறை அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில், 8 நாட்களுக்கு பின்னர் மன்னார் வளைகுடா கடல்பகுதியில் வானிலை சீரானதை தொடர்ந்து, பாம்பன் தெற்கு கடற்பகுதியிலிருந்து 80-க்கும் மேற்பட்டோர் விசைப்படகுகளில் அனுமதி டோக்கன் பெற்று, சுமார் 500 மீனவர்கள் நேற்று கடலுக்குச் சென்று நேற்று கரை திரும்பினர். இந்நிலையில், பாம்பன் கடற்பகுதியில் ஓரா மீன்களின் சீசன் தொடங்கியுள்ளது.

இது குறித்து பாம்பன் விசைப்படகு மீனவர்கள் கூறுகையில், “கரை திரும்பிய மீனவர்களின் வலையில் சீலா, சாவாளை, பாறை, கும்ளா, திருக்கை, மத்தி, பேசாளை, ஓரா விலை மீன் என பல்வேறு வகையான மீன்கள் பரவலாக கிடைத்திருந்தன.

குறிப்பாக, 50 படகுகளில் ஓரா மீன்கள் படகுக்கு தலா 2,000 கிலோ வரை கிடைத்ததால், பாம்பன் துறைமுகம் முழுவதும் ஓரா மீன்கள் கூடை, கூடையாக அதிகளவு நிரம்பி காணப்பட்டது. ஐயப்ப சாமி விரதம் மற்றும் திருக்கார்த்திகை திருவிழா காரணமாக மீன்களின் தேவை குறைந்ததால் வியாபாரிகள் ஓரா மீன்களை கிலோ ரூ. 80 முதல் ரூ. 100 வரையிலும் ஏலம் எடுத்தனர்” என்று அவர்கள் கூறினர்.

## உலகின் முதல் 100 ராணுவ தளவாட தயாரிப்பு நிறுவனங்கள் பட்டியலில் இந்தியா 3வது இடம்

**புதுடெல்லி, டிச.4:**

ராணுவ தளவாட உற்பத்தியில் உலகின் முதல் 100 நிறுவனங்களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த 3 பொதுத் துறை நிறுவனங்கள் இடம் பிடித்து அசத்தியுள்ளன. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (சிப்ரி) வெளியிட்ட சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ராணுவ தளவாட உற்பத்தியில் உலகளவில் முன்னணியில் உள்ள 100 நிறுவனங்களின் பட்டியலில் இந்தியாவைச் சேர்ந்த மூன்று பொதுத்துறை நிறுவனங்கள் இடம்பெற்றுள்ளன. இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் (எச்ஏஎல்), பாரத் எலக்ட்ரானிக்ஸ் (பிஇஎல்), மசாகன் டாக்ஸ் (எம்டிஎல்) ஆகிய நிறுவனங்கள் அந்தப் பட்டியலில் இடம்பெற்றிருந்தாலும் அதன் விற்பனை பங்களிப்பு என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. கடந்தாண்டு நிலவரப்படி சர்வதேச ஆயுத விற்பனையில் அந்த மூன்று நிறுவனங்களும் இணைந்து 1.1% பங்களிப்பை மட்டுமே வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் ஆயுத விற்பனை கடந்த 2024-ல் 5.9% அதிகரித்து சுமார் ரூ.61 லட்சம் கோடியை எட்டியுள்ளது. உக்ரைன், காசா இடையே ஏற்பட்டுள்ள மோதல், சர்வதேச மற்றும் பிராந்திய அளவிலான புவிசார் பதற்றம் ஆகியவை ராணுவத்துக்கான செலவுகள் அதிகரிக்க முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன.

முதல் 100 நிறுவனங்கள் ஆயுத விற்பனை பட்டியலில் 39 நிறுவனங்களுடன் அமெரிக்காவே ஆதிக்கம் செலுத்துகிறது. இவற்றின் ஆயுத விற்பனை பங்களிப்பு 334 பில்லியன் டாலர். இதைத் தொடர்ந்து சீனா 8 நிறுவனங்களுடன் 88 பில்லியன் டாலர் விற்பனையைக் கொண்டு 2-வது இடத்தில் உள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த எச்ஏஎல் 3.8 பில்லியன் டாலர் விற்பனையுடன் 44-வது இடத்தில் உள்ளது. இதைத் தொடர்ந்து, பிஇஎல் 2.4 பில்லியன் டாலர் விற்பனையுடன் 58-வது இடத்திலும், எம்டிஎல் 1.2 பில்லியன் டாலர் விற்பனையுடன் 91-வது இடத்திலும் உள்ளன. அமெரிக்காவின் லாக்கீட் மார்ட்டின் பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

## தினமும் 20,000 பேருக்கு பாஸ்டேக் வருடாந்திர பாஸ்

**புதுடெல்லி, டிச.4:**

பாஸ்டேக் வருடாந்திர பாஸ் நாள்தோறும் 20,000 பேருக்கு விற்பனை செய்யப்படுவதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து புள்ளி விவரங்கள் கூறுவதாவது:

பாஸ்டேக் வருடாந்திர பாஸ் அறிமுகப்படுத்தப்பட்டது முதற்கொண்டு அதற்கான தேவை அதிகரித்து வருகிறது. நாள்தோறும் புதிதாக 20,000 பேர் இந்த பாஸை வாங்கி வரும் நிலையில் அதன் மொத்த பயனாளர் எண்ணிக்கை தற்போதைய நிலையில் 36.3 லட்சத்தை எட்டியுள்ளது. அதன்படி, 5 கார் பயனார்களில் ஒருவர் இந்த வருடாந்திர பாஸை பயன்படுத்துபவராக உள்ளார்.

பாஸ்டேக் வருடாந்திர பாஸ் அறிமுகம் செய்யப்பட்ட வெறும் மூன்றரை மாதங்களில் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளது. பாஸ்டேக் வருடாந்திர பாஸ் விலை ரூ.3,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கார் வைத்திருப்பவர்கள் ஆண்டொன்றுக்கு 200 முறை சுங்கச்சாவடிகளை கடந்து செல்ல முடியும். அப்படிப்பார்த்தால் தேசிய நெடுஞ்சாலையில் ஒரு சுங்கச்சாவடியை கடந்து செல்வதற்கான கட்டணம் என்பதும் மிகவும் குறைவாக (ரூ.15) உள்ளது. இவ்வாறு புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகரங்களுக்கு இடையே பயணிப்பவர்களுக்கு பாஸ்டேக் வருடாந்திர பாஸ் அறிமுகம் செலவு குறைந்ததாகவும், பயன்படுத்துவதற்கு எளிதாகவும் உள்ளது. தரவுகளின் படி சுங்கச்சாவடிகளை கடந்து செல்லும் மொத்த கார்களில் 40% வருடாந்திர பாஸ் மூலமே கட்டணம் செலுத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தேசிய அளவில் 22% சதவீதமாக உள்ளது.

## சொந்த பயன்பாட்டு வாகனங்களை பதிவு செய்வதில் புதிய நடைமுறை: வாகனத்தை ஆர்டிஓ அலுவலகம் கொண்டு செல்லத் தேவையில்லை

**சென்னை, டிச.4:**

சென்னை: சொந்த பயன்பாட்டு வாகனங்களை பதிவு செய்ய ஆர்டிஓ அலுவலகங்களுக்கு இனி வாகனங்களை கொண்டு செல்ல தேவையில்லை. இந்த புதிய நடைமுறை நேற்று அமலானது.

தமிழகத்தில் மொத்தம் 150-க்கும் மேற்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலகங்கள் (ஆர்டிஓ அலுவலகம்) உள்ளன. இங்கு ஓட்டுநர் உரிமங்கள், நடத்துநர் உரிமங்கள், பழகுநர் உரிமம், வாகன பதிவுகள், சாலை வரி செலுத்துதல் போன்ற பணிகள் செய்து தரப்படும்.



புதிய வாகனங்களை பதிவு செய்யும்போது, ஆர்டிஓ அலுவலகத்துக்கு கட்டாயம் கொண்டு வர வேண்டும் என்ற நடைமுறை இருந்தது. இதனால் வாகனத்தின் உரிமையாளரோ அல்லது டீலரோ, ஆர்டிஓ அலுவலத்துக்குச் செல்ல வேண்டும்.

இந்நிலையில் மோட்டார் வாகன புதிய சட்ட திருத்தத்தின்படி, சொந்த பயன்பாட்டு வாகனங்கள் பதிவின்போது, அவற்றை அலுவலகத்துக்கு கொண்டு வரத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டது. ஆனால் இது தமிழகத்தில் அமல்படுத்தப்படாமல் இருந்தது. இதுதொடர்பாக, ஆட்டோமொபைல் டீலர்கள் சங்கம் தொடர்ந்த வழக்கில், சொந்த பயன்பாட்டுக்கான புதிய வாகனங்களை, வட்டார போக்குவரத்து அலுவலகத்துக்கு கொண்டு வருவதில் விலக்கு அளிக்க வேண்டும் என அரசுக்கு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து சொந்த பயன்பாட்டுக்கான புதிய வாகனங்களை பதிவு செய்ய, ஆர்டிஓ அலுவலகத்துக்கு கொண்டு வர தேவையில்லை என்ற நடைமுறை நேற்று முதல் அமலுக்கு வந்தது.

இதுகுறித்து போக்குவரத்து ஆணையரக அதிகாரிகள் கூறியதாவது:

புதிய நடைமுறையால் டீலர்களே, வாடிக்கையாளரின் ஆவணங்களை வாஹன் இணையதளத்தில் பதிவேற்றி, பதிவுக்கட்டணம் மற்றும் சாலை வரியைச் செலுத்தி, ஆன்லைனிலேயே பதிவை முடிக்கலாம். ஆன்லைனிலேயே கட்டணங்கள் செலுத்தப்படுவதால், யாருக்கும் தேவையின்றி பணம் கொடுக்க வேண்டிய நிலை இருக்காது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www.tamilnaduepaper.com

இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.

"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்

94452 65389



## நலம் தரும் மருத்துவம்

### ஆன்டி ஆக்சிடென்ட் நிறைந்த வால் மிளகு

மிளகு, வால் மிளகு இரண்டும் ஒரே வகையை சேர்ந்தவை. மிளகைப் போன்றே இருக்கும். ஆனால் இதில் காம்புடன் இணைந்து, பார்ப்பதற்கு வால் போன்று இருப்பதால் இதனை ‘வால் மிளகு’ என்பார்கள்.

*சிறிதளவு வால் மிளகுத்தூள் எடுத்து சிறிதளவு தேன் கலந்து சாப்பிட்டால் நீரிழிவு நோய் குறையும்.

*வால் மிளகுத்தூள், லவங்கப்பட்டை தூள் சேர்த்து நெய்யில் கலந்து சாப்பிட இருமல் குறையும்.

*வால் மிளகு, சந்தனப்பொடி, அதிமதுரம் சிறிது எடுத்து மூன்றையும் நீரில் இட்டு காய்ச்சி மூன்று வேளையும் குடித்து வந்தால் வயிற்றில் கல் அடைப்பு மற்றும் சிறுநீர் பிரச்னை குணமாகும்.

*வால் மிளகை 2 வெற்றிலையில் வைத்து சாப்பிட வாய் துர்நாற்றம், தொண்டைப்புண் ஆகியவை குணமாகும்.

*சளித் தொல்லை உள்ளவர்கள், தொண்டை சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு மோரில் சீரகம், வால் மிளகுப் பொடி செய்து கலந்து குடிக்கலாம். இரவில் வெதுவெதுப்பான பாலில் வால் மிளகுத்தூள், அதிமதுர தூள் கலந்து குடிக்க பிரச்னை குறையும்.

*உடல் சூடு உள்ளவர்களும், சிறுநீர் எரிச்சல் இருந்தாலும் பசும்பாலில் வால் மிளகை ஊறவைத்து அதில் பீர்க்கங்காய் அல்லது நீர்க்காய்களை பொரியல் செய்து சாப்பிட்டு வந்தால் உடல் சூடு குறையும். வாதம், பித்தம், வயிற்றுவலி போன்ற பிரச்னைகளும் குணமாகும்.

*கீரைகள் சமைக்கும் போது அதில் வால் மிளகுப் பொடி சிறிது சேர்த்து செய்தால் உடலுக்கு சத்துக்களை அதிகரிக்க செய்யும். வால் மிளகில் அதிக வேதிப் பொருட்கள் இருப்பதால் அதிக மருத்துவ குணங்களை கொண்டது.

வால் மிளகில் வேதிப் பொருட்கள் இருப்பதால் புற்றுநோய் வராமல் தடுக்கிறது. கல்லீரலில் ஏற்படும் வைரஸை வராமல் தடுக்கும். இதில் உள்ள கேரீன், கேர்யோ பில்லைன், சிரியோல் க்யு பபீன் இருப்பதாலும், ஆன்டி ஆக்சிடென்ட் தன்மை உள்ளதாலும் பல்வேறு நோய்களை தடுப்பதில் ‘வால் மிளகு’ சிறப்பாக செயல்படுகிறது.

### ஆரோக்கியம் காக்கும் கற்றாழை!

கற்றாழை உச்சி முதல் உள்ளங்கால்வரை உள்ள அத்தனை உறுப்புகளுக்கும் உகந்த ஒரு மூலிகை ஆகும். கற்றாழைக்குக் கன்னி, குமரி என்ற பெயர்களும் உண்டு. கற்றாழையில் சிறு கற்றாழை, பெரும் கற்றாழை, செங்கற்றாழை, பேய்க்கற்றாழை, கருங்கற்றாழை, வரிக்கற்றாழை எனப் பல வகை உண்டு. இவற்றில் சோற்றுக்கற்றாழை மட்டுமே மருத்துவப் பயன்பாட்டில் உள்ளது.

கற்றாழையில் இயற்கை சத்துக்களான வைட்டமின்கள், தாதுக்கள், அமினோ அமிலங்கள் ஏராளமாக உள்ளன. மேலும், மிக அரிய தாதுக்களான செலினியம், குரோமியம் ஆகியவையும் இதில் அடங்கியுள்ளன. உடலைக் குளிர்ச்சியாக வைத்துக்கொள்ள கற்றாழை உதவுகிறது. அழகுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள் தயாரிக்கப் பெரிதும் பயன்படும் இவற்றின் உள்ளே இருக்கும் சதைப் பகுதியான ஜெல்லை எடுத்து, அதைத் தண்ணீரில் ஏழு முதல் பத்து தடவை நன்றாகக் கழுவி பின் பயன்படுத்த வேண்டும். சூரிய ஒளியுடன் கலந்து வரக்கூடிய கடுமையான வெப்பத்தை ஏற்படுத்தும் காமா மற்றும் எக்ஸ்ரே கதிர் வீச்சுகளின் பாதிப்பிலிருந்து கற்றாழை ஜெல் சருமத்தைக் காக்கும் தன்மை உடையது. அத்துடன் சருமத்தின் நிறத்தையும் மேம்படுத்தும்.கற்றாழை ஜூஸ் நிறைய நோய்களுக்கு நிவாரணம் தரக்கூடியது. தினமும் காலை வேளையில் வெறும் வயிற்றில் இந்த ஜூஸைக் குடித்துவந்தால் உடலில் உள்ள நச்சுகள் முழுமையாக வெளியேற்றப்படும். இதனால் உடலில் மெட்டபாலிசம் அதிகரித்து, உடல் எடை வேகமாகக் குறையத் தொடங்கும்.

மூலக்கோளாறால் பாதிக்கப்படுபவர்களுக்கு கற்றாழை நல்ல மருந்து. இதன் சதைப் பகுதியை நன்றாகக் கழுவி, அதனுடன் இரண்டு கைப்பிடி முருங்கைப்பூ சேர்த்து அரைத்து, அதனுடன் சிறிது வெண்ணெய் சேர்த்து, ஒரு தேக்கரண்டி அளவுக்கு தினமும் காலையில் ஒரு வாரம் வரை சாப்பிட்டுவந்தால், மூலத் தொந்தரவில் இருந்து நிவாரணம் கிடைக்கும். இதைச் சாப்பிடும்போது உப்பு, காரம் சேர்க்கக் கூடாது.கற்றாழையின் ஜெல்லை தினமும் வெண்படைகளின்மீது பூசி வந்தால் நாளடைவில் குணமாகும்.

# அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு முன்னெப்போதும் இல்லாத வகையில் சரிவு



மும்பை, டிச.4

அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு சரிவைச் சந்தித்துள்ளது. சந்தை மதிப்பின்படி, ஒரு டாலருக்கு இணையான ரூபாயின் மதிப்பு 90.11 ஆக உள்ளது. நேற்று காலை 10 மணி அளவில், ஒரு அமெரிக்க டாலர் ரூ. 90.11 ஆக இருந்தது. இந்த சரிவு முன் எப்போதும் இல்லாததது.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள வர்த்தகர்கள், "இந்த வீழ்ச்சி ஆச்சரியமல்ல. ஆனால், சரிவின் வேகம் ஏமாற்றமளித்துள்ளது. ரூபாய் சரிவுக்கு பல காரணிகள் உள்ளன.

அமெரிக்க - இந்திய வர்த்தக விவாதங்களில் நிலவும் சுணக்கம், சர்வதேச அளவில் நிலவும் நிச்சயமற்றத் தன்மை ஆகியவை காரணமாக, உலக முதலீட்டாளர்கள் இந்திய சந்தைகளில் இருந்து தங்கள் பணத்தை எடுத்ததே இதற்குக் காரணம். பெரும்பாலான முக்கிய நாணயங்களுக்கு எதிராக டாலர் தொடர்ந்து வலுபெற்றதால், முதலீட்டாளர்கள் டாலரை நோக்கித் திரும்பினர்." என தெரிவித்துள்ளனர்.

ரூபாய் சரிவு காரணமாக இறக்குமதி செலவுகள் அதிகரிக்கின்றன. குறிப்பாக, கச்சா எண்ணெய், மின்னணு மற்றும் தொழில்துறை பொருட்கள் ஆகியவற்றின் விலைகள் உயர்கின்றன. வெளிநாட்டுக் கடன்களைக் கொண்ட நிறுவனங்களுக்கு கடன் சுமை மேலும் கூடுகிறது. இதனால், சாமானிய மக்கள் மற்றும் வணிகர்கள் பாதிக்கப்படும் நிலை உள்ளது. அதேநேரத்தில், இந்த சரிவால் ஏற்றுமதியாளர்கள் சிறிது பலன் பெறுகிறார்கள்.

# 3.5 ஆண்டுகளில் பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான ரூ.1,316 கோடி சொத்துகள் மீட்பு!



பழநி, டிச.4:

கடந்த மூன்றரை ஆண்டுகளில் 467 ஆக்கிரமிப்பாளர்களிடம் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருந்த பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான ரூ.1,316 கோடி சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். தைப்பூசம், பங்குனி உத்திரம் உள்ளிட்ட திருவிழா காலங்களில் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகின்றனர். பழநி தேவஸ்தானத்துக்கு சொந்தமான நிலங்களையும், கட்டிடங்களையும் பல ஆண்டுகளாக தனியார் பலர் ஆக்கிரமித்து இருந்தனர்.

இந்தச் சொத்துகளை மீட்கும் முயற்சியில் தேவஸ்தானம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. அதன்படி, கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு 2.4 கி.மீ. தூரமுள்ள கிரிவலப்பாதையில் பக்தர்களுக்கு இடையூறாக இருந்த ஆக்கரிமப்பு கடைகள், குடியிருப்புகள், கட்டிடங்கள் அகற்றப்பட்டு ரூ.156 கோடி மதிப்பிலான 329 சொத்துகள் மீட்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, திண்டுக்கல், தேனி, கோவை, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் பல ஆண்டுகளாக ஆக்கிரமிப்பில் இருக்கும் சொத்துகளை மீட்டு வருகின்றனர். அந்த வகையில் 2022 மே 9 முதல் புதன்கிழமை (டிச.3) வரை கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஆக்கிரமிப்பில் இருந்த 137.95 ஏக்கர் நிலங்கள், 8.52 லட்சம் சதுர அடி மனைகள் மற்றும் 86 ஆயிரத்து 943 சதுர அடி கட்டிடங்கள் மொத்தம் 467 ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளது. இதன் சொத்து மதிப்பு ரூ.1,316 கோடி என பழநி கோயில் இணை ஆணையர் மாரிமுத்து தெரிவித்துள்ளார்.




# முதல்வர் முன்னிலையில் திமுகவில் இணைந்தார் அதிமுக முன்னாள் எம்எல்ஏ சின்னசாமி!



சென்னை, டிச.4:

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில், அதிமுக அமைப்புச் செயலாளரும், சிங்காநல்லூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அண்ணா தொழிற்சங்கப் பேரவை முன்னாள் செயலாளருமான ஆர். சின்னசாமி திமுகவில் இணைந்தார்.

இது குறித்து திமுக வெளியிட்ட அறிக்கையில், "தமிழக முதல்வரும், திமுக தலைவருமான மு.க.ஸ்டாலின் முன்னிலையில், இன்று (03-12-2025) காலை சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் அதிமுக அமைப்புச் செயலாளரும், சிங்காநல்லூர் தொகுதி முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், அண்ணா தொழிற்சங்கப் பேரவை முன்னாள் செயலாளருமான ஆர். சின்னசாமி திமுகவில் இணைந்தார்.

அதுபோது முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, மேற்கு மண்டலப் பொறுப்பாளரும், கரூர் மாவட்டச் செயலாளருமான வி.செந்தில்பாலாஜி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்செல்வன் ஆகியோர் உடனிருந்தனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "நிதி ஒதுக்கியும் மழைநீர் வடிகால் பணிகள் முடிக்கப்படவில்லை" - விஜய் கண்டனம்!

சென்னை, டிச.4:

மழைநீர் வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்தும், நான்கரை ஆண்டுக்கால ஆட்சியில் பணிகள் முடிக்கப்படவில்லை என தவெக தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.

டிட்வா புயல் எதிரொலியாக, சென்னை, ராணிப்பேட்டை திருவள்ளூர், செங்கல்பட்டு உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில், இது குறித்து விஜய் தனது எக்ஸ் தளத்தில், "சென்னை உள்பட தமிழ்நாட்டின் பல பகுதிகளில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வடிகால் வசதிகள் முறையாகவும் முழுமையாகவும் செய்து முடிக்கப்படாததே மக்களின் இந்தத் துயரத்திற்குக் காரணம். பொதுமக்கள் தங்கள் பாதுகாப்பைக் கவனத்தில் கொண்டு எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். மழையால் பாதிப்பிற்கு உள்ளாகும் மக்களுக்குத் தேவையான உதவிகளைப் பாதுகாப்போடு செய்திட வேண்டும் என்று கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

மழைநீர் வடிகால் வசதியை ஏற்படுத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்தும், நான்கரை ஆண்டுக்கால ஆட்சியில் பணிகள் முடிக்கப்படவில்லை. மக்கள் மீது சிறிதேனும் அக்கறையிருந்திருந்தால் கொஞ்சமாகப் பெய்த மழைக்கே இவ்வளவு தண்ணீர் தேங்கியிருக்காது. மீதமுள்ள பருவமழைக் காலத்திலாவது மக்கள் சிரமத்திற்கு உள்ளாகாத வகையிலும், அவர்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படாத வகையிலும் மழைநீர் வெளியேறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசை வலியுறுத்துகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# சென்னையில் விட்டு விட்டு வெளுக்கும் மிக கனமழை - இதுவரை அதிக மழைப் பதிவு எங்கே?











சென்னை, டிச.4:

சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு பகுதிகளில் நேற்று (டிச.3) மிக கனமழை விட்டு விட்டு வெளுத்து வாங்கி வருகிறது. காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி, அதிகபட்சமாக சென்னை எண்ணூர், செங்கல்பட்டு மாவட்டம் படூரில் தலா 15 செ.மீ மழை பதிவானது.

நேற்று (டிச.3) நீலகிரி, கோயம்புத்தூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவள்ளூர் மற்றும் சென்னை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, மதுரை, விருதுநகர், திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, சேலம், தருமபுரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், அரியலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் புதுவையிலும் கனமழை பெய்துள்ளது.

இன்று (டிச.4) தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கிருஷ்ணகிரி, தர்மபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு விவரம்: மண்டலம் 01 எண்ணூர் (சென்னை), இந்துஸ்தான் பல்கலைக்கழகம் ARG (செங்கல்பட்டு) தலா 15 சென்டிமீட்டர் மழை பதிவானது.

சேத்துப்பட்டு (திருவண்ணாமலை) 13 செ.மீ, திருமயம் (புதுக்கோட்டை), தாமரைப்பாக்கம் (திருவள்ளூர்) தலா 12 செ.மீ மழை அளவு பதிவானது.

சத்யபாமா பல்கலைக்கழகம் ARG (செங்கல்பட்டு), மண்டலம் 02 மணலி புதுநகரம் (சென்னை), VIT சென்னை AWS (செங்கல்பட்டு), திருக்கழுக்குன்றம் (செங்கல்பட்டு), திருவாரூர் (திருவாரூர்), குடிமியான்மலை (புதுக்கோட்டை), இலுப்பூர் (புதுக்கோட்டை) தலா 11 செ.மீ மழை பதிவானது.

மகாபலிபுரம் (செங்கல்பட்டு), வடகுத்து (கடலூர்), கேளம்பாக்கம் (செங்கல்பட்டு), செங்குன்றம் (திருவள்ளூர்), உளுந்தூர்பேட்டை (கள்ளக்குறிச்சி) தலா 10 செ.மீ மழை அளவு பதிவானது.

தொண்டி (ராமநாதபுரம்), பொன்னேரி (திருவள்ளூர்), திருவாரூர் AWS (திருவாரூர்), மண்டலம் 01 கத்திவாக்கம் (சென்னை), அம்பத்தூர் (Rev) (திருவள்ளூர்), பொள்ளாச்சி (கோயம்புத்தூர்), நெய்வாசல் தென்பாதி (தஞ்சாவூர்), சோழவரம் (திருவள்ளூர்), கும்மிடிப்பூண்டி (திருவள்ளூர்), பெரம்பூர் (சென்னை), பாகூர் (புதுச்சேரி) தலா 9 செ.மீ என்ற அளவில் மழை பதிவானது.

NIOT_பள்ளிக்கரணை ARG (சென்னை), ஊத்துக்கோட்டை (திருவள்ளூர்), மண்டலம் 02 D15 மணலி (சென்னை), நீடாமங்கலம் (திருவாரூர்), RSCL வல்லம் (விழுப்புரம்) தலா 8, மன்னார்குடி (திருவாரூர்), ராணிப்பேட்டை AWS (ராணிப்பேட்டை), ஆவடி (திருவள்ளூர்), செய்யார் ARG (திருவண்ணாமலை), காரைக்கால் (காரைக்கால்), DSCL எறையூர் (கள்ளக்குறிச்சி), சோழிங்கநல்லூர் (சென்னை), வில்லிவாக்கம் ARG (திருவள்ளூர்), விருதாச்சலம் (கடலூர்), SCS மில் திருவெண்ணெய்நல்லூர் (விழுப்புரம்), நெய்வேலி AWS (கடலூர்) தலா 7 செ.மீ என்ற அளவில் மழை பதிவானது.

## வானிலை எச்சரிக்கை

தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கிருஷ்ணகிரி, தர்மபுரி, தூத்துக்குடி, ராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

டிச.5-ல் தென்தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். டிச.6 முதல் டிச.9 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

# ஹேமாவதி !



ஏழு வருட தாம்பத்ய வாழ்வில் சூன்யமே மிஞ்சியிருந்தது. பதினாறு வயதினிலே பதினேழு குழந்தையம்மா; தாலாட்டு பாடு கிறேன் தாயாகவில்லையம்மா ! ஒரு திரைப்படப் பாடல் அவர்கள் வாழ்வி லும் ஒன்றிப் போயிருந்தது.

பொழுது புலர்ந்தும் புலராது போலவும் இரு ண்ட பிறகு இரவு வராதுபோலவும்எக்குத் தப்பான உணர்வு !குறை யாரிடம்...? இருவரில் யாரோ ஒருவருக்கு...அந்த ஒருவர் யார் ? முடிவு தெரியும் பட்சத்தில் தலையில் இடியே இறங்காதா..?ஆண்டவா ! வேண்டாம்விஷப்பரீட்சை. இப்படியே இருந்து விட்டுப்போகட்டும். இருவரின் ஏகோபித்த முடிவு !

அன்று ஞாயிற்றுக்கிழமை. ஏழுமணி க்கு மேல் கண் விழித்தாள் புவனா.

பக்கத்தில் அவன் புருஷன் சேகர் கட் டிலில் சாய்ந்து அமர்ந்தபடி விட்டத் தைப்பார்த்த பார்த்துக் கொண்டி ருந்தான்.

அவள் விழித்துவிட்டதை அறிந்தவன் " குட் மார்னிங் ! " என்றான். பதிலுக்கு " மார்னிங்.!" விஷ் செய்தபடி எழுந்து கொண்டாள்.

பல் விளக்கிவிட்டு ஃபிரிட்ஜைத் திறந்து பால் பாக்கெட் ஒன்றை எடுத்தவள் கொண்டுபோய் நீர் பாத்திரத்தில் போட்டாள்.பிறகு குளித்துவிட்டு வந்தாள். பால் காய்ச்சி இரண்டு டம்ளர்களில் காஃபி கலந் தாள். இரண்டையும் கைகளில் எடுத்து வந்தவள் ஒரு டம்ளரை புருஷனிடம் நீட்டினாள். பெட் காஃபி குடித்துப் பழக்கப்பட்டவன் வாங்கி குடித்தான் அவளும் காஃபி டம்ளரை காலி செய்துவிட்டு இரு டம்ளர்களையும் ஸிங்கில் கழுவி வைத்தாள். மனைவியின் மொபைல் ஒலிக்க அவன் அவளை அழைத்தான். அவளும் வந்து எடுத்தாள். பேசினாள். பேச பேச அவள்முகம் விரிவடைவதை கவனித்தான் அவன். பேசி முடித்த வள், " என்னங்க ! என் ஃபிரெண்டு தான் பேசினாள். தாம்பரத்தில ஒரு குழந்தைகள் காப்பகம் இருக்காம். அதிலேர்ந்து ஒரு குழந்தையைத் தத்து எடுத்துக்கலாமாம். ஃபோன் நம்பர் அட்ரஸ் வாட்ஸ்அப்பில் அனுப் பறாளாம்.. என்ன சொல்றீங்க ?"

" டார்லிங் ! ஏன் டென்ஷன் ஆகுறே ! இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணிப் பார்க்கலாமே !" என்றான்.

" இல்லீங்க. எழுந்து குளிச்சிட்டு தயாரா இருங்க. நாம அங்க போறோ ம். ஒரு குழந்தையை தத்தெடுத் துக்கிட்டு வர்றோம்.ம்.. கெட் அப் !"

அதற்குள் வாட்ஸ்அப்பில் டிடெயில்ஸ் வந்திருந்தது. இருவரும் தாம்பரம் புறப்பட்டுச் சென்றனர். விடுதி காப்பாளர் அவர் களை இன் முகத்துடன் வரவேற்றார்.

" ஸார்..நான்தான் கொஞ்ச நேரம் முன்னால் குழந்தை அடாப்ட் செய்யற விஷயமா உங்களுக்கு ஃபோன் பண் ணியிருந்தேன். இது என் ஹஸ்ப ண்ட் !"

உடனே சேகர் கை பற்றி குலுக்கினார் காப்பாளர். அவர் காட்டிய குழந்தை களில் இரண்டு வயது பெண் குழந் தையைத் தேர்வு செய்தாள் புவனா. அவள் புருஷன் அரை மனத்துடன் ஒத்துக் கொண்டான். ஃபார்மாலிடிஸ் முடிந்து?எழுந்து கொண்டனர்." பாப்பா ! நீ இவங்க வீட்டுக்குப் போகப் போறே. இனி இவங்கதான் உன்னோட மம்மி , டாடி ! நீ இவங்க கிட்ட சமர்த்தாஇருக்கணும். தெரிஞ்சுதா ?" தலையைச் சாய்த்து அவர்கள் இருவரையும் பார்த்தது சிரித்தது. புவனா அகமகிழ்ந்தாள். ஒரு செக் லீஃப் எடுத்து 25000/- ரூபாய் தொகை எழுதி காப்பாளரிடம் நீட்டி னாள். வாயெல்லாம் பல்லாக பெற்று க்கொண்டார். வீட்டுக்கு கூட்டி வந்து குழந்தைக்கு ஹேமாவதி என்றபெயர் வைத்தார்கள். ஹேமாவதி படு சுட்டிப்பெண் ! நாள் போகப் போக ஹேமாவதியை சேகருக்கு பிடித்துப் போயிற்று. ஹேமாவதி இருவரிடமும் நன்றாக ஒட்டிக் கொண்டாள்.

அன்று அவனருகில் வந்து நின்றாள் புவனா. ஹேமாவதி அறைக்குள் உறங்கி க்கொண்டிருந்தாள். பேப்பர் படித்துக் கொண்டிருந்த சேகர் அவள் வந்து நின்ற தோரணையைப் பார்த்து வியந்தான். முகத்தில் பூரிப்பு. விழிக ளில் சந்தோ ஷம் கொப்பளித்துக் கொண்டிருந்தது. குனிந்து அவன் காதில் தனக்கு நாள் தள்ளிப் போயிருப்பதாக வெட்கத் துடன் சொல்ல அவன் துள்ளியெ ழுந்து அவளை அணைத்துக் கொண் டான் சேகர். " டார்லிங் ! நமக்குதான் குழந்தை பிறக்கப் போகிறதே. ஹேமாவ தியைக் கொண்டுபோய் பழைபடி காப்பகத்தில் விட்டுடலாமா ?"

" நோ.." இரைந்தவள் சட்டென தன் குர லை தாழ்த்திக்கொண்டு தொடர் ந்தாள்." ஹேமாவதி வந்த ராசி நமக்கு குழந்தை பிறக்கப் போறது. ஹேமாவ திதான் நமக்கு மூத்தவள். நியாபகம் வச்சிக்கோங்க. தயவுசெய்து அவளை த் திருப்பியனுப்பும் எண்ணத்தைக் கைவிடுங்க." இரு கரம் குவித்து வணங்கியபடி கெஞ்சினாள்.

" ஓ.கே. டியர் ! ஹேமாவதி நம் மூத்த மகள். அடுத்து பிறக்கப்போறது இளையவள் அல்லது இளையவன் !" சொல்லி அவன் சிரிக்க அவளுள் சிரிப்பில் கலந்துகொண்டாள்.



- வி.கே.லக்ஷ்மிநாராயணன்
ராமகிருஷ்ணா நகர்
போரூர், சென்னை- 600 116

# அழகுப்பொய்.!



அதிகாலை இளங்குளிர் காற்று தலைகோதி காதோரம் குறுகுறுப்பேற்ற.. மிதமான வேகத்தில் வந்து கொண்டிருந்த மதுமிதா...ஏதோ நினைவு தெளிந்தவளாக யூடர்ன் அடித்து வண்டியைத் திருப்பினாள். வழக்கமாக பூ..பழங்கள் வாங்கும் வண்டிப்பேட்டை சந்து .சாலையோர பூக்கடை அழகம்மாக்கிழவி.. பழக்கடை முஸ்தபா பாய் யாரையும் காணவில்லை.. அவர்கள் கடைபோட்டுக்கொள்ள அனுமதித்திருந்த வணிக வளாகத்தினரே கடை திறக்க வழியின்றி...முழங்கால் அளவு மழைநீரால் நிரம்பி இருந்தது வண்டிப்பேட்டை வீதி...வலுவிழந்த புயல் ஆக்ரோஷ வன்மையை நீர்திவலைகளாய் கொட்டித் தீர்த்து இற்றுப்போயிருந்தது. யோசனையோடு நின்றவளை.. எதிர்புற வீட்டு மாடிப்படிகளிலிருந்து கூவி அழைத்து.. சத்தமாக சொன்னாள்.. பூக்காரம்மா.."பாப்போ... ரெண்டுநாளா அடாத மழ.. தண்ணீ வடிஞ்ச பாடில்ல... நகராட்சி சாமிகளுக்கெல்லாம் வரம் கேட்டுக் கூவிக் கூவி ஓஞ்சுட்டோம்... ரெண்டு நாளா விக்காம பூ அழுகி நட்டம்..கந்து கட்டாம வேற நாராச ஏச்சு வாங்கி...பட்டினி ஒருபக்கம்னா... வம்பாடு ஒரு பக்கம்மா...நாளைக்கு எப்புடியும் தண்ணீ வடிஞ்சிடும் கண்ணு...மறக்காம வந்து எங்கிட்ட பூவும்..பாய்கிட்ட பழமும் வாங்கிக்கடா.. கண்ணு.!". மதுமிதாவுக்கு ஏதோ உடைபடும் நெகிழ்வு. கைப்பையை திறந்து கொஞ்சம் பணம் தர முயன்றபோது.. "வேணாம்டா கண்ணு...வானம் வெளிவாங்கி பழையமாதிரி எல்லோரும் பாடுபட்டு பொழைக்கனும்னு உஞ்சாமிகிட்ட வேண்டிக்க தாயி..அதுபோதும்".. "என மறுத்துவிட்டாள் கிழவி. மதுமிதாவிற்கு மின்னலென ஒரு யோசனை தோன்றியது.தீர்மானத்தோடு வண்டியை கிளப்பிக்கொண்டு நகர்ந்தாள். அவள் யூடர்ட் அடித்து திரும்பிய இடத்தில் ஒரு புதிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டிட வேலை நடந்து வருகிறது..ஒருவார கனமழையால் வேலை நிறுத்தப்பட்டிருக்க... பசித்த வயிற்றோடும்.. சோர்ந்த கண்களோடும் வடமாநிலத் தொழிலாளர் குடும்பங்கள் அங்கே இருப்பதை பார்த்திருந்தாள். வண்டியை அங்கே நிறுத்திய உடனேயே..ஒவ்வொருவராக எழுந்து வந்து தள்ளி நின்று தங்களுக்குள் பார்த்துக் கொண்டனர்.இவள் உதவ வந்தவளா.?ஏதேனும் உபத்திரம் கொடுப்பவளா.?என்கிற பரிதவிப்பை கண்டுகொண்டவள்.. "தம்பிகளா...நான் இங்க ஐடி கம்பெனியில வேலை பார்க்கறேன்...இரவு பணி முடிஞ்சி வரும்போது வண்டிப்பேட்டை முக்குல.. பள்ளத்துல வண்டிச் சக்கரம் சிக்கி தடுமாறி விழுந்துட்டேன். அதுல என்னோட ஒத்தைக்காது கால் பவுன் கம்மல் மட்டும் கழன்டு மழைத் தண்ணீயில விழுந்துட்டுது.. தண்ணீய வடிகட்டி எடுத்துத்தர முடியுமா..உங்களால.. இருபத்தஞ்சாயிரம் ஆச்சே.. போனா போகுதுன்னு விட்டுட முடியுமா.?"... வேலையில்லாமல் முடங்கிக்கிடக்கும் சிடுக்கை களையும் விதமாக "சரியக்கா...அங்க இருபதடி தூரம் வாய்க்கால் கிழிச்சி சாக்கடை கால்வாய்ல தண்ணீய வடிக்கனும்... டின் போட்டு அள்ளி ஊத்தனும்..ரெண்டாயிரம் கொடுத்துடுங்கக்கா.. கிட்ட நின்னு பொருள யாரும் எடுத்துடாம பார்த்துக்குங்க.. லோக்கல் ஆளுக எங்களுகிட்ட சண்டைக்கு வராம நீங்கதான் பார்த்து சமாளிச்சுக்கனும்.." மூச்சுவிடாமல் பேசிய முனிஷ் தலைச் சொறிந்தான். நான்கு ஐநூறு ரூபாய் தாள்களையும் ஒரு பக்க கம்மலையும் அவனிடம் தந்தவள்.. தனியாக பெண்களிடம் இரண்டு ஐநூறுரூபாய் தாள்களை கொடுத்து "வேலைய தொடங்குறதுக்கு முன்னாடி புள்ளைகளுக்கு ஏதாவது சாப்பிட வாங்கிக்கொடுங்கம்மா.. பாத்து பத்திரமா இருங்க.. நீங்க வேலைய பார்த்துகிட்டே இருங்க..தண்ணீ வடிஞ்சு நகையைத் தேடுற நேரம் வந்திடுறேன்..நேத்து ஆறுமணிக்கு வீட்லயிருந்து கிளம்பினேன்.வீட்ல போட்டது போட்டபடியே கிடக்கும்... வர்றேன்பா.." உற்சாகமாக வண்டியை கிளப்பிக்கொண்டு போனாள் மதுமிதா.இன்னும் இரண்டு ..மூன்று மணி நேரத்தில் வண்டிப்பேட்டை சந்தில் மழைநீர் வடிக்கப்பட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்ய.. பழக்கடை முஸ்தபா பாய்.. பூக்காரம்மா உள்ளிட்ட நடைபாதை வியாபாரிகள்.. கடை விரித்து விடுவார்கள்.. கந்து வசூல்காரர்களின் ஏச்சுப்பேச்சுகள் கலகலப்பான உரையாடல்களாய் வட்டிபோட்டு எர்ந்திருக்கும்... தினக்கூலி வடமாநில தொழிலாளர்கள் சப்பாத்தியும்..சால்னாவுமாக குடும்பத்தோடு உணவருந்தி மகிழ்ந்திருப்பார்கள். ஆனால் மதுமிதாவின் தோடு மட்டும் கிடைக்கப் போவதில்லை. ஏனெனில் அங்கே தோடே தொலையவில்லை.. மற்றொரு தோட்டோடு காத்திருக்கும் முனீஷூக்கும் அது தெரிய நியாயமில்லை. இவ்வளவு ஏன் அது தங்க தோடே இல்லை.மனிதம் வளர்க்க மகிழ்ச்சி துளிர்க்க அவதாரமெடுத்த சிறு துரும்பு அவ்வளவே.!

-அரும்பூர்.க.குமாரகுரு,
மயிலாடுதுறை*

# Boomer to Gen Z

பாகம் 8



வி.பிரபாவதி
மடிப்பாக்கம்.

ஸ்ரீஹரி மாலதியைப் பார்த்த பார்வையில் அவள் துடித்துப் போனாள்.

"என்ன நடந்தது ஹரி?" அம்மா கேட்டதும் ஏதோ சொல்ல எத்தனித்த மாலதியின் வாயைப் பொத்தச் சொன்னான்.

"நீ நெனச்சது சரிமா. எவனோடயோ ஓட இருந்தவள நா இழுத்துண்டு வநதுருக்கேன் தெரியுமா? பஸ்ஸூல ஏறினவ ஸ்கூல் ஸ்டாப்புல எறங்கல. தலையே சுத்திடுத்து. சமாளிச்சுண்டு சைக்கிள வெரட்டிண்டு வந்தா ... கடவுளே அத எப்படி சொல்வேன்?" ஸ்ரீஹரி புலம்பித் தள்ளினான்.

உக்கிரமாக ஒரு பார்வை பார்த்த கோமதி தலையில் ஒரு தட்டுத் தட்டி மாலதியைத் தன் பக்கம் திருப்பினாள்.

"எவனோட இளிச்சிண்டுருந்த? எங்க எப்பிடிப் போகலாம்னு உத்தேசம்?" என்று கேட்டாள்.

மாலதிக்கு இன்னமும் எல்லாமே மாயையாகத்தான் தெரிந்தது.

"இல்லமா நேத்திக்கு வளர்மதி அண்ணன் சண்முகம் கொடுத்ததா ஒரு பேப்பரக் கொடுத்தா. நா அதப் பிரிச்சுப் பாக்கல".

"இன்னிக்குக் காத்தாலப் பாத்தேன். அதுல மாணிக்கம்னு ஒருத்தன் என்னப் புடிச்சிருக்குன்னு எழுதியிருந்தான்".

"அவன் சொன்ன எடத்துக்குப் போனேன். அதுக்குள்ள அண்ணா வந்து" சொல்லி முடிப்பதற்குள் கன்னத்தில் ஒரு அறை விழுந்தது.

"நிறுத்துமா, எதுக்கு அடிக்கிற? நா என்ன தப்பு பண்ணேன்? அவன்கிட்ட சொல்லிப் புரியவைக்கலாம்னு நெனச்சேன்".

"புரிய வைக்கறாளாம் பெரிய மனுஷி, பேச்சப் பாரு" என்ற கோமளம், எங்ககிட்ட சொல்லிருக்கணும், அதவிட்டுட்டு பனை மரத்தடில என்னடி வேலை ஒனக்கு?"

"இல்லம்மா, தப்புத்தாம்மா, எனக்கு எதுவும் புரிலமா" என்றாள்.

"ஹரி, இவ இங்கயே இருக்கட்டும். நீ போய் வயக்காட்டுல தாத்தாவக் கூட்டிண்டு வா" என்றாள் கோமளம்.

பஞ்சு ஐயர் வந்து கேள்விகள் கேட்டு திட்டி



மெரட்டி ஒரு வழியாய் மாலதி வெளியே வந்தாள். அதற்குள் கோமளம் எல்லோருக்கும் காபி கலந்து எடுத்து வந்தாள். வீட்டில் யாருக்கும் எதுவும் புரியவில்லை. தாத்தா, கோமளம் மற்றும் ஹரி இந்த விஷயம் பற்றி மூச்சு விடுவதாகக் கூட இல்லை. நெருடலாக இருந்தாலும் கல்யாணிக்கு தலையும் வாலும் புரியவில்லை. பர்வதம் தன் காதில் விழாதவரை அதைப்பற்றி சிந்திக்க மாட்டாள். அவள் சுபாவம்.

அந்த மாணிக்கம் யாரு என்ன என்று தெரிந்து கொண்ட பெரியவர் என்ன செய்யவேண்டும் என்ற முடிவும் எடுத்திருந்தார். இன்னும் மூன்று மாதங்கள் பரீட்சைக்கு இருக்கும் நிலையில் மாலதி பள்ளிக்கு செல்வது கேள்விக்குரியானது.

"படிப்பும் வேண்டாம், ஒன்னும் வேண்டாம். படிக்க அனுப்பிச்சா பழிய சொமந்துண்டு வருவா போல இருக்கு" என்று மாமனாரிடம் சொல்லிப் புலம்பினாள் கோமளா.

"இருக்கட்டும்மா, இன்னும் ரெண்டு மாசம். நா யோசிக்கிறேன்" என்றதும் ஏதோ ஒரு விடிவு காலம் பொறக்கும் என்ற நினைப்பில் தாயும் மகளும் அவரவர் பாணியில் யூகித்தனர்.

இருப்பினும் கோமளத்திற்கு ஒரு சந்தேகம். பின் எதற்கு தற்போதெல்லாம் ஏதோ சிந்தனையிலும், அலங்காரம் செய்துகொள்வதில் அதிக கவனமும் செலுத்தினாள்? கேள்விக் குறியாகவே இருந்தது.

எதற்கும் ஒரு கண், இல்லை இல்லை இரண்டு கண்ணும் வைக்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

ஒருவாரம் அமளி துமளியாய் இருந்தது தற்போது நார்மலுக்கு வந்திருந்தது. இருப்பினும் மாலதிக்கு உள்ளூர இந்த வளர்மதி சும்மா இருக்க மாட்டாளே! அவ அண்ணன் ஒரு பொறுக்கியாயிற்றே என்று கவலை இருந்தது.

ஸ்ரீஹரியிடம் மெல்லப் பேசினாள். தன் மனதில் எந்த சலனமும் இல்லையென்றும், அந்தச் சண்முகம் ஏதேனும் செய்வான் என்று சொன்னாள்.

பாக்கியத்தின் துடைப்பக்கட்டையைப் பார்த்தபின் சண்முகம் ஆடி அடங்கிப் போயிருந்தான்.

ஒரு மாதம் கழித்து ஒரு பியிடி பிரிடில் வளர்மதி நடந்ததைச் சொல்ல இருவருமே சிரித்தனர்.

அவரவர் படிப்பு பரீட்சை என்று நாட்கள் நகர்ந்தன. வீட்டில் மட்டும் வாசு, சுந்தரிக்கு ஒன்றும் புரியவில்லை.

கோமளம் கொஞ்ச கொஞ்சமாக எதார்த்தத்திற்கு வந்தாள்.

தொடரும்...

# ஷஷ்டி

கந்தசஷ்டி தினம் முதல் சூரசம்ஹாரம் வரை மிக எளிமையான சைவ உணவினை, குறைந்த அளவில் உட்கொண்டு எப்போதும் முருகனின் சிந்தனையிலேயே விரதம் இருங்கள். சூரசம்ஹார தினத்தன்று அதிகாலையில் எழுந்து நீராடிவிட்டு, அவரவர் வழக்கப்படி நெற்றிக்கு விபூதி, சந்தனம், குங்குமம் இட்டுக்கொள்ளுங்கள். பூஜை அறையில் வழக்கமான இடத்தில் திருவிளக்கினை ஏற்றி, குலதெய்வத்தை மனதார கும்பிடுங்கள்.

பிறகு, சஷ்டி விரதம் இருந்ததன் பலன் கிட்ட அருள வேண்டும் என்று பிள்ளையாரிடம் மனதார வேண்டுங்கள். அடுத்து, உங்கள் வீட்டில் உள்ள முருகன் படம் அல்லது சிறிய முருகன் விக்ரகத்தினை எடுத்து கைகளில் வைத்துக்கொண்டு ஆறுமுகனை அகம் ஒன்றிக் கும்பிட்டு அன்போடு எழுந்தருள வேண்டுங்கள். பின் உங்கள் வசதிக்கு ஏற்றபடி சந்தனம், மஞ்சள், குங்குமம், ஜவ்வாது போன்றவற்றால் முருகனின் படம் அல்லது விக்ரகத்திற்கு பொட்டு வைத்து, பூப் போட்டு அலங்கரியுங்கள். பூஜைக்கு உரிய இடத்தில் கோலமிட்டு அதன்மீது விக்ரகம் அல்லது படத்தினை வைத்து, தீபம் ஒன்றினை ஏற்றுங்கள். ஊதுபத்தி, சாம்பிராணி போன்றவற்றை புகையச் செய்து நறுமணம் கமழச் செய்யுங்கள். மனம் முழுவதும் அந்த மயில்வாகனனையே நினைத்தபடி கந்தசஷ்டி கவசம், கந்தகுரு கவசம், கந்தர் அனுபூதி, சுப்ரமண்ய புஜங்கம் போன்ற உங்களுக்குத் தெரிந்த துதிகளைச் சொல்லுங்கள். அல்லது கேளுங்கள். ஏதும் இயலாதவர்கள் கந்தா சரணம், முருகா சரணம், கார்த்திகை பாலா சரணம் என்று உங்களுக்குத் தெரிந்தபடி சரணங்களைச் சொல்லுங்கள். நிறைவாக தீப ஆராதனை காட்டியபின் இயன்ற நிவேதனம் செய்யுங்கள். பாலும், பழமும் இருந்தாலும் போதும். எளியோர்க்கும் எளியோனான கந்தக் கடவுள் அன்போடு அளிப்பதை ஏற்றருள்வான். ஆனால் முழுமனதோடு செய்வது முக்கியம். அன்று மாலை, பக்கத்திலுள்ள முருகன் கோயிலுக்குப் போய் தரிசனம் செய்து விரதத்தினை நிறைவு செய்யுங்கள். வேலவன் அருளால் மணப்பேறு, மகப்பேறு, நல்வாழ்வு, ஆரோக்யம், ஆயுள், புகழ், செல்வம் என்று நீங்கள் வேண்டிய யாவும் நிச்சயம் கைகூடும். நிம்மதி, சந்தோஷம், உற்சாகம் வாழ்வில் நிறையும்.

**சஷ்டியில் ஷண்முகன் தரிசனம் !**

ஆறு என்ற எண், முருகப்பெருமானுடன் மிகவும் தொடர்புடையது. அவனது திருமுகங்கள் ஆறு, கார்த்திகை மாதர் அறுவரால் வளர்க்கப்பட்டவன்; அவனது மந்திரம் ஆறெழுத்து நம: குமாராய அல்லது சரவண பவ; அவனது இருப்பிடம் அறுபடை வீடுகள், அவனுக்குரிய விரத நாட்களில் சஷ்டி விரதம், மஹா ஸ்கந்த சஷ்டியின் ஆறாம் நாள் சூரசம்ஹாரம் என இப்படியாகப் பல விஷயங்கள் ஆறுமுகனுடன் தொடர்புடையன. சஷ்டி என்பது வளர்பிறை அல்லது தேய்பிறையின் ஆறாம் நாள். இதற்கு சஷ்டி திதி என்று பெயர். இத்திதிக்கு நாயகனாகவும், இத்திதியைக் குறித்த விரதத்துக்கு முக்கிய தெய்வமாகவும் விளங்குபவன் குகப் பெருமான். சுப்ரமண்யருடைய மாலா மந்திரத்தில், சஷ்டி ப்ரியாய என்னும் மந்திரம் இடம் பெறுகிறது. சஷ்டி எனும் திதியில் விருப்பமுள்ளவன் என்றும், சஷ்டிதேவியை விரும்புபவன் என்றும் இதற்குப் பொருள். ஒரு நாளைக்கு உரிய ஆறுகால வழிபாடுகளுள் ஆறாவதாக விளங்குவது அர்த்தஜாம பூஜையாகும். பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத் தலம் சிதம்பரம், அங்கு உஷத் காலத்தில் பெருமானின் கலைகள் எல்லாம் எல்லாத் தலங்களுக்கும் சென்று தெய்வப் பொலிவூட்டுகின்றன என்றும், அர்த்தஜாம காலத்தில் ஆயிரம் கலைகளும் பெருமானிடம் ஒடுங்குகின்றன என்றும், எனவே எல்லாத் தலங்களையும் சென்று தரிசிக்கும் புண்ணியத்தை, சிதம்பரத்தில் அர்த்தஜாமத்தில் வழிபடுவதால் பெற முடியும் என்று சிதம்பர மஹாத்மியம் குறிப்பிடப்படுகிறது. சஷ்டிபதி என்றால் இந்த வேளையில் (அர்த்தஜாமத்தில்) செய்யப்பெறும் வழிபாட்டில் மிகவும் விருப்பம் கொள்பவன் என்றும் பொருள். திருவிடைக்கழி திருத்தலத்தில், குரா மரத்தடியில் முருகன் பூஜித்த பத்ரலிங்கத்துக்கு, தினமும் அர்த்தஜாமத்தில் முதலில் பூஜை நடைபெற்று, பின்னரே, மூலஸ்தானத்தில் வழிபாடு செய்வர்.

**சரவணபவ தத்துவம்**

சேனானீனாம் அஹம் ஸ்கந்த: படைத்தலைவர்களுள் நான் ஸ்கந்தன் என்றார் கண்ணன் கீதையில். சூரபத்மாதியர், சிங்கமுகாசுரன், தாரகாசுரன், கிரௌஞ்சாசுரன் ஆகியோர் பரம சிவபக்தர்களே, அவர்கள் சாகாவரம் வேண்டினர். அந்த வரம் கிடைக்காமல் போகவே சிவனின் மறு அவதாரத்தால் அழிவை வேண்டினர். அது கிடைத்தது. சிவன் தங்களை அழிக்க மாட்டான் என நம்பி, அகங்காரம் மேலிட, அவர்கள் தேவர்கள் அனைவரையும் பணியாளர்களாக்கினர். பிரம்மா, விஷ்ணு முதல், யாவரும் மோன நிலையிலிருந்த சிவபெருமானை வேண்டினர், அவரும் இசைந்து பார்வதியை பங்குனி உத்திரத்தன்று மணம் புரிந்தார். சூரபத்மாதியரின் அட்டுழியத்தை அடக்க, சிவமறு அவதாரம் வேண்ட, சிவன் தமது ஐந்து முகங்களுடன் அதோமுகத்தினின்றும் ஜோதியை எழுப்பி, வாயுவையும் அக்னியையும் அதை ஏந்தி கங்கையில் இடச் செய்தார். கங்கை, சரவணப் பொய்கையில் 6 தாமரைகளில் இட்டாள். அங்கு 6 ஜோதியும் 6 குழந்தைகளாக மாறின. அவர்கள் கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டனர். அதனால் முருகன், காங்கேயன், சரவணபவன், கார்த்திகேயன், என்றும் துதிக்கப்படுகிறான். உமை, குழந்தைகளை அழைத்து அணைக்க ஆறு குழந்தைகள், ஆறுமுகம், பன்னிருகை, இருகால், ஒருடலாகக் கந்தனாக (ஸ்கந்தன் = ஒன்று சேர்ந்தவன்) மாறினான். கந்தன் உதித்த தினம் வைகாசி மாத விசாக பௌர்ணமி. அதனால் அவன் பெயர் விசாகன். சிவஜோதியின் மறுஉருவம். வேதசொரூபன் அதனால் சுப்ரமண்யன், என்றும் இளையவன் அதனால் குமாரன், மிக அழகானவன் ஆகவே முருகன் (முருக என்றால் அழகு).

மு முகுந்தன் என்கிற விஷ்ணு
ரு ருத்ரன் என்கிற சிவன்
க கமலத்தில் உதித்த பிரம்மன்.

ஆக, முருகன் மும்மூர்த்திகள் செய்யும் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களையும் செய்து மக்களுக்கு அருளும் கருணை வடிவமானவன். காஞ்சி குமரப் பெருமானால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டு கச்சியப்ப சிவாச்சாரியார் எழுதிய கந்தபுராணத்தில் முருகன் அவதாரத்தை இவ்வாறு கூறுவார்:

அருவமும் உருவமாகி
அநாதியாய் பலவாய், ஒன்றாய்ப்
பிரம்மமாய் நின்ற ஜோதிப்
பிழம்பதோர் மேனியாகிக்
கருணைகூர் முகங்கள் ஆறும்
கரங்கள் பன்னிரண்டும் கொண்டே
ஒரு திருமுருகன் வந்து ஆங்கு
உதித்தனன் உ‘லகம் உய்ய!

இந்தப் பாடலை



உள்ளன்புடன் ஓதினால் குழந்தைப் பேறு பெறலாம். நாரதர் பழம் ஒன்றை சிவனிடம் வழங்க கணபதி சிவபார்வதியை வலம் வந்து பழத்தைப் பெற, கோபம் கொண்ட பாலன் தண்டம், கௌபீனம் அணிந்து பழனி ஆண்டியானான். தலம் பழனி (3-ஆம் படை வீடு) கந்தனைப் புறக்கணித்து சிவனைத் தரிசிக்க பிரம்மா செல்ல, பிரணவத்திற்குப் பொருள் அறியாமல் அவர் சிறைப்பட, சிவனுக்கு பிரணவப் பொருள் உரைத்ததால் கந்தன், சிவகுருநாதன், சுவாமிநாதன் என்று போற்றப்பட்டான். இது நடந்த தினம் ஆடிப்பௌர்ணமி, குருபௌர்ணமி என்றும் கூறுவர். (தலம் சுவாமிமலை 4-ஆம் படைவீடு). குருவருள் பெற உகந்த தினம். முருகன் தம் அவதாரக் காரணம் நிறைவேற குருவும் நாரதரும் புகன்றிட, திருச்செந்தூரில் தேவர்களுக்கெல்லாம் சேனாதிபதியாகப் பதவியேற்றார். வீரபாஹுவைத் தூது அனுப்பினார். முடிவில் தாரகாசுரன், கிரௌஞ்சாசுரன், சூரபத்மாதியரையும் அழித்து வெற்றியை நிலைநாட்டினார். கந்தனின் ஆயுதம் பராசக்தியின் மறு உருவமான வேல். சூரபத்மன் கடைசியில் மாமரமாக நின்றான். அதை வேலால் துளைக்க. ஒரு பாதி மயிலாகி வாகனம் ஆனான். மறு பாதி கொடியில் சேவலாக மாறினான். ராவண வதம், கம்ஸ வதம் என்பர், ஆனால் இங்கு மட்டும் சூரசம்ஹாரம் என்பர். வேறு எந்த தெய்வ அவதாரத்திலும் நிகழாத சம்பவம், அது தான் கந்தன் கருணை. இது நடந்த தினம் கந்த சஷ்டி தீபாவளி அமாவாசைக்குப் பிறகு வரும் ஆறாவது நாள். இது நடந்த இடம் திருச்செந்தூர் ஜயந்திபுரம் (2 ஆம் படை வீடு) வெற்றி தினம் கந்த சஷ்டி தினம். மாத சுக்ல சஷ்டியும் கந்தனுக்கு ஒரு விசேஷ தினமாக அமைகிறது. சஷ்டியில் விரதம் இருந்தால் சகல நலன்களும் பெறலாம். தேவேந்திரன் கந்தனுக்குத் தனது பெண் தெய்வயானையை மணம் புரிவித்தான். சப்தமி தினம் இது நடந்த இடம் திருப்பரங்குன்றம் (முதல் படைவீடு) (திருப்பரங்குன்றத்தில் தெய்வயானை கல்யாணம் பங்குனி உத்திரம் அன்றே.) வேடன் நம்பிராஜன் மகளாக வள்ளி (மாதவன் மகாலஷ்மி நோக்கால் தைப்பூசத்தில் உதித்தவள்) வள்ளி மலையில் வளர்க்கப்பட்டாள். நாரதர் நினைவூட்ட, கந்தன், வேடனாக, வேங்கை மரமாக, கிழவனாக வள்ளியை நாடி, சாடி, தேனும் தினையும் உண்டு, பணிந்து சுயதரிசனம் தந்து, போரும் புரிந்து, வள்ளியை மணந்து கொண்டான். இது நடந்த இடம் வள்ளிமலையில். திருத்தணிகையில் (5-ம் படைவீடு), வள்ளித் திருமணம், தைப்பூசம், மாசி பூசம், பங்குனி உத்திரத் தினங்களில் நடக்கின்றன. சிறுவனாக தோன்றி, ஔவைக்குச் சுட்ட பழத்தைக் கொடுத்து, பாட வைத்துத் தரிசனம் தந்தான் பழமுதிர்ச் சோலையில் (6-ஆம் படைவீடு).

**ஆறுமுகமான சண்முக தத்துவம் என்ன ?**

ஒரு முகம் மஹாவிஷ்ணுவுக்கு,
இரு முகம் அக்னிக்கு,
மூன்று முகம் தத்தாத்ரேயருக்கு,
நான்முகம் பிரம்மனுக்கு,
ஐந்து முகம் சிவனுக்கு, அனுமனுக்கு, காயத்ரி தேவிக்கு, ஹேரம்ப கணபதிக்கு
ஆறு முகம் கந்தனுக்கு.

நக்கீரர் தமது **திருமுருகாற்றுப்படையில் இவ்வாறு கூறுவார் :**

1. உலகைப் பிரகாசிக்கச் செய்ய ஒரு முகம்,
2. பக்தர்களுக்கு அருள ஒரு முகம்,
3. வேள்விகளைக் காக்க ஒரு முகம்,
4. உபதேசம் புரிய ஒரு முகம்,
5. தீயோரை அழிக்க ஒரு முகம்,
6. பிரபஞ்ச நன்மைக்காக வள்ளியுடன் குலவ ஒரு முகம்.

**குமரகுருபரர் தமது கந்தன் வரலாறான கந்தர் கலிவெண்பாவில் இவ்வாறு கூறுவார்:**

(ஊமை பக்தருக்கு திருச்செந்தூர் முருகன் அடி எடுத்துக் கொடுக்கப் பாடியது.)

சத்ரு சம்ஹாரத்திற்கு ஒரு முகம்
முக்தி அளிக்க ஒரு முகம்
ஞானம் அருள ஒரு முகம்
அக்ஞானம் அழிக்க ஒரு முகம்
சக்தியுடன் இணைந்து அருள ஒரு முகம்
பக்தர்களுக்கு அருள ஒரு முகம்.

**உயிரை மாய்த்துக் கொள்ள, கோபுரத்தினிற்று விழுந்தவரை ஏற்று, முத்தைத் தரு……. என்று பதம் எடுத்துக் கொடுத்த முருகன் அருளால் அருணகிரிநாதர் இவ்வாறு பாடுவார்:**

ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்கு முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!**

**திருச்செந்தூர் புராணம் ஷண்முகனை இவ்வாறு கூறுவார்:**

ஷடரிம் ஷட்விகாரம் ஷட்கோசம் ஷட்ரஸம் தத்
ஷட் ஸூத்ரம் ஷண்மதம் ஷட்வேதாங்கம் ஷண்முகம் பஜே

ஷடரிம் காமம், குரோதம், லோபம், மதம், மாத்சர்யம், மோகம் என்ற ஆறு அவகுணங்களை போக்குபவன் கந்தன். ஷட்விகாரம் உண்டாக்குதல், இருத்தல், வளர்த்தல், மாற்றமடைதல், குறைதல், அழித்தல், என்ற ஆறு செயல்கள் அற்றவன். ஷட்கோசம் அன்னமய, பிராணமய, மனோமய, விஞ்ஞானமய, ஆனந்தமய, அதீதமய என்ற ஆறு நிலைகளில் இருப்பவன். ஷட்ரசம் இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, உறைப்பு, துவர்ப்பு, கார்ப்பு, என்ற ஆறு வகை சுவைகளாக இருப்பவன். ஷட்ஸூத்ரம் ஸாங்க்யம், வைசேஷிகம், யோகம், ந்யாயம், மீமாம்ஸம், வேதாந்தம் என்ற ஆறு சாத்திரங்களாக இருப்பவன். ஷண்மதம் காணாபத்யம், கௌமாரம், சைவம், சாக்தம், வைணவம், சௌரம் என்ற ஆறு மத தத்துவமாக இருப்பவன். ஆக, ஷண்முகனை வணங்குதல் ஷண்மத ஈடுபாட்டுக்குச் சமம். என்னே ஷண்முகப் பெருமை ! ஷட்வேதாங்கம் சிக்ஷ, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தம் என்ற ஆறு வேத அங்கங்களாக இருப்பவன். ஷண்முகம் ஈசானம், தத்புருஷம், வாமதேவம், அகோரம், ஸத்யோஜாதம் என்ற சிவனின் ஐந்து முகங்களுடனும் அதோ முகத்துடன் கூடியும் உள்ளவன்.

**ஸரவணபவ என்பது ஷடாக்ஷர மஹாமந்திரம் (6 எழுத்துகள்). இதன் மகிமை என்ன ?**

ஸ லக்ஷ்மிகடாக்ஷம்
ர ஸரஸ்வதி கடாக்ஷம்
வ போகம் மோக்ஷம்
ண சத்ருஜயம்
ப ம்ருத்யுஜயம்
வ நோயற்ற வாழ்வு

ஆக, பிரணவ ஷடாக்ஷரம் கூறி இவ்வாறு பயன்களும் பெறலாம். நம: சிவாய என்பது பஞ்சாக்ஷரம். ஓம் நம: சிவாய என்பது ஷடாக்ஷரம் நம: குமாராய என்பதும் ஷடாக்ஷரம் ஓம் நம: கார்த்தகேயாய என்பது குஹ அஷ்டாக்ஷரம் (8 எழுத்து) ஓம் நம; குருகுஹாய என்பதும் குஹ அஷ்டாக்ஷரம். ஶ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் முத்திரை அடி குருகுஹ. இதய குகையில் அமர்ந்து அஞ்ஞானம் அழித்து ஞானம் அளிக்கும் வள்ளல் குகன்.

**ஓம் நம: ஸரவணபவாய என்பது குஹ தசாக்ஷரம் (10 எழுத்து).**

ஓம் நம ஸரவணபவ நம ஓம் என்பது குஹ த்வாதசாக்ஷரம் (12 எழுத்து). வடமொழியில் பீஜாக்ஷர மந்திரத்தில் அக்ஷரம் இரண்டு தடவை வரக் கூடாது என்பர். ஆகவே வடமொழியில் சரவணபவ என்பது ஷடாக்ஷரம். ஆறுபடை வீடுகளும் ஆறு குண்டலினிகளாக விளங்குகின்றன.

திருப்பரங்குன்றம் மூலாதாரம்
திருச்செந்தூர் ஸ்வாதிஷ்டானம்
பழனி மணிபூரகம்
சுவாமிமலை அனாஹதம்
திருத்தணிகை விசுத்தி
பழமுதிர்சோலை ஆக்ஞை.

ஆக ஆறுமுகனான திருமுருகனை, விசாக, கார்த்திகை, பௌர்ணமி நாட்களில் ஸ்கந்த ஷஷ்டியில் துதித்து வழிபட்டு குஹானந்த அனுபூதி வாரிதியில் மூழ்குவோம்.

# தினம் ஒரு தலைவர்கள்

# மறை. திருநாவுக்கரசு வரலாறு

மறை. திருநாவுக்கரசு (12 ஆகத்து 1907 - 1 செப்டம்பர் 1983) இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் இந்திய விடுதலைப் போராட்டத்திலும் சிறை சென்றவர். தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரின் மகன். அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக எழுதி வெளியிட்டவர்.

இளமையும் கல்வியும்
பள்ளியில் படிக்கும் காலத்தில் இளைப்பிருமல் நோய் திருநாவுக்கரசைத் தாக்கியது. அவருடைய தந்தை மறைமலை அடிகள் அறிதுயில் மருத்துவம் மூலம் அந்தத் தீராத நோயைக் குணப்படுத்தினார். தமக்குப்பிறகு தம் புகழை நிலை நிறுத்துவார் என்று அடிகள் நம்பினார். தந்தையின் விருப்பமும் எண்ணமும் நிறைவேறும் வகையில் மறை திருநாவுக்கரசு திருவையாற்றில் தமிழ்க் கல்லூரியில் படித்து புலவர் பட்டம் பெற்றார். (19261931).

பணிகள்
சென்னை நுங்கம்பாக்கம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் 1932 முதல் 1938 வரை தமிழாசிரியராகவும், நெல்லைச் சீமையில் குலசேகரன் பட்டினம் திருவள்ளுவர் அரசு உயர்நிலைப் பள்ளியில் 1949 முதல் 1952 வரை தமிழாசிரியராகவும், தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் 1952 முதல் 1967 வரை தமிழ் விரிவுரையாளராகவும் பணி புரிந்து சூன் 12, 1967 இல் பணி ஓய்வு பெற்றார்.

பொது வாழ்க்கை
1937இல் மாணவர்களின் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிக்கும் வகையில்அரசு சட்டம் இயற்றியபோது தமிழகத்தில் பெரும் போராட்டம் ஏற்பட்டது. அப்போராட்டத்தில் மறை திருநாவுக்கரசு ஈடுபட்டார். 1938 இல் இந்தி எதிர்ப்புப் போரில் சிறைப்பட்டார். பெரியார், அண்ணாதுரை ஆகியோருடன் இவர் சிறையில் இருந்தார். மறை

திருநாவுக்கரசு சிறையிலிருந்து விடுதலை ஆனதும் அவருடைய மனைவி ஞானம்மாள் தம் ஐந்து அகவை மகனுடனும் ஐந்து மாதக் கைக்குழந்தையுடனும் இந்தியை எதிர்த்து மறியல் செய்து சிறை சென்றார். ஆறுமாத சிறை வாழ்வு முடிந்து வெளிவந்தவுடன் ஐந்து மாதக்குழந்தை இறந்தது.



மறை திருநாவுக்கரசு தேசியக் காங்கிரசில் உறுப்பினர்; ஒரு தீவிர காந்தியவாதி. காந்தியடிகள் தொடங்கிய அறப் போராட்டத்தில் அரசை எதிர்த்து மேடைகளில் பேசினார். திரு. வி. கவுடன் தமிழகம் முழுக்கப் பயணம் செய்து இந்திய விடுதலைக்காக உரிமைக் குரல் கொடுத்தார். அதனால் 1941 சனவர் 30 முதல் ஓராண்டு சிறையில் இருந்தார்

சிவநெறி, நாயன்மார்களின் வரலாறு, அவர்களின் புகழ்



பரப்பும் பணியில் ஈடுபட்டு சொற்பொழிவுகள் செய்தார். பர்மா, மலேசியா, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்குப் பயணம் செய்து சமயச் சொற்பொழிவுகளை ஆற்றினார். சேக்கிழார் திருப்பணிக் கழகத்தைத் தொடங்கி 1942 ஆம் ஆண்டு முதல் 1979 ஆம் ஆண்டு வரை சேக்கிழார் விழாவைக் குன்றத்தூரில் நடத்தி பெரியபுராணத்தின் மேன்மையைப் பரப்பினார். 1950இல் சேக்கிழார் விழா நடத்தும் வேளையில் தம் தாயார் இறந்ததால் சுடுகாட்டில் தாயாரின் உடலை ஓடோடி வந்து பார்த்துவிட்டு மீண்டும் அவ்விழாவின் ஏற்பாடுகளைச் செய்ய முனைந்து ஈடுபட்டார்.

எழுதிய நூல்கள்
தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகள் வரலாறு (1959, 2013), (968 பக்கங்கள் கொண்ட இந்நூலுக்கு அரசு பரிசு வழங்கியது)
இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?
சைவ மத வினா விடை.
நீலாம்பிகை அம்மையார் வரலாறு.
மறைமலையடிகள் வரலாறு சுருக்கம்.
பெரியபுராண ஆய்வுரை அப்பர் (1972)
பெரியபுராண ஆய்வுரை சுந்தரர் (1973)
பெரியபுராண ஆய்வுரை சம்பந்தர் (1979)-தமிழக அரசு 1982இல் முதல் பரிசு வழங்கியது.
பெரியபுராண ஆய்வுரை அறுபதடியார் (1975)
மாணிக்கவாசகர் வரலாற்று ஆய்வுரை (1984)-வெளியீடு மறை.தாயுமானவன்.
மறைமலையடிகளார் நாள்குறிப்பு (1988)-வெளியீடு மறை. தாயுமானவன்.
சைவ மத வினா விடை ஆங்கிலப் பெயர்ப்பு நூலும் வெளிவந்துள்ளது.

பெற்ற பட்டங்கள்
1951இல் சித்தாந்த தினகரன் என்று தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை வழங்கியது.
1956 இல் திருமுறைச் செல்வர் என்று மதுரை ஆதீனம் வழங்கியது.

மேற்கோள் நூல்
தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலைஅடிகளார்
ஆசிரியர் --மறை தி.தாயுமானவன்,( மறை திருநாவுக்கரசின் மகன்)
பதிப்பு: திசம்பர் 2009

# வஸ்தாரா vibes... கொம்புசீவி 2nd சிங்கில் வெளியானது



'ரஜினி முருகன்', 'சீமராஜா', 'எம்.ஜி.ஆர் மகன்' மற்றும் 'டி.எஸ்.பி' போன்ற திரைப்படங்களை இயக்கிய பொன்ராம் தற்போது 'கொம்புசீவி' என்ற படத்தை இயக்கியுள்ளார். கிறிஸ்துமஸ் தினத்தன்று வெளியாக உள்ள இந்தப் படத்தில் மறைந்த விஜயகாந்தின் இளைய மகன் சண்முக பாண்டியன் கதாநாயகனாக நடித்துள்ளார்.

மேலும் இப்படத்தில் சரத்குமார், காளி வெங்கட் மற்றும் கல்கி ராஜா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்படத்திற்கு பால சுப்ரமணியன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இப்படம் 1996 வாக்கில் உசிலம்பட்டி, ஆண்டிபட்டி, வைகை அணை பகுதியில் நடந்த சம்பவங்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. சில நாட்களுக்கு முன்பு இப்படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ, முதல் பாடல் வெளியானது.

இந்த நிலையில், 'கொம்புசீவி' படத்தின் 'வஸ்தாரா' பாடல் வெளியாகி உள்ளது. சூப்பர் சுப்பு வரிகளில் யுவன் சங்கர் ராஜா இசையமைத்துள்ள இப்பாடலை விஷ்ணு பிரியாவுடன் இணைந்து யுவனும் பாடியுள்ளார்.

# ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் பான் இந்தியா படம்



'தீயவர் குலை நடுங்க' படத்தை தொடர்ந்து நடிகை ஐஸ்வர்யா ராஜேஷ் நடிக்கும் படத்தின் தலைப்பு வெளியாகி உள்ளது.

அறிமுக இயக்குநர் பரத் இயக்க உள்ள "ஓ சுகுமாரி" படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் மற்றும் திருவீர் இணைந்து நடிக்கின்றனர். பான் இந்தியா அளவில் இப்படத்தை பிரமாண்டமாக உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பரத் மஞ்சிராஜு இசையமைக்க உள்ள இப்படத்தில் சி.எச். குஷேந்தர் ஒளிப்பதிவாளராகவும், ஸ்ரீ வரபிரசாத் படத்தொகுப்பாளராகவும், திருமலை எம். திருப்பதி தயாரிப்பு வடிவமைப்பாளராகவும் பணியாற்ற உள்ளனர். மேலும் இப்படம் தெலுங்கு, தமிழ், மலையாளம், இந்தி மற்றும் கன்னட மொழிகளில் வெளியாக உள்ளது.

கங்கா என்டர்டெயின்மென்ட்ஸ் நிறுவனம் தயாரிக்கும் 2வது திரைப்படம் இதுவாகும்.

படத்தின் தலைப்பு தற்போது வெளியாகி உள்ள நிலையில் இப்படம் தொடர்பான தகவல்கள் இனிவரும் நாட்களில் வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


# 'வா வாத்தியார்' படத்தின் 3-வது சிங்கிள் லிரிக்கல் வீடியோ வெளியானது



'மெய்யழகன்' படத்தைத் தொடர்ந்து, நலன் குமாரசாமி இயக்கத்தில் 'வா வாத்தியார்' என்ற படத்தில் கார்த்தி நடித்து முடித்துள்ளார். கீர்த்தி ஷெட்டி கதாநாயகியாக நடித்துள்ளார். சத்யராஜ், ராஜ்கிரண் உள்பட பலரும் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் டீசரும், பாடல்களும் ஏற்கனவே வெளியாகி கவனம் ஈர்த்தன. 'வா வாத்தியார்' திரைப்படம் வரும் 12-ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

இந்நிலையில் படத்தின் 3-வது சிங்கிள் லிரிக்கல் வீடியோ தற்போது வெளியாகியுள்ளது. முதலாளி என்ற தலைப்பில் வெளியாகி உள்ள இந்த பாடல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.



பிரேமம் படத்தின் மூலம் அறிமுகமாகி இன்று தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வருபவர் அனுபமா பரமேஸ்வரன். இவர் நடிப்பில் இந்த ஆண்டு வெளிவந்த பைசன், Pet Detective ஆகிய படங்கள் நல்ல வரவேற்பை பெற்றன. இதை தொடர்ந்து வருகிற டிசம்பர் 5ஆம் தேதி லாக்டவுன் என்கிற படம் வெளிவரவுள்ளது.

நடிகை அனுபமா பரமேஸ்வரன் இன்ஸ்டாகிராமில் அவ்வப்போது தனது லேட்டஸ்ட் புகைப்படங்களை பதிவு செய்வார். இந்த நிலையில், தற்போது கண்கவரும் அழகில் தான் எடுத்துக்கொண்ட லேட்டஸ்ட் போட்டோஷூட் புகைப்படங்களை இன்ஸ்டா பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

நடிகை ராகுல் ப்ரீத் தாராள கவர்ச்சியாக பிகினியில் போஸ் கொடுத்திருக்கும் புகைப்படங்கள். மாலத்தீவில் அவரது கிளாமர் போஸ் இதோ.

# அனுமதியின்றி பாடல் பயன்படுத்துவதை தடுக்க உரிமை உண்டு..!-




குட் பேட் அக்லி படத்தில் இளையராஜாவின் பாடல்களை பயன்படுத்த விதிக்கப்பட்ட தடையை நீக்கக்கோரிய மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

மேலும், குட் பேட் அக்லி படத்தில் இடம்பெற்ற இளமை இதோ, இதோ, ஒத்த ரூபா தாரேன், என் ஜோடி மஞ்சக்குருவி பாடல்களை நீக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும்," அனுமதியின்றி பாடல் பயன்படுத்துவதை தடுக்க, பாடலை உருமாற்றம் செய்வதை தடுக்க இளையராஜாவுக்கு உரிமை உண்டு. இளையராஜா பாடல்களை பயன்படுத்த விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவில் தலையிட எந்த காரணமும் இல்லை" என்று நீதிபதி தெரிவித்தார். இடைக்கால தடையை ரத்து செய்யக்கோரிய மனு தள்ளுபடி செய்த நீதிமன்றம் பிரதான வழக்கின் விசாரணையை ஜனவரி 6ம் தேதிக்கு ஒத்திவைத்தது

# சொகுசு காரில் வரவில்லை என்றால் மதிக்க மாட்டார்கள்



பாலிவுட் திரைத்துறை மற்றும் மலையாள திரைத்துறை இடையே உள்ள வித்தியாசம் குறித்து நடிகர் துல்கர் சல்மான் முக்கிய கருத்துக்களை பேசியுள்ளார்.

சமீபத்திய பேட்டியில் பேசிய துல்கர் சல்மான் "நான் பாலிவுட்டில் நடித்தபோது, நான் ஒரு நட்சத்திரம் என்று அனைவரையும் நம்ப வைக்க வேண்டியிருந்தது. என்னைச் சுற்றி எப்போதும் இரண்டு பேர் இருந்தார்கள். நாங்கள் ஒரு சொகுசு காரில் வந்தால் மட்டுமே அவர்கள் எங்களை நட்சத்திரங்களாக அங்கீகரித்தார்கள்.

இல்லையெனில், அவர்கள் படப்பிடிப்பு தளத்தில் உட்கார ஒரு நாற்காலி கூட கொடுக்க மாட்டார்கள், மானிட்டரைப் பார்க்க ஒரு இடத்தைக் கூட ஒதுக்க மாட்டார்கள்" என்று கூறினார்.

அதே நேரம் மலையாள திரைத்துறை குறித்து பேசிய துல்கர் சல்மான், எங்கள் துறையில், படங்களுக்கு அதிக செலவு இல்லை. இங்கு யாரும் ஆடம்பரத்திற்கு முன்னுரிமை அளிப்பதில்லை. நாங்கள் மாநிலத்தின் பல பகுதிகளில் படப்பிடிப்பு நடத்துகிறோம். பெரும்பாலான பொருட்களை வீட்டிலிருந்தே கொண்டு வருகிறோம்" என்று தெரிவித்தார்.

துல்கர் சல்மான் 2018 இல் இர்பான் கான் உடன் 'கர்வான்' படத்தின் மூலம் இந்தியில் அறிமுகமாகி இருந்தார்.

கடைசியாக கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் வாழ்க்கை வரலாற்று படமான 'காந்தா' படத்தில் துல்கர் சல்மான் நடித்திருந்தார்.

ஸ்ரீ கிருஷ்ணர்
உபாசகர் பரிகார புகழ்
ஆன்மீக செம்மல் த.பிரகாஷ்
CONTACT US
9597887308, 6380453463
EXPERT IN VEDIC ASTROLOGY
- PREDICTION & SOLUTIONS
- MONEY
- LOVE
- HEALTH
- FAMILY
- BUSINESS
- CAREER
- MARRIAGE

LOCATION - CHENNAI
WE ARE HIRING
TELECALLERS
VACANCIES - 50
QUALIFICATION - ANY DEGREE
FRESHERS ALSO CAN APPLY
TELECALLING EXPERIENCE IS PREFERABLE
9337501889
7789941009
qknewstv@gmail.com

ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC- INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL. Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

இடம் விற்பனைக்கு
இராமன்புதூர் மீன் சந்தை அருகே 6 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
தொடர்புக்கு:
8300134494

Make Money Without Investment Through Mobile
Call : 9337501889
Just 20 min/per day
Any Time
Earn upto Rs. 1000/per mobile

வாடகைக்கு இடம் தேவை
Institute மற்றும் பல் மருத்துவமனை நடத்துவதற்கு நாகர்கோவில் சுற்றுவட்டாரத்தில் மெயின் ரோட்டின் அருகில் Car Parking வசதியுடன் வாடகைக்கு இடம் தேவை.
தொடர்புக்கு: Dr.ROBINSON
Door No: 1/82, Water Tank Road, Nagercoil. Mob: 9487665511

இடம் விற்பனைக்கு
காரவிளை முதல் ராஜாக்கமங்கலம் மெயின் ரோட்டில் 57 சென்ட் இடம் விற்பனைக்கு உள்ளது.
Contact: 08220426606

COMMERCIAL SPACE FOR RENT
5000 Sqft, 2500 Sqft in Ramanathapuram, Coimbatore- 45
Brokers Contact :
98422 65900
SAA

DTCP Sites For Sale
@ KALAPATTY
East Facing Site
6 Cents
Direct Sale !!!
90471 87197
SAA

அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
வழங்கும்
2026 மாத காலண்டர்
தெய்வீகப் படங்களுடன்





3 காலண்டர்
100 ரூபாய்
அனைத்து இல்லங்களிலும் இருக்கவேண்டிய
அற்புத காலண்டர்
இது காலண்டர் அல்ல
மினி பஞ்சாங்கம்
Admin office
Padma Media House
116, EH Road, Gandhi Nagar Chennai 600081
தொடர்பு கொள்ளவும்
9337501889

ADVERTISE WITH US
CONTACT US
9438610756

Space available on OMR for RENT!
Fully Furnished Amenities
Ideal for:
Coaching / Tuition Classes, Govt. / Competitive Examinations, Workshops, Conferences, Seminars, etc.
Film shooting & Advt. shoots
Video/ Audio Editing or Recording
Facilities include Ample Parking, Cafeteria, and Power Backup.
Available on Weekends and Holidays
Contact +91 99406 94545
to know more!






## குறள்வெண் செந்துறை நிலம்

இயற்கை வளங்கள்
கொண்டதுவே இனிய
நலங்கள் கண்டதுவே!
வியப்புப் பொருள்கள்
நிறைந்ததுவே வீறுகொண்ட
நிலந்தானே!

உயிரைச் சுமக்கும்
நிலந்தானே ஊட்டி வளர்க்கும்
நலமாக! உழவை உயிராய்க்
கொண்டதுவே ஓங்கிக்
காணும் நிலந்தானே!

முனைவர்
இராம.வேதநாயகம்.

## துன்பம் வாராமல்! குழந்தைப் பாட்டு

(இசைப் பாடல்)

துன்பம் வாராமல்
பார்த்துக்கொள்....பாப்பா
இன்பம் நெஞ்சினிலே
சேர்த்துக்கொள்!
அன்பு நிறைந்திடவே
கேட்டுக்கொள்..பாப்பா
ஆசை குறைத்திடவே
ஏற்றுக்கொள்!
...(துன்பம்)
சோர்வு வாராமல்
பார்த்துக்கொள்..பாப்பா
ஆர்வம் தன்னைநீ
சேர்த்துக்கொள்!
கூர்மை அறிவுதனை
ஈட்டிக்கொள்..பாப்பா
சீர்மை ஒற்றுமையைக்
கூட்டிக்கொள்!
(துன்பம்)
குழப்பம் வந்தாலே
தீர்த்துக்கொள்..பாப்பா
ஒழுக்கம் எந்நாளும்
பூட்டிக்கொள்!
இழுக்கம் சேராமல்
காட்டிக்கொள்..பாப்பா
உழைப்பைப் போற்றிடவே
ஏற்றுக்கொள்!
(துன்பம்)

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.



## விளக்கேற்றுவோம்!

எண்சீர் மண்டிலம்.

விளக்கேற்று விளக்கேற்று
வினைகள் மாயும்
விதிமேலே பழிபோட்டு
நின்றி டாதே! களிப்போடு
விளக்கேற்று காலம் மாறும்
கலைமிளிர விளக்கேற்று
கோல மாகும்!
உளமார விளக்கேற்று
ஊரே போற்றும்
உன்னதமாய்க் கண்டிடுமே
பாரே போற்றும்!
ஒளிமிளிர விளக்கேற்று
ஒண்மை யாகும்
ஒற்றுமைக்கு வழிகூட்டும்
விளக்கை ஏற்று!

அகலாத துன்பங்கள்
அகன்றே ஒடும்
அன்பான இன்பமெலாம்
தகவாய்க் காணும்!
வகையான நன்மையெலாம்
வந்து சேரும் வண்ண
வண்ண விளக்கேற்று
இருளே போகும்!
அகல்கொண்டு விளக்கேற்று
அன்பே ஆகும் அருளோடு
விளக்கேற்று பண்பே ஆகும்!
இகலெல்லாம் பறந்தோடும்
விளக்கை ஏற்று
ஈடில்லாப் புண்ணியமும்
வந்து சேரும்!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை

## யோகம்- வேகம்

ஆதவன் உதிக்கும்
அற்புத நேரம் பாதகம்
இன்றிப்
பார்த்துக் கொள்ள
வேணும் யோகம்
விறுவிறுக்க உடற்பயிற்சி
ஓட்டமும் சாட்டமும்
உயர்நிலை தியானமுமாய்
ஆணும் பெண்ணும்



அனைவரும்
நலமாய்
காணும்
காட்சியின்
கற்பனையும்
அழகே!!

வைரமணி
சென்னை



## மாற்றுத் திறனாளிகளை மதிப்போம்!

அறுசீர் மண்டிலம்.

மாற்றுத் திறனாளி என்றே
மதிக்காமல் விட்டு விடாதே
சாற்று நல்லபடி என்றும்
சந்தனமாய் மணக்க
வாழ்த்து! போற்றி
அவர்களையே நாடிப்
புகழ்ந்திடவே வாவா!
ஊற்றைப் போலவேதான்
நன்மை உதவியே
செய்திடவே வாவா!

உரிமைப் பாதுகாத்து உதவி
உன்னதமாய்ச் செய்வோம்
வாவா அருமைத் துணையாக
எண்ணி அன்பைத்தான்
காட்டு வாவா! பெருமை
கொள்ளாமல் போற்றிப்



பீடு நடையில்
வாவா
ஒருமை
உணர்வோடு
என்றும் ஒட்டி
வாழ வாவா!

முனைவர்
இராம.வேதநாயகம்
திருவண்ணாமலை.

## வளர்ப்பு

இளைஞர்களை
சவால்களைச் சந்திக்கும்
வல்லமை பெற்றவர்களாக
உருவாக்குவீர்

ஜாக்கிசான் சொத்துக்களைத்
தானமிட மூலம் வாரிசு
சுயமாய் வென்று காட்டிட

அனுபவித்த வேதனைகளைப்
பிள்ளைகள் எதிர்கொள்ளக்
கூடாதென்பது மதியீனம்

முட்டி மோதி ரணமுடன்
நெஞ்சு நிமிர்த்த
பழக்கி ஆளாக்கி
பக்குவப்படுத்திடுவீர்

இரு பிள்ளைகள் போதுமென
தீர்மானித்த பெற்றோரால்
இதையும் செய்திட இயலும்

உங்கள் வளர்ப்பு பிறரால்



போற்றப்படும்
பரவலாய்
மெச்சும் தாரக
மந்திரமாகும்

பி. பழனி,
சென்னை.

## உலகை வெல்லும் ஒரு ஆயுதம்

உலகை வெல்ல ஒரே ஆயுதம்
சிந்தனையில் மாற்றங்கள்
செயலில் மாற்றங்கள்
எல்லைகள் மாற்றங்கள்
இனங்களில் மாற்றங்கள்
மதங்களில் மாற்றங்கள்
மொழிகளில் மாற்றங்கள்
நம் இனத்திற்கு –
மனிதனுக்கு பொதுவானது
என்பதில்லையோ ?
இருந்தும், இருப்பதை
அறிந்தும் மறுப்பதும் ஏனோ?
அதை மறந்ததும் ஏனோ ?

பிறந்ததும், கண் பார்க்க
பழகியதும் முகம் பார்த்து
சிரிக்கும் குழந்தையின்
அச்சிரிப்பு மயங்காதார்
உண்டோ ? தொடரும் மனித
வாழ்வில் உலகை வெல்லும்
ஒரே ஆயுதம் சிரிப்பன்றோ ?
மிகையோ ?

ஊடலிலே பிரிந்த
காதலிக்கும் உறவினிலே
பிரிந்த உடன் பிறப்புக்கும்
மதங்களால் பிளவுண்ட
மானிடர்க்கும் இயற்கை
பிரித்துவைத்த
நாடுகளுக்கும்
சேர்த்து வைக்கும் ஆற்றல்



சிரிப்பன்றி
வேறுதுவும்
உளதோ ?
சொல் என்
மனமே

ஓம் குமார்
மதுரை

## அனுபவம் இனிமை

பனிசூழ் அதிகாலையில்
பவளமல்லிப் பூ உதிர்வதைப்
பார்த்திடும் அனுபவம்
வாய்ந்திருக்கிறதா
உங்களுக்கு?

பவளமல்லிச் செடியின்
கொம்பு அதற்கொரு முத்தம்
கொடுத்து அனுப்புவதைப்
பார்த்திருக்கிறீர்களா?

குடைவிரித்து அவை
ஒவ்வொன்றாய் தரை
இறங்கும் அழகு!
சத்தமின்றி ஓரமாய்
சம்மணமிட்டு அமரும்
பாங்கு!

வரையுங்கள் பார்க்கலாம்
எனச் சவால் விடும்
கோலப்புள்ளிகளாய்...
சிதறிய வான்
தாரகைகளாய்...
ரசிப்பதிலேயே



போய்விடுகிறது
அன்றைய
தினம்
மொத்தமாய்!

கே. பி.
ஜனார்த்தனன்



## மாற்றும் திறனாளிகள்!

இறையோன் எழுதிய
கவிதையிலே..
இவனோர் எழுத்துப் பிழை!

என்றே உலகம்
நினைக்கயிலே..
இவனோர் இரும்பு உலை!

முடங்கின அங்கம்! மூடின
விழிகள்.. ஆயினும்
குறையென ஒன்றுமில்லை!

தடங்களை எல்லாம் தகர்த்து
எறிய.. திலைநிமிர்வான்
அவன் இமயமலை!

புதைக்கிற விதைகள்!
எழுவதுபோல.. முளைத்ததே
இவன் பிறப்பு.!

சிதைக்கிற போதே..
சிலையென மாறும்
நெஞ்சுரம் இவன் சிறப்பு!

இருப்பதை வைத்து
இலக்கினை நோக்கும்
மாற்றமே இவன் உயிர்த்
துடிப்பு!

நெருப்பெனப் பற்றி..
தடைகளைத்தாண்டி
களத்திலே தான்
இருப்பு!

வெட்டிய கரும்பு!
எரிமலைக் குழம்பு!
வெடித்துச் சிதறிய மத்தாப்பு!

கட்டினை வெட்டி.. மாற்றத்
துடிக்கும் பட்டாம் பூச்சியின்
பரிதவிப்பு!

ஒட்டிய உறவுகள்.. உலகம்
வெறுப்பினும் உடைத்துப்
புறப்படும் அந்த நதி!
எட்டிய திசைகளை..
மாற்றும் திறத்திலே..
இவன் பெயர் மாற்றும்
திறனாளிகள்!

அடடா.! என்ற
அனுதாபங்களை..
அறவே வெறுத்து தலை
நிமிர்ந்து..

கொடடா.. வாய்ப்பு..! மாற்றிக
காட்டுவோம்.! கொட்டும்
முரசு! இவன் துடிப்பு!

எடுடா.. மேளம்! அடிடா..
தாளம்.! எழுகவே..
மாற்றுத்திறனாளிகள்!



எதிரே தெரியும்..
உலகினைப் புதிதாய்..
உறுதியால் மாற்றும்
திறனாளிகள்!

வே.கல்யாண்குமார்.

## ஞானக் கூக்கூ......

சிந்தனை ஊற்றில்
மொழி உணர்வை வளர்க்கும்
தமிழ்மொழி..!

இணை இல்லாமல்
இருந்தாலும்
நண்பர்களாய்
நம்மிடம்
இருப்பவர்கள்
கண்கள்...!

சுயநலமாய் சிந்தனை
செய்து உறவை வளர்க்கும்
குடும்பங்கள்...!

மக்களின் கோரிக்கைக்காக
கல்லாய் தரிசனக் காட்சி
கடவுள்...!



மிச்சமான உணவு
பொருள்களை சேமிக்கும்
பிச்சைக்கார பெட்டி
குளிர்சாதன பெட்டி...!

நல.ஞானபண்டிதன்
திருப்புவனம் புதூர்

எண்ணங்கள்
கெட்டுப்போன உள்ளங்கள்
நிச்சயம் மானுடக்குப்பைகள்

---

தேடும் பாதையில் தெள்ளத்
தெளிவாக தொலைந்து
போகிறது தேடும் பொருள்

---

பூக்களின் தரிசனம்
வண்டுகள் தேட
இதழ்கள் நாணத்தில் ஆடும்
தேவதையின் விரல் பட்ட
மலர் தண்டு இலையாடே
உரசும் மாட்டெடுக்கள் முகம்
சுழித்து வெட்கித்துப் பாகே
பனித்துளிகள் இதழ்களை
முத்தமிடும்



மாலையுடன் மாங்கல்யம்
மணமேடை ஏறும் தாலியும்,
குங்குமமும் அக்கினி
சாட்சியாய் மங்கை அவள்
கரம் பிடித்த மணாளனுடன்
மணம் காள்ளெவாள்
மனதுருகி ஒருயிர்
ஈருடலாய் இல்லறம் சிறந்து
நல் நறுமண மலர்களாய்
மலர்ந்திடும்பந்தம்
திருமணம் எனும் சாரெக்கம்

---

நாளை என்பது கனவா?
இல்லை நம்பிக்கையா?
நாளை என்பது ஆசையா?
இல்லை வயோதிகமா?

இன்று மட்டுமே உண்மை
என்றால் ... பள்ளிகள்
கடந்துபாடங்களை
குடைந்து தேர்வுகள் கடந்து
இளமையை மறித்து
தோல்வியில் துவண்டு
உழைப்பில் கரைந்து
சில ஊக்கம் அருந்தி
பல ஒட்டம் பறந்து
பசியில் வறண்டு தூக்கம்
துரத்தி ஏக்கம் கவ்வி
நோயில் உழன்று துரோகம்
கடந்து .. நாளை நமக்கு
கண்முன்னே இருக்கு என
ஊசல் உயிரில் ஊன்றி




நின்று காத்து
கிடக்கும்
பாமரனின்
ஒரே
ஆறுதல்
நாளை
மட்டுமே

கவிஞர்
பாலசந்தர்
மண்ணச்சநல்லூர்

## நூல் விமர்சனம்:

நூலின் பெயர் : சித்தர்களைத் தேடும் சினிமாக்காரன் தொடர் வரிசையில் கோரக்கர்
ஆசிரியர் : "யார்" கண்ணன்
வெளியீடு : கீதம் பதிப்பகம்
விலை : ₹ 70
தொடர்புக்கு: 044 – 2496 0231/4335 7328







பதினெண் சித்தர்களில் "கோரக்கர்" பற்றி "யார் " கண்ணன் எழுதிய சிறிய நூல் இது.

இதிலிருந்து சில பகுதிகள்:

25 வருடங்களுக்கு முன் கோரக்கர் பற்றிய ஆராய்ச்சிக்காக , நாகை மாவட்டம் வடக்குப் பொய்கை நல்லூரில் சித்தர் சமாதி இருக்கிற குடிசைக்கு பக்கத்தில் தங்கிய போது இவர் பசியோடிருந்த நேரம் , ஒருவர் தூக்கு வாளியில் கொஞ்சம் புளியோதரை கொண்டு வந்து பிரசாதமாகத் தருகிறார்.

அப்போது கோரக்கர் எழுதிய புத்தகங்கள் பற்றிய நினைவுகள் இவருக்கு வந்ததாம்.

"நமனாசத் திறவுகோல்", 'மழை வாகடம்' என அவற்றுள் சில. நமனாசத் திறவு கோல் என்றால் ஆயுளை நீட்டிக்கலாம். ஆயுளை நீட்டிக்க யாருக்குத் தான் ஆசை இருக்காது. மரணத்தை வெல்லலாம் என்றால் அதற்கு யார்தான் ஆசைப்படமாட்டார்கள். அப்படிப்பட்ட உபாயத்தை கேட்பதில் யாருக்கு ஆசை இல்லை. மிருத்யுஞ்ச குளிகை செய்வது எப்படி? அது எப்படி பயன்படுத்தினால், இறந்தவனைக் கூட இத்தனை நாழிகையில் உயிர்ப்பிக்க முடியும் என்ற ஃபார்முலாவை கோரக்கர் கூறியுள்ளாராம்.

" ஜனனம் " என்ற தொடரில் கோரக்கராக முதலில் நடிகர் விஜயின் தந்தை எஸ்.ஏ.சந்திரசேகரை நடிக்க வைக்கத் தேர்வு செய்து எல்லாம் தயாரான நிலையில், அவங்க வீட்ல ஒத்துக்கலையாம். அடுத்து தஞ்சையைச் சேர்ந்த விஜயகுமாரை தொடரின் டைட்டிலில் இடம் பெறும் மாறுபட்ட சொற்கள் கொண்ட இவர் எழுதிய பாடலை பாட அழைத்த போது அவரும் மறுத்து விலகினாராம்.தொடர் ஒளிபரப்பாக வேண்டிய தேதியும் நெருங்க இயக்கும் இவரையே நடிக்கச் சொன்னதால் " கோரக்கர்" ஆக நடிக்கும் பாக்கியம் கிடைத்ததாம் "யார்" கண்ணனுக்கு.

இசையமைப்பாளர் தேவா வுடன் கம்போஸிங்குக்கு உட்கார்ந்த போது , டைட்டில் பாடலுக்கான பல்லவியாக, " எது மரணம். எது ஜனனம், இடையில் இங்கே சிறு தருணம். இதுதான் வாழ்க்கை. வாழ்க்கை நிலையாமையைச் சொல்லும் இந்த வரிகளை நேர்மறையாக மாற்றுங்கள் . எடுத்த உடனே எதுக்கு மரணம் என எதிர்மறையாக ஆரம்பிக்க வேண்டும் என்றாராம் தேவா.

' மறுபடியும் மறுபடியும் பூக்கும் இந்த ஜனனம்! மணிவயிறே கருவறையே, உயிரணுவே சரணம் ' என மாற்றி எழுதிப் பின்னர் அத்தொடரை இயக்கி முடித்தாராம்.

கோரக்கர் பெயர்க் காரணம்: கோரட்ச நாதன் பசுக்களின் மேல் கருணை உடையவர். "கோ" என்றால் இறைவன், தலைவன் என்ற பொருள்படி, ரட்சிக்கிற தலைவன் எனலாம். கோரட்சர் தமிழ் வழக்கில் " கோரக்கர்" ஆயிற்று என்கிறார்.இன்னும் அவரது பிறப்பு உள்பட பல சுவாரஸ்யமான தகவல்களை உள்ளடக்கிய புத்தகம் இது. தவறாமல் வாசிக்க வேண்டும்.

ஸ்ரீகாந்த் திருச்சி



## ஹைக்கூ!

அறிந்தது உலகம்
அறியவில்லை தமிழர்
திருக்குறள் அருமை !

* ஒரே வரியில்
ஒப்பற்ற அறம் ஆத்திசூடி !

* நான்கே வரிகளில்
நல்லபல கருத்துக்கள்
நாலடியார் !

* ஒழுக்கம் உணர்த்தும்
ஒப்பற்ற வரலாறு
சிலப்பதிகாரம் !

* தமிழ்மொழி பாட்டி
வடமொழி பெயர்த்தி
பெயர்த்திக்குப் பிறந்தால்
பாட்டி என்று பிதற்றுகின்றனர்
கோமாளிகள்!

* தண்டனை என்று
அறிவிப்போம் தமிங்கிலம்
பேசினால் !

* நான் இங்கு இருக்கையில்
யார் நினைப்பது உங்களை
தலையில் தட்டும் மனைவி !

* இந்நாட்டு மன்னர்கள்
தேர்தல் மறுநாள் சாதாரண
குடிமக்கள் !

* பணம் பத்தும்செய்யும்
உணர்த்தியது தேர்தல் !

* தாமதமானாலும்
இறுதியில் வெல்வது
அறம் !

* மூச்சு இருக்குவரை
நினைவில் இருக்கும்
முதல் காதல் !

* தோல்வி வெற்றிக்கான
படிக்கட்டு சரி
படிக்கட்டு எத்தனை ?

* மழை விட்ட பின்னும்
சாரல் மரத்திலிருந்து !

* நவீனகாலம்
மாணவனைக் கண்டு
அச்சத்தில் ஆசிரியர் !


* தூண்டில் புழு மீன்
மனிதன் புழு
வாழ்க்கை ஒரு வட்டம் !

* ஆட்டம் ஆர்ப்பாட்டம்
அனைத்தும் அடக்கம்
கல்லறை !

* கடன் வாங்கக் கற்றுத்
தருகிறார் கணக்கு ஆசிரியர்!

* பூச்செண்டாக ஒன்று
மலர்வளையமாக மற்றொன்று
ஒரு செடிப் பூக்கள் !

* வயப்பட்டவர்கள் மட்டும்
உணரும் உன்னதசுகம்
காதல் !



* உட்கார்ந்த இடத்தில்
ஓடாமல் விளையாடியது
கணினியில் குழந்தை !

* குறைத்தது வாழ்நாள்
நவீன உணவு !

கவிஞர் இரா.இரவி.

## பாரதி .... பாரதீ

" தமிழின் அமுது
நீ தமிழின் அழகு நீ
பாமரனின் எதிரொலி நீ ..."

பாரதி பார... தீ
முண்டாசு கவிஞன்
நீ முற்போக்கு
தலைவன் நீ .... "

பெண் இனம் தலை
தூக்கிட பிள்ளையார் சுழி
போட்டவன் நீ .... "

சாதிகள் ஒழிய வரமாய்
வந்து புத்தி புகட்டியவன்
நீ சுப்ரமணியன் நீ ..."

தேசியக் கவி நீ பார்
போற்றும் கதாநாயகன் நீ
உணர்ச்சிகளின்
உருவம் நீ ..."

சுதந்திரம் பெற
உன் எழுத்தாணி
அச்சாணிதான்

நாட்டை மண்ணை
நேசித்த தியாகி தனி
மனித உணவிற்கு குரல்
கொடுத்த யோகி நீ
பாரதி..."

செல்லம்மா கண்டுஎடுத்த
புதையல்நீ..."



தமிழ் உள்ள
வரைஉன்
புகழ் உண்டு
மீசைக்
கவிஞனே...."

சீதாராமன்
சீர்காழி.






## ஒளிரும் மனம்....

திருக்கார்த்திகை தீப ஒளியில்
மலரட்டும்... மனம்...

வறுமை...துயர் ...
இருள்...விலகி

ஒளிரட்டும் புன்னகை
ஓங்கட்டும்... வாழ்க்கை...

அல்லவைப் பொசுக்கி....
அருளட்டும்...
அண்ணாமலை...

பெருகட்டும்... மகிழ்ச்சி...
மாமலை.... வலம் வந்து
வளமை காண்போம்...

தீபம் கண்டு
ஒளிர்வோம்.....
அக்னி தலத்தில்
அண்ணாமலையார்..

அருளினால் உன்னை வெல்ல
வேறு யார்?

அரோகரா" முழக்கம் விண்
அதிரட்டும்....

ஆனந்தம் மண்ணில்
பெருகட்டும் சிவனேயென
நாட்கள் நகர்த்தும்...

சிற்றெறும்புகளுக்கும்...

நலம் அருளும்....
நமச்சிவாயமே....

உன்னைக் காண அருள்
புரிவாய்...அய்யனே...



மனதின் அழுக்குகள்
பொசுக்குவாய்....
மெய்யனே....


**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



## நட்புகளும் உறவுகளே


உள்ளத்தைத் தொட்ட
நட்புகள் உறவுகளாக
மாறுவதில் வியப்பில்லையே
சிறுவயதில் பள்ளி நட்பு
இளவயதில் கல்லூரி நட்பு
என்று இன்றும் தொடரும்
அந்த நட்புகள் உறவுகளாக
மாறியதில் வியப்பில்லையே
புன்னகையுடன் பேசும்
அனைத்து நட்புகளும் நம்
உறவுகளே சொந்தங்கள் நம்
பந்தமாவது போல நட்புகளும்
உறவுவாகி மகிழ்ச்சியில்
நம்மை திளைக்க வைக்கும்
மனச்சோர்வை
நீக்கி புத்துணர்வு
தரும் நட்புகள்
உறவுகளாக
மாறுவதில்
வியப்பில்லையே ...
காலங்கள் மாறலாம்

ஆனால் ஞாலத்தில் நட்புகள்
உறவுகளாக மாறுவது
மாறாது உரையாடும்போது
நம் மனதில் உள்ள சோகத்
திரை நீங்கி சந்தோஷம்
வந்து சூழ்வதால் நட்புகளும்
உறவுகளே
மதிக்கும் உறவுகளை நாம்
விரும்புவது போல மதிக்கும்
நட்புகளையும் விரும்பி
உறவுகளாக மாற்றுவோம்
கற்றவருக்கு சென்ற
இடமெல்லாம் சிறப்பு போல
நல்ல நட்புக்களுடன் நாம்
நடக்கும் போது சிறப்பு
வருவது உண்மையே



நம் கனவுகளை
நினைவாக்கும்
நல்ல நட்புகளுடன்
நட்புக் கொண்டு
அவர்களை உறவுகளாக
மாற்றுவோம்

**உஷா முத்துராமன்**



கார்த்திகைதீப ஸ்பெஷல்

## சிங்காரக் கண்ணா!

இல்லத்தில் அமர்ந்த
கண்ணன், நம் உள்ளத்தில்
நிறைந்த கள்வன், மாயக்
குழலூதி உயிர் உருக்கி,

தன் மழலையால் மயக்கும்

மன்னன், கார் மேனியில்
பட்டுடுத்தி, மயிற்பீலியால்
அலங்கரித்து,
முத்துமாலைகள்
அசைந்திருக்க, தண்டை

பாதங்களில் இசையொலிக்க
வண்ணக் கோலங்கள் பல
வரைந்தெடுத்து, சின்னக்
கண்ணனை நடுவில் வைத்து

கார்த்திகையின் அந்தி
மாலையில் நேர்த்தியாக
தீபங்களை , ஏற்றி வைத்து,

கீர்த்திமிகு வண்ணன்,
அவனது மூர்த்தியை உளம்
குவித்து நமஸ்கரித்து,



போற்றியே
பாடிடுவோம்!
கண்ணன்
புண்ணிய
நாமங்களை

**மீனா சேகர்**



## மழை !

தலைநகரை தண்ணீர்
நகராக்கியது மழை !

நகரத்தை
நரகமாக்கியது மழை !

பொய்த்தும் வாட்டியது
பெய்தும் வாட்டியது மழை !

ஏழைகளை வாட்டியது
இன்னலில் ஆழ்த்தியது
மழை !

சாலையை எரியாக்கியது
ஏரியில் இடமில்லாததால்
மழை !

சாலைகளை வழியாக்கியது
நீர்வழிகளை அடைத்ததால்
மழை !

காலை வாரியது
தூர் வாராததால் மழை !

உண்மையாக்கியது சிறுதுளி
பெருவெள்ளம் மழை !

ஏழைக்குடிசைகள்
மட்டுமல்ல
மாளிகைகளும்
மூழ்கியது மழை !

பேராசை
மனிதர்களுக்கு
பாடம் புகட்டியது
மழை !

உணர்த்தியது உண்ண
முடியாது பணத்தை மழை !
பணக்காரர்களுக்கும்
உணர்த்தியது பசியின்
கொடுமையை மழை !

புகட்டியது
பாசம் நேசம் மழை !

சூறையாடியது சொத்தின்
ஆசையை மழை !

வசதியானவர்களுக்கும்
காட்டியது வாழ்வின்
நிலையாமையை மழை !

பிறர் ஆட்டங்களை நிறுத்தி
விட்டு தான் ஆட்டம்
போட்டது மழை !

சிறிய ரொட்டியையும் உயிர்
காக்கும் அமுதாக்கியது
மழை !

வெளியேற முடியாமல்
சிறை வைத்தது மழை !

சோதிடன் சொல்லவில்லை
சோதிடனும் மூழ்கினான்
மழை !

பெய்தது போதும் போதும்
பெய்யென வேண்டுகையில்
வா மழை !



**கவிஞர் இரா .இரவி !**

## அடியார்க்கு நல்லான்

அறியாமல் தான் இருந்தேன்
அரவன் நின் புகழ்
புரிந்திலேன்

ஒரு நாள் என் மனம்
நான் அறியாமல் கள்ளமாய்
கவர்ந்தென்ன!

தென்னவா! அன்று தொட்டு
மறவாமல்
வேண்டுகிறேன்

இறவாத நின்
நினைவு
நீங்கா மனம்
வேண்டும்!

முடியாதது ஒன்றும் இல்லை;
அடைவோர்கமுதனுக்கு

விடை ஏறும் அறவடையான்
அடைக்கலம் காத்தான்!


வரம் தருவார் வேறில்லை.
கரம் நீட்டுவார் எவருமில்லை.

மறவாதே அறவா! கரவாதே
உன் கருணையை
தப்பாமல் பொழிவாய்!



அருணனே! அடியார்க்கு
நல்லானே! மிடியேதும்
இல்லையே; இது அருள?

**சசிகலா விஸ்வநாதன்**



## திடீர் மழையில்...

சட்டென நினைவுக்கு
வருகிறது...
உன் கைக்குடை.....
உன் குடைப்பூக்களை விட...
வேர்கள் போன்ற நீ தான்...
சல்லி...சல்லியாய்... பிய்த்து
எறிகிறாய்... என்னை...

**தே.சௌந்தரராஜன்**
கல்யாணம் பூண்டி



1. நடு ரோடு வரை கைகாட்டி
நிற்காமல் போனால் அது
அரசு பேருந்து தலையை
சொறிவதற்கு கையை தூக்கி
இருக்கும்போது பஸ் நின்றால்
அது தனியார் பேருந்து

2. உலகிலேயே
அலட்சியத்தாலும்
ஆயுதத்தாலும் பாதிக்கப்பட்ட
ஒரே உயிரினம் மரம்

3. மரத்தை வெட்டி காகிதம்
தயாரித்தார்கள்
பின்னர் காகிதத்தின் மூலம்
புத்தகம் வெளியிட்டார்கள்
புத்தகத்தின் கடைசி பக்கம்
மரம் வளர்ப்போம் மழை
பெறுவோம் என்று
அச்சிட்டார்கள் என்ன ஒரு

அருமையான வாசகம்

4. திறமை இருந்தும் முயற்சி
இல்லையென்றால் அடுத்தவர்
திறமைக்கு அடிமையாகி
விடுவோம்.

5. கடவுளுக்கு பணம்
தேவையில்லை என்று
தெரிந்தும் உண்டியல்
வைப்பது ஆத்திகம் அந்த
உண்டிகளை கடவுளால் கூட
காப்பாற்ற
முடியாது என்று
அதற்குப் பூட்டு
போடுவது
நாத்திகம்



**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி

## நிம்மதி:

பாரில் உள்ள மனிதரெல்லாம்
தேடுகின்ற பொக்கிஷம்

விடிகின்ற பொழுதும்
அடைகின்ற இரவும்
அனுதினமும் தேடியலையும்
அனுபவப் புதையல்

இல்லாததில் தேடி
இருப்பதைத் தொலைத்து
தேடலில் இழக்கும் வாழ்க்கை

பொருளில் உள்ளதென்று
வாழ்வின் பொருளறியாது
வாழ்ந்திடுவர்

சொத்து சுகத்தில்
இருக்கிறதென்று சொந்தம்
மறந்து பந்தம் துறந்து

பாதை மாறி ஓடிடுவர்
மற்றவர் வாழ்வைப் பாடமாக்கி
கற்றது யாவும் மறந்து
தேடித்தேடி அலைந்திடுவர்
தேடலில் வாழ்வைத்
தொலைத்திடுவர்

வீசும் காற்றில் உலவி வரும்
பேசும் சொல்லில்
தெறித்து விழும்
அணைக்கும் கரங்களில்
பிணைக்கும் உறவை

உண்மை வாழ்வில்
பொய்மைத் துறப்பில்
கருணைக் கண்களில்
தேடும் நிம்மதி
மறைந்திருக்கும்
தேடலில் வாழ்வும்
சிறந்திருக்கும்.

**தமிழ்நிலா**



## கனமழை

கருத்த வானம் தந்த
பெருத்த கொடை

இடியும் மின்னலும் இணை
சேர்ந்து பரந்த வானில்
இசையாகும்

துளி மழையாய்த் தொடங்கி
தூய நீராய் பூமி பார்க்கும்

வறியவர்க்குக் கொடுக்கும்
வள்ளலென வாரிக்
கொடுக்கும் பலநேரம்
சிறியோராய் மாறிச்சிக்கல்
கொடுக்கும் சில நேரம்

பச்சைப் புல்வெளியின்
பாசமிகு தோழன்
வானிலை அறிக்கையும்

நிலை மாறும் தன்னிலை
மறந்து தடுமாறும்

பள்ளி செல்லும்
குழந்தைகளுக்கு
விடுமுறை தந்து மகிழ்விக்கும்

இயல்பு வாழ்க்கை பாதித்து
இன்னல் தந்து துயரளிக்கும்

ஏழை மக்கள் வீடு தேடி
கோழை போல தொல்லை
தரும் மேட்டுக்குடியைக்
காத்திட்டு மேவிய பெருமை
தேடி வரும்
குடியில் சமநிலை
காட்டாத
கனமழை
என்றும் சாபமே!



**தமிழ்நிலா**

## அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு

அளவு என்பது அவரவர்
வரையறை நிலமும்
பொருளும் நித்திய நிதியமும்
அளவுக்கு மீறினால்
அமிர்தமும் நஞ்சு

உணவுப் பொருட்கள் உயிர்ச்
சத்துக்கள் குணமது தேர்ந்து
கொள்வது நன்று
கொஞ்சம் கூடவே
அதுவே கெட்டு
நஞ்சாய் மாறும்
நல்ல உடம்புக்கும்!!

அன்பும் பாசமும்
அப்படித் தானே
இன்னும் கொஞ்சம்

இசைவாய் காட்ட
அதுவே அதிகம் என்னும்
போது மிதமிஞ்சி போகலாம்
இன்னலும் தரலாம்
கொடுத்தவர் பெறுபவர்
இரண்டு பேருக்கும்
அடுக்காமல் போகலாம்
அதுவே நஞ்சாய் !!

எடுத்துச் செய்யும் எந்த
விடயமும் அளவுக்கு
மீறினால் அதுவே நஞ்சு
கொடுப்பதும் கெடுப்பதும்
ஒன்றே பொருள்தான்
புவனம் சொல்வது
புகழே எனினும்
கவனமாகக் கையாள்
சரியான அளவுகொள்!!



**வைரமணி**
சென்னை

## காதலர் தினம்

இது வரை ஒரு முறை கூட
என் பிறந்த நாளைக்
கொண்டாடாத நான் நீ
என்னை விரும்பத்
தொடங்கிய பிறகு தினம்
தினம் காதலர் தினம்
கொண்டாடுகிறேன்!

## அவதி

நம் இருவரிடையே
மாட்டிக் கொண்டு படாதபாடு
படுகிறது இந்தக்கா த ல்!

## சிறந்த நாள்

நீ என்னைச்சந்திக்க வரும்
நாட்கள் அனைத்துமே
எனக்குப்பிடித்த நாட்கள்
தான்! ஆகவே தான் நீ
வரும் ஒவ்வொரு முறையும்
உனக்கு சிறந்த நாள்
வாழ்த்துகள் சொல்கிறேன்!

## பூவை

எந்த நேரத்தில் நான்
உன்னைச்சந்திக்க வந்தாலும்
உன் கூந்தலில் ஏதேனும்
ஒரு மலரை நீ சூடியிருப்பதால்
நான் உன்னை ஆசையுடன்
செல்லமாக 'பூவிருந்தவல்லி'
என்று அழைக்கிறேன்!

## அழகியல்

இந்த நேரத்தில் என்றில்லாமல்
எந்த நேரத்திலும் நீ
தவறாமல் அழகான புன்னகை
அணிந்திருக்கிறாய்!
இதை விட வேறென்ன
அழகியல் வேண்டும்?!
நான் உன்னைக்
கா த லி ப் ப த ற் கு!

## பித்தன்

நீ கவிதைப் பித்தனா?
காதல் பித்தனா?



என்று கேட்கிறாய்!
நான் உன்னைப்
படிப்பதிலிருந்தே
தெரியவில்லையா?
நான் ஒரு காதல் கவிதைப்
பித்தன் என்று!

## மைக் டெஸ்ட்

எனக்குக் கா த ல்
தலைக்கேறி விட்டது என்பது
மிகவும் உண்மை தான்!
மைக் டெஸ்டின் போது கூட
உன் பெயரையே நான்
உச்சரிக்கிறேன்!

## மௌனம்

நான்
சொல்வதெல்லாம்
புரிகிறதா? என்று
அடிக்கடி
கேட்கிறாய்!
உன் மௌனம்



கூட எனக்குப்
புரியும் போது உன்
அசைவுகளான சொல்லும்
செயலும் புரியாதா?!

## கா த ல்

பெண் என்றால் பேயே
இறங்கும் போது நானும் என்
கா த லு ம் இறங்குவதென்ன?
வீழ்ந்தே விட மாட்டோமா
என்ன?!

## திரை


என் எண்ணத்திரையை
விலக்கி விட்டு எனக்கென
வண்ண மயமாக வந்தவள்
நீ! நமக்கென்றே
உண்டாகும் தடைகளை
உடைத்தெறிந்து விட்டு
உன்னை என்னவளாக்கிக்
கொள்ள மாட்டேனா என்ன?

**முத்து ஆனந்த்** வேலூர்




## அன்பே !!!

பெய்யும் பெருமழையில்
எல்லாமே அடித்துத்
செல்கின்றது
ஆனால் நாம் எழுதிய
கடிதங்களும்
ஒருவருக்கொருவர்
கொடுத்த முத்தங்களும்
இன்னும் பிரிக்கப்
படாமலேயே நீந்திச்
செல்கின்றது
நம்
நினைவுகளைப்
போல



**சுபஸ்ரீ ஸ்ரீராம்**
சென்னை




## மிஸ்டு காலேனும் தருவீரோ !

என் அனைத்து
விவரங்களும்
அனைத்திலும்
கொடுத்தாயிற்று....

திரையரங்க சுவற்றிலும்...
திருமண மண்டபம்
சுவற்றிலும்... கோவில்
பிரகார மதில் சுவரிலும்..
மகளிர் கல்லூரி
சுவற்றிலும் கூட எழுதி
வைத்திருக்கிறேன் என்
கைபேசி எண்ணை...

ஒரு பெண் கூட ஏறெடுத்து
பார்க்காத எனக்கு...
ஒரு பெண்ணாவது மிஸ்டு
கால் தருவாளா ...

திருமண
பாக்கியம்
இன்றி முதிர்
கண்ணனாக
வலம்
வரும் என்
செல்போனிலாவது ஒரு
பெண்ணின் குரலோசை
கேட்குமா.... !



**எம்.பி.தினேஷ்.**
கோவை

# வாசகர் கடிதம்




தமிழ் நாட்டில் டித்வா
புயல் உருவானது #ஆறு
மாவட்டங்களுக்கும் ரெட்
அலெர்ட்
விஜய் முன்னிலையில்
தவெகவில் இணைந்தார்
செங்கோட்டையன்
#அவருக்குப் பதவியை
அறிவித்தார் விஜய்
தமிழ்நாடு முழுவதும்
702 ரயில் ஓட்டுநர்கள்
பற்றாக்குறை#ஆர்டிஐ
தகவலில் அதிர்ச்சி
ஆண்டுக்கு 50 செயற்கைக்
கோள்கள் வீதம்
மூன்றாண்டுகளில் 150
செயற்கைக் கோள்கள்
விண்ணில் ஏவ
திட்டம்#இஸ்ரோ தலைவர்
புதுக் கவிதைகள் வெகு
நேர்த்தி
நூல் விமர்சனம் அருமை
வாசகர் கடிதங்கள் அபாரம்
கரூர் கூட்ட நெரிசல்
சம்பவம்#குடும்பத்தினர்
சிபிஐ முன் ஆஜர்
தேர்வு, நேர் காணல்
கிடையாது#விண்ணப்பித்தால்
போதும் அரசு துறைகளில்
வேலை உறுதி
முன்னாள் முதல்வர்
ரப்ரிதேவி அரசு
பங்களாவை காலி
செய்ய உத்தரவு#மாநில
அரசு நோட்டீஸ்
போக்குவரத்து
ஊழியர்களுக்கு
ரூ.860 கோடி
பணப்பலன்கள்#அரசாணை
வெளியீடு
ராமநாதபுரம்: தடையை
மீறி பிடித்த மீன்கள்
பறிமுதல்#மீனவர்களுக்கு
எச்சரிக்கை
டியூட் படத்தில் பாடல்களை
நீக்கக் கோரி இளையராஜா
தாக்கல் செய்த்
மனு#சென்னை ஐகோர்ட்
ஒத்தி வைப்பு
இரண்டாம் திருமணம்
செய்தால் பத்தாண்டு
சிறை#அசாம் பேரவையில்
மசோதா நிறைவேற்றம்
உலகக் கோப்பை செஸ்
போட்டி#ஜாவோகிர்
சாம்பியன் ஆனார்
மராட்டிய மெட்ரோ ரயில்
திட்டத்திற்கு ரூ.9800 கோடி
#மத்திய மந்திரிசபை
ஒப்புதல்
ஜல்ஜீவன் திட்டத்தில்
முறைகேடு#தமிழ்நாடு
உட்பட
7மாநிலங்களுக்கு 129
கோடி அபராதம்
எஸ் ஐ ஆருக்கு எதிரான
மனுக்கள்#டிசம்பர் 4ல்
விசாரணை
ஆபரேஷன்
சிந்தூரின்போது உரி
நீர்மின் திட்டத்தை
தகர்க்க திட்டமிட்ட
பாகிஸ்தான்#சதியை
முறியடித்த வீரர்களுக்குப்
பரிசு
2030ல் அகமதாபாத்தில்
காமன்வெல்த்
விளையாட்டுப் போட்டி
#அதிகாரப் பூர்வ அறிவிப்பு
வெள்ளை மாளிகை
அருகே துப்பாக்கிச்
சூடு#ஆப்கானிஸ்தானைச்
சேர்ந்தவர் கைது
இந்தோனேஷியாவில் கடும்
வெள்ளப் பெருக்கு#நிலச்
சரிவில் சிக்கி 49 பேர்
உயிரிழப்பு
தொடர் மழை
சீற்றம்#இலங்கையில்
மோசமடையும் நிலைமை
நைஜீரியாவில்
அதிகரிக்கும் ஆள்
கடத்தல்#அவசர நிலை
அறிவித்த ஜனாதிபதி



-பி.சுரேகா
சென்னை













வணக்கம். 3.12. 25 அன்று தமிழ்நாடு இ பேப்பரில் முதல் பக்கத்தில் மக்களவையில் டிசம்பர் 9 10ஆம் தேதிகள் விவாதம் என்ற செய்தி டெல்லிக்கு என அழைத்துச் சென்று விட்டது. மிக அற்புதமான நாளாக அமைய பஞ்சாங்கம் எனக்கு உதவியது பாராட்டுக்கள்.
திருக்குறளை அதன் பொருளுடன் படிக்கும்போது உண்மையான மகிழ்ச்சி வருவது உண்மை.
கார்த்திகை மாத சோமவாரத்தில் 108 சங்குகள் சிறப்பு பூஜை செய்யப்பட்ட கடலூர் மாவட்டத்தில் உள்ள கோவிலில் என்னை மிக அருமையாக அழைத்துச் சென்ற தங்களுக்கு மனமார்ந்த பாராட்டுக்கள்.
நலம் தரும் மருத்துவம் பகுதியில் இன்று கொழுப்பு கரைந்து இரத்தம் எளிதாக ஓடணுமா என்று கேள்வியை கேட்டு அதை எப்படி செயல்படுத்தலாம் என்று அருமையான வழிகளை சொன்னது பாராட்டுக்குரியது


சிதம்பரம் அருகே மழை நீரில் மூழ்கிய நெற்பயிர்களின் சேதம் என்ற படமும் செய்தி மனதில் வேதனையில் ஆழ்த்தியது.
செங்கோட்டையன் அவர்களுக்கு வழங்கப்பட்ட போலீஸ் பாதுகாப்பு வாபஸ் என்ற செய்தி அரசியலை புரிய வைத்தது.
தினம் ஒரு தலைவர்கள் பகுதியில் இன்று எஸ் ஸ்ரீனிவாசா ஐயங்கார் அவர்களின் வரலாறு அவர்களை கருப்பு வெள்ளை புகைப்படம் நல்ல தகவலாக மிக முக்கியமான செய்தியாக படிக்க வைத்தது.
பல்சுவை களஞ்சியம் பகுதியில் எலுமிச்சை பழத்தின் தோளில் இவ்வளவு நன்மைகள் என்று படித்ததும் நான் எப்போதும் எலுமிச்ச பழத்தை பயன்படுத்தியுடன் அதன் தோலை இப்படித்தான் செயல்படுத்துவேன். எனக்காகவே சொன்ன அருமையான யோசனை போல இருந்தது பாராட்டுக்கள்.
மிக அருமையான அலங்காரத்தில் அருள்பாலிக்கும் சர்வ லிங்கேஸ்வரர் பெருமாள் என்ற போச்சம்பள்ளி ஊரில் உள்ளதை பற்றி மிக அருமையான தகவலை படிக்கும் போது மகிழ்ச்சியாக இருந்தது.
சுற்றுலா பக்கத்தில் வந்த மைசூரில் சுற்றி பார்க்க வேண்டிய இடங்கள் என்று முக்கியமான இடங்களை பட்டியலிட்டது பாராட்டுக்குரியது.
சென்னை அருகே நீடிக்கும் ஆழ்ந்த காற்று காற்றழுத்த தாழ்வு மண்டலம் என்று கல்பாக்கம் அருகே கரையை கடக்க இருக்கும் புயல் பற்றிய அருமையான செய்தியை படத்துடன் படித்து ரசித்தேன்.
இரு அவைகளும் ஒத்திவைப்பு என்று புதுடெல்லில் நடந்த தகவலை ஆர்வமுடன் படித்து தெரிந்து கொண்டேன்.
இலங்கையில் புயலுக்கு உயிரிழந்தோர் 334 ஆக அதிகரிப்பு 400 பேரை காணவில்லை என்ற செய்திகள் எல்லாம் அதிர்ச்சியில் ஆழ்த்தின.
திருக்கார்த்திகை தீபம் ஏற்றவிருக்கும் புத்துணவு தரும் புதன்கிழமை விடியலில் நல்ல புத்துணர்வு தரும் செய்திகளை மிக அருமையாக விடியலில் கொடுத்து திருக்கார்த்திகையை உற்சாகமாக கொண்டாட உதவிய தமிழ்நாடு இ பேப்பர் ஆசிரியர் குழுமத்திற்கு மனமார்ந்த பாராட்டுக்களும் நன்றியும்




-உஷா முத்துராமன்


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


WANTED
NEWS COORDINATOR
NEWS
Salary
Rs. 25000
Plus
*Salary is not a
constraint for right candidate
Responsibilities:
1. Appoint Reporters and Photographers in
Tamil Nadu Districts and Taluks
2. Will coordinate with reporters and the news desk
3. Should have a minimum of six years of experience
in a print and TV newsroom.
4. Will report to the editors at the Chennai office
NEWS
PRGI No. TNBIL/25/A1569
வைகறையில்
பேப்பர்பாய்
Send CV to
padmamediapublications@gmail.com
Call
9337501889


CREATE YOUR
PROFILE
WITH US
& SCALE YOUR CAREER
SEND YOUR CV AT -
MKPLACEMENT@GMAIL.COM
FIND AMAZING JOB OPPORTUNITIES WITH US!!


GREAT OPPORTUNITY
AT
ALL OVER TAMILNADU
Marketing Executive
SALARY Rs.15000/-
+ Incentive
+ Petrol Allowance
vilambarampage@gmail.com
7789941009


WORK FROM
HOME
Extra
Income
Part Time
Full Time
AN OPPORTUNITY THAT ROCKS!!!
BE YOUR OWN BOSS
Work 1-4 Hours / Day
Training / Support Provided
No Experience / No Qualification
Who Can Work - 18 Years & Above
Housewives
Retired Persons
Students
Professionals
Businessman
Employees
9337501889
7789941009

FIRESUPPLIES
Safer Together

YOUR GUIDE TO FIRE SAFETY EQUIPMENT
CHOOSING THE RIGHT TOOL FOR YOUR NEEDS



Call Us Now?
6363497974

குடோன் வாடகைக்கு விடப்படும்
கோவை வடவள்ளி
IOB காலனியில்
3614 sq.ft with EB Service 150HP
CT: 88708 68595

Euro Kids™
Pre-School
Right Start, Flying Start!
Tondiarpet
9940661625
Introducing
HEUREKA™
THE VISIBLE THINKING CURRICULUM
based on Harvard's Project Zero
Admissions Open for AY 25-26
EuroTots | PlayGroup | Nursery | EuroJunior | EuroSenior
23+ Years of Experience
1,600+ Pre-schools
TUV Nord Safety Certified



No. 19/20, Kummalamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081
a part of LIGHTHOUSE LEARNING GROUP

நாங்குநேரியில் 40 செண்ட் (பைபாஸ் ரோட்டில் இருந்து 150அடி) வீட்டுமனை இடம் விற்பனைக்கு (இளந்தோப்பு)
9884431675
9176691675

சென்னையில் உயர்நீதி மன்றம் அருகில்
Double Room Rs.800/- Per day
Single Room Rs.650/- Per day
well furnished Attached Bath.
Wifi Facility
மாத வாடகைக்கு ரூம்கள் கிடைக்கும்
with Bath Attach
Rs. 9000- Rs.10000
Ct: 044- 25261430

OFFICE/RESIDENCE FOR SALE
7500 Sq.ft OFFICE/ RESIDENCE SPACE FOR SALE. COMPOUND AREA 39.5 CENTS IN NAGERCOIL.
Parking for 2 cars and 20 Motor Cycles
Contact:
98410 62644

கோவை பீளமேட்டில் உள்ள
லேடிஸ் ஹாஸ்டலில் பணிபுரிய
★ சமையல் மாஸ்டர்
★ CARE TAKER/ LADY SECURITY
வீட்டில் பணிபுரிய
★ சமையல்காரர்
★ தோட்ட பராமரிப்பு மற்றும் செக்யூரிட்டி தேவை
தங்குமிடம், உணவு இலவசம்
98947 73431

S.R Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM



Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.

WORKSHOP FOR RENT
AT THANEERPANDAL ROAD WITH 5HP POWER SUPPLY 1200 SQFT BEHIND NOYYAL SUPER MARKET
CT: 96559 91887


இடம் விற்பனை
வடவள்ளி to கணுவாய் மெயின் ரோடு 15 செண்ட் (கிழக்கு) விற்பனைக்கு.
93601 18066

ஆட்கள் தேவை
நாகர்கோவில் to திருநெல்வேலி வீட்டுமனைகள் விற்க ஆண் பெண் தேவை.
6385434442

ரப்பர் வெட்டும் தொழிலாளர்கள் குடும்பத்துடன் தேவை
பாலக்காடு, கேரளா
தங்கும் வசதி உள்ளது
94477 69114 | 044 - 6378118

இடம் விற்பனைக்கு
சிவகங்கை மாவட்டம், சிவகங்கை to இளையான்குடி மெயின் ரோட்டில் 250 ஏக்கர் மொத்த இடம் விற்பனைக்கு தயாராக உள்ளது.
தொடர்புக்கு :
98434 88428 / 94420 78428

Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS



VISIT:VILAMBARAM.COM CONTACT: 8122798599

COMMERCIAL COMPLEX FOR RENT



3 FLOORS with Lift
EACH Floor AREA, 3000 sqft,
1st, 2nd, 3rd Floor Available
Corner Side 2 way Entrance
KKR GARDEN 3rd Main Road, Madhavaram, Chennai - 60
Nr. Metro Rly Stn & Anthony Hospital.
Cell: 98846 25240 / 98843 38911

CREST THE BEST @ ANAKAPUTHUR
SPOT BOOKING OFFERS




1 BHK FLAT ₹.22.99 L*
2 BHK FLAT ₹.38.50 L*
3 BHK FLAT ₹.56.99 L*
Onwards
visit our site www.crest.homes
CREST HOMES PVT LTD
Elegant Affordable...
89399 65050

DTCP APPROVAL
அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை அங்கீகாரம் பெற
&
பில்டிங் பிளான் APPROVAL
லே அவுட் APPROVAL
84381 83848



# பல்சுவை களஞ்சியம்



## ஆனி விசாகம் - சிறப்பு





ஆனி விசாகம் என்பது திரு முருகப்பெருமானுடன் தொடர்புடைய ஒரு முக்கியமான பவித்ரமான நாளாகும். விசாக நக்ஷத்திரமும் ஆனி மாதமும் ஒன்றாக கூடும் நாளில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இந்த நாளின் சிறப்பு, பக்தர்கள் சிவபெருமானின் மகனான முருகப்பெருமான் மீது கொண்டுள்ள பக்தி மற்றும் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.

ஆனி விசாகத்தின் முக்கியத்துவம்:

முருகப்பெருமானின் தோற்ற நாள் எனவும் சில புராணங்கள் குறிப்பிடுகின்றன.

முருகன், தாரகாசுரனை வென்று உலகிற்கு அமைதியை வழங்கிய நாளாகவும் இந்நாள் கருதப்படுகிறது.

இந்த நாளில் முருகனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், அர்ச்சனை செய்து, சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகின்றன.

வழிபாட்டு முறை:

1. திருமஞ்சனம் மற்றும் அபிஷேகம்:

முருகப்பெருமானுக்கு பால், தயிர், இளநீர், சண்பல், தேன், பஞ்சாமிர்தம் ஆகியவற்றால் அபிஷேகம் செய்யப்படுகிறது.

சிலர் வேங்காயம், பூண்டு தவிர்ந்த சுத்த சைவ உணவை உண்டு விரதமாக இருப்பர்.

2.அலங்காரம் மற்றும் பூஜை:

முருகனை பூவாலும், இலைகளாலும் அழகாக அலங்கரிக்கப்படுகிறது.

கந்த சஷ்டி கவசம், சுப்பிரமணிய புஜங்கம், திருமுறைகள், திருப்புகழ் உள்ளிட்ட பாடல்கள் பாடப்படுகின்றன.

3.வெள்ளிக்கிழமையும் விசாக நக்ஷத்திரமும் சேர்ந்தால்:

மிகவும் புண்ணியமான நாளாகக் கருதப்படுகிறது. இந்த நாளில் வழிபாடு செய்தால் குபேரன் போல செல்வ வளம் ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

4.விரதம்:

சிலர் இந்நாளில் விரதம் இருந்து, அன்னம் தவிர்த்து பழம், பசுமை உணவு மட்டும் உட்கொண்டு விரத பாவனையுடன் பக்தியில் ஈடுபடுவர்.

ஆனி விசாக வழிபாட்டின் பலன்கள்:

சுபசிரம், திருமண தடை நீக்கம், நல்ல வேலை வாய்ப்பு, புத்திர பாக்கியம் போன்ற பல பாக்கியங்கள் கிடைக்கும்.

குடும்பத்தில் அமைதி நிலவ, சனிகிரக தோஷம் அகலும்.

பக்தியின் மூலம், உள்ளத்தில் நேர்மை, மன அமைதி ஏற்படும்.

**-அரவிந்தன்**
தஞ்சை.

## அடுத்தவன் என்ன பண்றான்னு... அவன் வேலையிலே தலையிடக் கூடாது...

வங்கிக்கு புதிதாக வந்த மேனேஜர் வங்கியின் கணக்கு வழக்குகளை சரி பார்த்துக் கொண்டிருந்தார். அதில் ஒரு அக்கௌண்ட்டில் மட்டும் தினமும் 1000 ரூபாய் போடப்பட்டு வந்தது. ஒரு நாள் கூட தடையில்லாமல் அந்த கணக்கில் போடப்பட்டு வந்தது. இடையில் ஞாயிறு போன்ற விடுமுறை தினங்கள் வந்தால் அன்றைக்கும் சேர்த்து அடுத்த வேலைநாட்களில் அந்த கணக்கில் சேர்க்கப்பட்டு வந்தது கண்டு அதிசயித்தார்.

கேஷியரை கூப்பிட்டு "யாருய்யா அந்த ஆள்" என்று கேட்டார். "தெரியலை சார்... தினமும் காலையில் 10 மணிக்கு டான்னு வருவார், பணத்தை போடுவார்... போய்ட்டே இருப்பார். ஆள் கொஞ்சம் சிடுமூஞ்சி மாதிரி இருக்கிறதால நாங்கலாம் யாரும் பேசுறதில்லை சார்" என்றார்.

மேனேஜருக்கு இப்படி ஒரு கேரக்டரை சந்திச்சே ஆக வேண்டுமென்று பெரிய ஆவலாகவிட்டது. அடுத்த நாள் காலையிலேயே வந்து காத்திருந்து அந்த நபர் வந்தவுடன் பக்கத்தில் போய் பேச்சு கொடுக்க முயன்றார். அந்த நபரோ இவரை கண்டு கொள்ளாமல் போய்விட்டார். அவர் புறக்கணித்ததும் வங்கி மேனஜருக்கு அவருடன் பழகி அவர் ஏன் தினமும் ஆயிரம் ரூபாய் வங்கியில் போடுகிறார் என்றும் கண்டுபிடிக்க வேண்டும் என்று பெரிய வெறியே ஆகிவிட்டது.

தினமும் பணம் செலுத்தும் இடத்தின் அருகே நிற்பது, சிரிப்பதுமாய் இருந்து அந்த நபரும் லேசாக புன்னகைக்க துவங்கியிருந்தார்.

ஒரு நாள் மேனஜர் வரும் வழியில் அந்த ஆயிரம் ரூபாய் பார்ட்டி வண்டி பழுதாகி ரோட்டில் நின்றிருந்தார். மேனேஜர் லிஃப்ட் கொடுத்து வங்கிக்கு அழைத்து வரவே கொஞ்சம் பேசவும் துவங்கியிருந்தார். ஒரு நாள் அவரிடம் மேனேஜர் "சார் நாமதான் நண்பர்களாகிட்டோம்ல இப்பவாவது சொல்லுங்க, எதுக்கு தினமும் ஆயிரம் ரூபாய் பேங்ல போடுறீங்க. அப்படி என்ன வருமானம் வரும்படி தொழில் செய்யறீங்க" என்று கேட்டார்.

"சார், நான் வேலையெல்லாம் பாக்கலை, தொழிலும் செய்யலை, நான் தினமும் பந்தயம் கட்டுவேன்... அதுல எப்படியும் ஜெயிச்சுருவேன், அந்த காசுதான் சார் அது" என்றார்.

மேனேஜருக்கு நம்பமுடியவில்லை, அது எப்படி தினமும் ஒருத்தன் பந்தயத்தில ஜெயிக்க முடியும், இந்தாளு பொய் சொல்றான் என்று எண்ணிக்கொண்டார். அவரின் முகமாற்றத்தை கண்ட அவன் "சார் இதுக்குதான் நான் யாரிடமும் இந்த பந்தய மேட்டரை சொல்வதில்லை" என்றார். அப்படியும் சந்தேகமாய் பார்த்த மேனேஜரிடம் "சரி சார், நாம ரெண்டு பேருமே இப்ப ஒரு பந்தயம் போடுவோம், நான் ஜெயிக்கலைன்னா பாருங்க" என்றான். டென்சாகிய மேனேஜரும் "சரிய்யா பந்தயத்துக்கு ரெடி என்னய்யா பந்தயம்" ன்னாரு.

"சார், சரியா நாளைக்கு காலையில 10.15 க்கு உங்க 'கால் தொடை பகுதி பச்சைக் கலரா மாறிடும்' ரெண்டாயிரம் ரூபாய் பந்தயம்" என்றான். "யோவ் என்னய்யா சொல்ற, எதாவது நடக்குற கதைய சொல்லு" என்று மேனேஜர் சொல்ல...
"பந்தயத்துக்கு வர்றீங்களா இல்லையான்னு கட் அண்ட் ரைட்டா சொல்லுங்க சார்" ன்னு கேட்டான். "சரி"ன்னு ஒத்துகிட்டார். "காலையில வருவேன் உங்க கால் தொடை பகுதி பச்சை பசேல்ன்னு மாறியிருக்கும் ரெண்டாயிரம் ரூவாயை எடுத்து வைங்க" என்றபடி சென்றுவிட்டான்.



மேனேஜருக்கு எப்படி இவ்வளவு தைரியமா பந்தயம் கட்டுறான் என்று ஆச்சர்யம். அவன் போனவுடன் முதல் வேலையாக பாத்ரூம் சென்று தனது பேண்ட்டை அவிழ்த்து கண்ணாடியில் முன்னும் பின்னும் தொடை பகுதியை பார்த்தார், அது வழக்கம் போல் கன்னங்கரேல் என்று என்றுதான் இருந்தது. இருந்தாலும் அவருக்கு இருப்பு கொள்ளவில்லை... அரைமணிக்கொரு முறை பேண்ட்டை அவிழ்த்து பார்க்கவும் போடுவதுமாய் இருந்தார்.

விடிந்தது...
முதல் வேலையாக அதை போய் பார்த்தார், இப்பவும் அப்படியே கருப்பாகவே இருந்தது. நம்ம கால் தொடையாவது பச்சை கலராகிறதாவது என்று அவரே சமாதானம் சொல்லிக்கொண்டே குளித்து அலுவலகம் கிளம்பினார்.

எங்கே பஸ்ஸில் உட்கார்ந்தால் எதும் செட்டப் செய்து நிறம் மாற செய்து விடுவார்களோ என்று எண்ணி நடந்தே போனார். பத்து மணி அலுவலகத்துக்கு 9 க்கே வந்துவிட்டாலும் 10 நிமிடத்துக்கு ஒரு முறை போய் போய் பார்த்து உறுதி செய்தபடியே இருந்தார்.

இன்னைக்கு அவனை ஜெயிச்சு ரெண்டாயிரம் ரூபாயை வாங்கிறனும் என்று ஆவலோடு காந்திருந்தார். சொல்லி வைத்தாற்போல் சரியாக 10.15 அவன் அந்த அறைக்குள் நுழையவே வேகமாய் சீட்டிலிருந்து எழுந்து தனது பேண்ட்டை கழட்டி நின்று " இந்தா பார்த்துக்கோ அப்படியே கருப்பாதான் இருக்கு" என்று முன்பக்கத்தையும் பின்பக்கத்தையும் காட்டினார். அவன் உடனே அருகிலிருந்தவனிடம்...

"நீ என்னமோ பேங்க் ஆபிசர், பெரிய மனுசன், அப்படியெல்லாம் செய்யமாட்டருன்னு சொன்ன, இப்ப என்ன சொல்லுறே, எடு மூவாயிரத்தை" என்றான்.

அப்போதுதான் கவனித்தார் பந்தயக்காரனுடன் வேறு ஒருவனும் வந்திருந்தான். அவனும் மேனேஜரை முறைத்தபடி மூன்றாயிரம் ரூபாய் எடுத்து நீட்டினான். அதை வாங்கிய பந்தயக்காரன் இரண்டாயிரம் ரூபாய்களை மேனேஜரிடம் நீட்டி "உங்கிட்ட கட்டின பந்தயத்தில நான் தோத்துட்டேன், ஆனா இவன்கிட்ட கட்டின பந்தயத்தில ஜெயிச்சுட்டேன், ஆயிரம் ரூபாய் லாபம்" என்று வழக்கமாய் பணம் கட்டும் கவுண்ட்டருக்கு போய்விட்டான்.

அவனுடன் பந்தயம் கட்டி மூவாயிரம் ரூபாய் தோற்றவனிடத்தில் "நீ எதற்கு அவனிடம் பந்தயம் கட்டினாய்" என்று மேனஜேர் கேட்க வந்தவன் கடுப்பாகி அவரிடம் "போய்யா நீயெல்லாம் ஒரு பேங்க் ஆபிசரா ? என்னை பார்த்தவுடனே பேண்டை கழட்டி காமிப்பாருன்னு சொன்னான், ச்சேசே அப்படியெல்லாம் இருக்காதுன்னு உன்னை நம்பி பந்தயம் கட்டினா இங்க நீ ரெண்டாயிரம் ரூபாய்க்கு இவ்வளவு கேவலமான வேலை செய்யற... த்தூ..." என்று துப்பிவிட்டு போனான்.

இதனால் அறியப்படுவது என்னன்னா... அவனவன் வேலையை அவனவன் பார்க்கணும், அடுத்தவன் எப்படி சம்பாதிக்கிறான், என்ன பண்றான்னு அடுத்தவன் வேலையிலே தலையிடக் கூடாது.



# மீம்ஸ்









## விடுகதை

| | |
|---|---|
| உடம்பெல்லாம் தங்கநிறம், தலையில் பச்சை கிரீடம் அது என்ன? | அன்னாசிப் பழம் |
| குண்டுச் சட்டியில் கெண்டை மீன். அது என்ன? | நாக்கு |
| கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்? | மெழுகுத்திரிவத்தி |
| நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன? | நாய் |
| நீண்ட உடம்புக்காரன், நெடுந்தூரப் பயணக்காரன்? | ரயில் |
| எடுக்க எடுக்க வளரும். எண்ணெயைக் கண்டால் படிந்துவிடும். அது என்ன? | முடி |



# ஜோக்ஸ்

காதல் One Side -ஆ பண்ணினாலும்
Two Side-ஆ பண்ணினாலும்
கடைசியா Suicide- தான் பண்ணக்கூடாது

இப்படிக்கு
காதல் பற்றி Four Side-ம் யோசிப்போர் சங்கம்

————————————————

உன் பெயரைக்கூட நான் எழுதுவதில்லை..
ஏன் தெரியுமா?
"பேனா" முனை உன்னை குத்திவிடுமோ என்று..

இப்படிக்கு
Spelling தெரியாமல் சமாளிப்போர் சங்கம்

————————————————

"டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே...

இதையேன் பெரிசா சொல்றீங்க...?"

"அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!"

————————————————

ஒருவர்: டாக்டர் செலவு மட்டும் எனக்கு மாசம் ஐந்நூறு ரூபாய் ஆகுது.


மற்றொருவர்: டாக்டரோட செலவைப் போய் நீங்க ஏன் பண்றீங்க?

————————————————

"சென்னையிலே தண்ணிக் கஷ்டமாமே?"

ஆமா! குடிகாரங்க பெருத்துப் போயிட்டாங்க!"

————————————————



Bank லோன் கிண்டல்..!

"ஹலோ! நாங்க பேங்க்லேர்ந்து பேசறோம், உங்க அக்கவுண்டை பேஸ் பண்ணி உங்களுக்கு 10 லட்ச ரூபாய் வரைக்கும் லோன் சாங்ஷன் ஆகியிருக்கு சார்...

அப்படியா! உடனே அந்தப் பணத்தை என்னோட சேவிங்ஸ் அக்கவுண்ட்லயே போட்டுருங்க!

?!?!?!

————————————————

இஞ்ஜினியரிங் Class Room-ல்..

ஆசிரியர்: என்னடா போயும் போயும் மெக்கானிக்கல் இஞ்ஜினியரிங் கிடைச்சுருக்கே அப்படீன்னு யாரும் வருத்தப்படவேண்டாம், என்னோட ஃபிரெண்ட் ஒருத்தன் திருச்சில 5000 ரூபாய் வாங்கிண்டு இருந்தான், இன்னிக்கு மும்பைல 1 லட்சம் வாங்கிட்டுருக்கான்"

மாணவர்: என்ன கடனா?

————————————————

"தேள் கொட்டினால் பயங்கரமா வலி இருக்கும்னு சொல்வாங்க...

நீங்க இப்படி சிரிக்கிறீங்களே...?"

"தேள் கொட்டினது என்னோட மனைவிக்கு...!"

————————————————

திருடன் 1: டேய் நேத்து நாம திருடுன பணத்த எண்ணாமகூட ஒளிச்சி வச்சிட்டோமே.....

திருடன் 2: அதுனால என்ன நாளைக்கு பேப்பர்ல வரும்ல... அப்ப பார்த்துக்கலாம்.

————————————————

"என் உயிரைக் காப்பற்றிய நர்சையே நான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன்."

"எப்படிக் காப்பாத்தினா?"

"ஆபரேசன் ரூமிலேயிருந்து பின்வழியா என்னைத் தப்பிச்சிப் போக வச்சது அவதான்!"

# வாங்க சம்பாதிக்கலாம்



## அழைக்கிறது இந்திய ரயில்வே



இந்திய ரயில்வேயில் காலியிடங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசிநாள் நவ. 27ல் இருந்து டிச. 4க்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

கமர்சியல் டிக்கெட் கிளர்க் 2424, அக்கவுண்ட்ஸ் கிளர்க் – டைப்பிஸ்ட் 394, ஜூனியர் கிளர்க் – டைப்பிஸ்ட் 163, ரயில் கிளர்க் 77 என மொத்தம் 3058 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: பிளஸ் 2, தட்டச்சு சான்றிதழ்.
வயது: 18–30 (27.11.2025ன் படி)
தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பக்கட்டணம்: ரூ. 500. பெண்கள் / எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250
கடைசிநாள்: 4.12.2025
விவரங்களுக்கு: rrbapply.gov.in

## இந்தியன் ஆயில் நிறுவனத்தில் 2757 பணியிடங்கள்



இந்தியன் ஆயில் நிறுவனத்தில் (ஐ.ஓ.சி.,) காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.
'டிரேடு', 'டெக்னீசியன்' அப்ரென்டிஸ் பதவியில் மெக்கானிக்கல், கெமிக்கல், எலக்ட்ரிக்கல், இன்ஸ்ட்ரூ மென்டேசன், அக்கவுன்ட்ஸ் உள்ளிட்ட பிரிவுகளில் மொத்தம் 2757 இடங்கள் உள்ளன.
கல்வித்தகுதி: ஐ.டி.ஐ., / டிப்ளமோ / பி.எஸ்சி., / பி.காம்.,
வயது: 18–24 (30.11.2025ன் படி)
தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு.
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
கடைசிநாள்: 18.12.2025
விவரங்களுக்கு: iocl.com

## நல்ல வேலை நல்கும் கம்பெனி செகிரட்டரி படிப்பு

நல்ல வேலைவாய்ப்பை வழங்கக் கூடிய கம்பெனி செக்ரட்டரி (ACS) படிப்பை வழங்குகிறது இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி செக்ரட்டரிஸ் ஆஃப் இந்தியா (The Institute of Company Secretaries of India). நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்டது இந்த அமைப்பு. சென்னை, மும்பை, கொல்கத்தா, டெல்லி ஆகிய நகரங்களில் இதன் மண்டல அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. கோவை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் இதன் பிரிவு அலுவலகங்கள் உள்ளன.



ரூ.5 கோடியும் அதற்கு மேலும் மூலதனம் செய்யப்பட்ட கம்பெனிகள் கட்டாயம் ஒரு கம்பெனி செக்ரட்டரியை நியமிக்க வேண்டும் என்பது கம்பெனிகள் சட்ட விதி. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள் முழு நேர கம்பெனி செக்ரட்டரியை நியமிக்க வேண்டும். சர்டிஃபிகேட் ஆஃப் பிராக்டிஸ் சான்றிதழை இன்ஸ்டிடியூட்டில் பெற்ற பிறகு தனியே பிராக்டிஸ் செய்யலாம். ரூ.10 லட்சம் பங்கு முதலீட்டில் (Paid-up share Capital) அல்லது ரூ.5 கோடிக்குக் குறைவாக உள்ள நிறுவனங்களில் கம்பெனி செக்ரட்டரி சான்றிதழ் பெற்றவர்கள் அவசியம் தேவை. கம்பெனி செக்ரட்டரி சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட சான்றிதழ்களை வழங்குவதும் கம்பெனி செக்ரட்டரி தான்.

நிர்வாகத் தலைவர், தலைமை செயல் அதிகாரி, இயக்குநர்கள், தலைமை நிதி அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட வேண்டியதிருக்கும். பெரிய தொழில் நிறுவனங்கள் பெருகி வரும் இக்காலத்தில் கம்பெனி செக்ரட்டரியின் பங்கு மிகவும் முக்கியமானது. தொழில் நிறுவனத்தின் சட்ட நிர்வாகியாக மட்டுமல்லாமல், நிதி நிர்வாகம், பணியாளர் நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளிலும் நிர்வாகம் செய்வதில் கம்பெனி செக்ரட்டரிகளின் பங்கு முக்கியமானது.

செபி, ரிசர்வ் வங்கி போன்ற அரசு அமைப்புகளின் விதிமுறைகளை தொழில் நிறுவனங்கள் பின்பற்றுகிறதா என்பதைக் கண்காணித்து நடைமுறைப்படுத்துவதும் கம்பெனி செக்ரட்டரிகளின் பணிகளில் அடங்கும். நிர்வாக இயக்குநர்களின் கூட்டத்தின் தீர்மானங்களை வரையறை செய்யவும், அதனை ஒருங்கிணைக்கும் பணியும் அவர்களுக்கு உண்டு.

கம்பெனி செக்ரட்டரி எக்ஸிகியூட்டிவ் நுழைவுத் தேர்வை (CSEET) பிளஸ் டூ படித்த மாணவர்கள் எழுதலாம். 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இத்தேர்வில் மாற்றம் செய்யப்படுகிறது. பிசினஸ் கம்யூனிக்கேஷன், ஃபண்டமெண்டல்ஸ் ஆஃப் அக்கவுண்டிங், எகனாமிக் அண்ட் பிசினஸ் என்விரான்மெண்ட், பிசினஸ் லா அண்ட் மேனேஜ்மெண்ட் ஆகிய நான்கு பாடப்பிரிவுகளில் இத்தேர்வை எழுத வேண்டியதிருக்கும்.

கம்பெனி செக்ரட்டரி புரோகிராம் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று நேரடிப் பயிற்சியை முடிக்கும் மாணவர்கள் கம்பெனி செக்ரட்டரி இன்ஸ்டிட்யூட்டில் அசோசியேட் உறுப்பினராகப்பதிவு செய்யலாம். தற்போது சுமார் 74 ஆயிரம் உறுப்பினர்களும் 2 லட்சம் மாணவர்களும் உள்ளனர்.

கம்பெனி செக்கரட்டரி படிப்பை முதுநிலைப் படிப்பாகப் பல்கலைக்கழக மானியக் குழு அங்கீகரித்துள்ளது. இந்தப் படிப்பைப் படித்து முடித்தவர்கள் பல்வேறு பல்கலைக்கழகங்களில் நேரடியாக பிஎச்டி படிக்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்திராகாந்தி திறந்த நிலை பல்கலைக்கழகத்துடன் இன்ஸ்டியூட் ஆஃப் கம்பெனி செகரட்டரீஸ் ஆஃப் இந்தியா அமைப்பு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து இருக்கிறது. அதன் அடிப்படையில், அங்கு பி.காம்., எம்.காம். படிக்கும் மாணவர்களுக்கு சில பாடங்களை எழுதுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. இதேபோல, காஸ்ட் அக்கவுண்டிங், எல்.எல்.பி. படித்துவிட்டு, கம்பெனி செக்ரட்டரிஷிப் படிப்புவர்களுக்கு சில பாடங்களை எழுதுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு: www.icsi.edu

## வேலை காத்திருக்கும் சி.ஏ. படிப்பு



பிளஸ் டூ வகுப்புகளில் வணிகவியல், கணக்குப்பதிவியல், பொருளாதாரம் போன்ற பாடப்பிரிவுகளை எடுத்துப் படிக்கும் மாணவர்களின் முதல் தேர்வு பி.காம்தான். பி.காம். படிக்க விரும்பும் மாணவர்களுக்கு ஏற்ற முக்கியப் படிப்பு சி.ஏ. இதில் இடம் கிடைப்பது சிரமம் இல்லை. கட்டணமும் அதிகம் இல்லை. ஆனால், கடுமையாகப் படித்தால்தான் தேர்வுகளில் தேர்ச்சி பெற முடியும். தேர்ச்சி பெற்றவுடனே காத்திருக்கிறது ஆடிட்டர் வேலை.

இந்திய நாடாளுமன்றச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட இன்ஸ்டிடியூட் ஆஃப் சார்ட்டர்ட் அக்கவுண்டன்ஸ் ஆஃப் இந்தியா அமைப்பு, சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட் தேர்வுகளை நடத்துகிறது. ஆடிட்டர் ஆக வேண்டுமானால், இந்த அமைப்பு நடத்தும் தேர்வுகளை எழுதி உரிய சான்றிதழைப் பெற வேண்டும். இந்திய கம்பெனி சட்டம், வருமான வரிச் சட்டம் ஆகியவற்றின்படி தொழில் நிறுவனங்களின் கணக்கு வழக்குகள் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்பட்டு, சான்றிதழ் அளிக்கப்பட வேண்டும். ஆடிட்டரின் சான்றிதழ் இல்லாத தணிக்கை அறிக்கைகளை அரசு ஏற்காது. அந்த அளவுக்கு இந்தப் பணி முக்கியத்துவம் வாய்ந்தது.

நல்ல திறமையானவர்களை இளம் வயதிலேயே கவர்ந்திழுப்பதற்காக இந்த நிறுவனம் பிளஸ் டூ மாணவர்களை சி.ஏ. படிப்பில் சேர்க்கிறது. இதனால் பிளஸ் டூ மாணவர்கள் இப்படிப்பில் நேரடியாகச் சேர்ந்து படித்து, 21 வயதிலேயே சி.ஏ. ஆகிவிட முடியும். அரசுத் துறை நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், வங்கிகள், பன்னாட்டு நிறுவனங்கள், தணிக்கை நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், பங்குச் சந்தை நிறுவனங்கள்... இப்படி சி.ஏ. படித்தவர்களுக்கான வேலைவாய்ப்பு காத்திருக்கிறது. சி.ஏ. முடித்துவிட்டு, வேலைக்காகக் காத்திருக்க வேண்டிய நிலைமை இல்லை. படித்ததும் நல்ல ஊதியத்தில் வேலை காத்திருக்கிறது.

மேலும் விவரங்களுக்கு: www.icai.org

## பங்குச்சந்தை சரிவுடன் வர்த்தகம்! ஐடி, டெலிகாம் தவிர அனைத்து குறியீடுகளும் சரிவு!

பங்குச் சந்தைகள் நேற்று (புதன்கிழமை) சரிவில் தொடங்கி வர்த்தகமான நிலையில் சற்றே சரிவுடன் நிறைவு பெற்றுள்ளன. தொடர்ந்து 3 ஆவது நாளாக பங்குச்சந்தைகள் சரிவுடன் முடிந்துள்ளன.

மும்பை பங்குச் சந்தை குறியீட்டு எண் சென்செக்ஸ் இன்று காலை 85,150.64 என்ற புள்ளிகளில் தொடங்கிய நிலையில் வர்த்தக நேர முடிவில் சென்செக்ஸ் 31.46 புள்ளிகள் குறைந்து 85,106.81 புள்ளிகளில் நிலை பெற்றது. காலையில் சென்செக்ஸ் 300 புள்ளிகள் வரை குறைந்தது.

அதேபோல தேசிய பங்குச் சந்தை குறியீட்டு எண் நிஃப்டி 46.20 புள்ளிகள் குறைந்து 25,986.00 புள்ளிகளில் நிறைவு பெற்றது.

மற்ற அனைத்துத் துறைகளும் சரிந்தாலும் ஐடி, மீடியா மற்றும் தனியார் வங்கிகளின் பங்குகள் நல்ல லாபத்தைப் பெற்றன .

நிஃப்டியில் விப்ரோ, ஹிண்டால்கோ, டிசிஎஸ் உள்ளிட்ட நிறுவனங்கள் நல்ல லாபத்தை பெற்றன. மேக்ஸ் ஹெல்த்கேர், டாடா நுகர்வோர், அதானி நிறுவனங்கள் சரிவைச் சந்தித்தன.



சென்செக்ஸ் நிறுவனங்களில் பாரத் எலக்ட்ரானிக்ஸ் 2.13% என்ற அதிக சரிவைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து டைட்டன், மாருதி சுசுகி, மஹிந்திரா & மஹிந்திரா, எஸ்பிஐ அதிக நஷ்டத்தைச் சந்தித்த நிறுவனங்கள். டிசிஎஸ், இன்போசிஸ், ஐசிஐசிஐ வங்கி, ஹெச்டிஎப்சி, ஆக்சிஸ் வங்கிகள் லாபத்தைச் சந்தித்துள்ளன.

அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாய் மதிப்பு வரலாறு காணாத அளவுக்கு சரிந்து ரூ. 90–யைக் கடந்துள்ளது, இந்திய ரிசர்வ் வங்கியின் கூட்டம், மோடி – புதின் சந்திப்பு, வெளிநாட்டவர்களின் பங்குகள் விற்பனை, வங்கித்துறை பங்குகள் சரிவு உள்ளிட்டவை பங்குச்சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

## தங்கம் விலை குறைவு! இன்றைய நிலவரம்!

சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.96,480–க்கு விற்பனையாகிறது.

சென்னையில் தங்கம் விலை தொடர்ந்து உயர்ந்து வந்த நிலையில், திங்கள்கிழமை பவுன் ரூ.720 உயர்ந்து ரூ.96,560–க்கு விற்பனையானது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை கிராமுக்கு ரூ.30 குறைந்து ரூ.12,040–க்கும், பவுனுக்கு ரூ.240 குறைந்து ரூ.96,320–க்கும் விற்பனையானது.

இந்த நிலையில், புதன்கிழமை(டிச.3) தங்கத்தின் விலை புதன்கிழமை பவுனுக்கு ரூ.160 உயர்ந்தது .

அதன்படி, கிராமுக்கு ரூ.20 உயர்ந்து ரூ.12,060–க்கும், பவுனுக்கு ரூ.160 உயர்ந்து



ரூ.96.480–க்கு விற்பனையாகிறது.

வெள்ளி விலை

அதேபோன்றும், வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 அதிகரித்து கிராம் ரூ.201–க்கும் ஒரு கிலோ(கட்டி வெள்ளி) ரூ.2 லட்சத்து ஆயிரத்துக்கு விற்பனையாகிறது.




இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## அரசு மகளிர் கல்லூரியில் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான பூமி பூஜை



கோவை அரசு கலை கல்லூரி மற்றும் அரசு மகளிர் கல்லூரியில் புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான பூமி பூஜை புளியகுளம் அரசு மகளிர் கல்லூரியில் நடந்தது. பணிகளை வானதி சீனிவாசன் எம்எல்ஏ துவக்கி வைத்தார்

## கொத்தடிமை தொழில் முறை ஒழிப்பு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி



ஈரோடு ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நேற்று தொழிலாளர் துறை சார்பில் மனித கடத்தல் மற்றும் கொத்தடிமை தொழில் முறை ஒழிப்பு குறித்த மாவட்ட அளவிலான பயிற்சி கலெக்டர் கந்தசாமி தலைமையில் நடந்தது.

## ஆபரேஷன் தியேட்டருக்கு ரூ.45ஆயிரம் மதிப்புள்ள மின்விளக்கு



கோவை அரசு மருத்துவமனை ஆபரேஷன் தியேட்டருக்கு ரூ.45ஆயிரம் மதிப்புள்ள மின்விளக்குகளை ராவ் மருத்துவமனை இயக்குநர் ஆஷாராவ், வழங்கினார்.

## 23 கிலோ வெண்கலை பாத்திரத்தில் மகா தீபம்



கோவில்பட்டி சொர்ணமலை கதிர்வேல் முருகன் கோயிலில் 23 கிலோ வெண்கலை பாத்திரத்தில் மகா தீபம் ஏற்றப்பட்டது.

## ஆரம்ப சுகாதார நிலையத்தில் கலெக்டர் திடீர் ஆய்வு



குமரி செண்பகராமன் புதூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கலெக்டர் அழகுமீனா திடீர் ஆய்வு செய்தார்.

# சொக்கப் பனையில் தீபம்



திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயிலில் கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, சொக்கப் பனையில் தீபம் ஏற்றப்பட்டது.

## வந்தவாசி - வெண்குன்ற தவளகிரீஸ்வரர் மலைக்கோவிலில் அரோரா கோஷத்துடன் மகாதீபம்...!


**வந்தவாசி, டிச 04:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசியில் இருந்து சுமார் மூன்று கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள வெண்குன்றம் கிராமத்தில் சுமார் 1400 அடி உயரமுள்ள தொலைவில் உள்ள தவளகிரீஸ்வரர் மலைக்கோயில் அமைந்துள்ளது.

இந்த மலை மீது தவளகிரிஸ்வரர் கோவிலும், அம்பாள், விநாயகர், முருகர், சண்டிகேஸ்வரர் கோயில்களும் அமையப் பெற்றுள்ளது.

இந்த மலை மீது நேற்று திருக்கார்த்திகை தீபம் முன்னிட்டு மலைக் கோவிலில் மகாதீபம் ஏற்றப்பட்டது.

வந்தவாசி நிர்வாகம் சார்பில் மலை மீது ஏறுவதற்கு பக்தர்களுக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் கோவில் நிர்வாக குழு உறுப்பினர்கள் மட்டுமே மலை மீது ஏறி மகா தீபத்தை ஏற்றினர்.



மேலும் மகா தீபம் காண வந்த பக்தர்கள் மலை அடிவாரத்தில் மகாதீபம் ஏற்றப்பட்ட உடன் அரோகரா கோஷத்துடன் வழிபாடு நடத்தினர்.

மேலும் காலை முதலே மலைக் கோவில் அடிவாரத்தில் சிறப்பு அலங்காரத்தில் வைக்கப்பட்ட உற்சவ மூர்த்திகளுக்கு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடு நடத்தினர்.

அனுமதி பெற்ற தன்னார்வ அமைப்புகள் மூலம் அன்னதானம் வழங்கப்பட்டது.

மேலும் எக்ஸ்னோரா கிளை சார்பில் மஞ்சப்பை விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. வட்டாட்சியர் எஸ்.சம்பத் குமார் தலைமையில் காவல்துறையினர், மருத்துவ துறையினர், தீயணைப்பு வீரர்கள், சமூக ஆர்வலர்கள் பலரும் ஒன்றிணைந்து பணியாற்றினர்.

**பா. சீனிவாசன் வந்தவாசி.**

## கார்த்திகை மகாதீபம்



கார்த்திகை திருநாளையொட்டி, சிவகங்கை மாவட்டம் பிரான்மலை, திருமலையில் நேற்று கார்த்திகை மகாதீபம் ஏற்றப்பட்டது.

## நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணி



திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், ஊதியூரில் நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் ரூ. 177கோடி மதிப்பில் ஈரோடு-தாராபுரம் சாலையில் நத்தக்காடையூர் முதல் காங்கேயம்-ஊதியூர்-குள்ளாயிபாளையம் வரை இரண்டு வழிச்சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்தும் பணிகளை அமைச்சர்கள் சுவாமிநாதன், கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர். கலெக்டர் மனிஷ் நாரணவரே அதிகாரிகள் உடன் உள்ளனர்.

## விவேகானந்தர் பாறையில் மகாதீபம் ஏற்றும் நிகழ்வு



கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் நேற்று மாலை கார்த்திகை மகாதீபம் ஏற்றும் நிகழ்வு நடைபெற்றது.

## வட தண்டலம் அருள்மிகு ஸ்ரீதண்டலபுரீஸ்வரர் கோயிலில் சிறப்பு தரிசனம்




**செய்யாறு, டிச.02:**

செய்யாறு அடுத்த வட தண்டலம் கிராமத்தில் எழுந்தருளி யிருக்கும் அருள்மிகு தவமுலைநாயகி உடனாய ஸ்ரீதண்டல புரீஸ்வரர் கோயிலில் கார்த்திகை மாதம் தீபத் திருவிழா முன்னிட்டு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடைபெற்றது.

சிறப்பு அலங்காரத்தில் ஸ்ரீதண்டல புரீஸ்வரர் பக்தர்களுக்கு அருள் பாலித்தார். திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

## சிறப்பு அலங்காரத்தில் மகாமாரியம்மன்



**ஈரோடு, டிச.04:**

03.22.2025 புதன்கிழமை ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி வட்டம் குளூர் ஊராட்சி ஆண்டக்கொத்தாம்பாளையம் ஸ்ரீமகாமாரியம்மன் பொங்கல் திருவிழா சிறப்பு அலங்காரத்தில் மகாமாரியம்மன் அருட்காட்சி. வாழ்க வளமுடன்

## திமுக சார்பில் இலவச பயிற்சி



அயல்நாட்டு பணிக்கு செல்லவிருக்கும் இளைஞர்களுக்கு திருச்சி தெற்கு மாவட்ட திமுக சார்பில் இலவச பயிற்சி முகாமினை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி துவக்கி வைத்து பேசினார்.

## அதிமுக அரசின் சாதனை துண்டுப் பிரசுரங்கள்



கரூர் கோடங்கிபட்டியில் முன்னாள் அமைச்சர் எம்.ஆர். விஜயபாஸ்கர் நேற்று மக்களை சந்தித்து அதிமுக அரசின் சாதனை துண்டுப் பிரசுரங்களை வழங்கினார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி



உலக மாற்றுத்திறனாளிகள் தினத்தையொட்டி சேலத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டுப் போட்டி நடந்தது.

## திருக்காமீஸ்வரர் கோவிலில் பக்தர்கள் தீபம் ஏற்றி வழிபட்டனர்




புதுச்சேரி வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோவிலில் நேற்று பக்தர்கள் தீபம் ஏற்றி வழிபட்டனர்.

## ரவுசு மணி

ஈரம் இருக்கும் வரை மரத்திலிருந்து இலைகள் உதிர்வதில்லை...

மனதில் நம்பிக்கை இருக்கும் வரை முயற்சிகள் வீணாவதில்லை...



V. முத்து ராமகிருஷ்ணன்

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் ஒற்றுமை வளர்ப்போம் உறுதிமொழி

**புதுக் கோட்டை, டிச.04:**

உலக மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு புதுக் கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் மு சீனிவாசன் தலைமையில் ஒற்றுமையை வளர்ப்போம் உறுதிமொழி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டது மாற்றுத்திறனாளிகளை மனிதத்தன்மையுடன் நடத்துதல் அவர்களுக்கு நிகரான உரிமையை வழங்குதல் ஒற்றுமை வளர்த்தல் ஆகியவை உறுதிமொழியாக எடுத்துக் கொள்ளப்பட்டது.



ஆசிரியர்கள் மாலதி, சரண்ராஜ், பிரதீபா மற்றும் மாணவர்கள் 65 பேர் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

# வேலைவாய்ப்பு கார்னர்

## ரூ.80,000 கையில் சம்பளம்; மத்திய காப்பீடு நிறுவனத்தில் 300 நிர்வாகி அதிகாரி வேலை

மத்திய அரசின் துறைகளில் பணி செய்ய விரும்புகிறவர்களுக்கு சூப்பர் வாய்ப்பு இதுதான். மத்திய காப்பீடு நிறுவனமான ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியில் காலியாக உள்ள நிர்வாக அதிகாரிகள் பதவியை (OTCL Administrative Officers Recruitment 2025) நிரப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, இந்த வருடம் மொத்தம் 300 காலிப்பணியிடங்கள் நிரப்பப்படுகிறது. அதில் 285 பொதுப்பிரிவு மற்றும் 15 இந்தி அதிகாரி பதவிகள் நிரப்பப்படுகிறது.

பொதுப்பிரிவு அதிகாரி பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்புகிறவர்கள் ஏதேனும் ஒரு பாடப்பிரிவில் பட்டப்படிப்பு அல்லது முதுகலை பட்டப்படிப்பை முடித்திருக்க வேண்டும். பட்டப்படிப்பில் 60 சதவீத மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 30.11.2025 தேதியின்படி, குறைந்தபட்சம் 21 முதல் அதிகபடியாக 30 வயது வரை இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் 1995 டிசம்பர் 1 தேதிக்குள் முன்னரும், 30.11.2004 தேதிக்கு பின்னரும் பிறந்திருக்கக்கூடாது. வயதில் தளர்வு உள்ளது.

இப்பணியிடங்களுக்கு ஆர்வமாக உள்ளவர்கள் முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியவை மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல்நிலைத் தேர்வு 100 மதிப்பெண்களுக்கு கொள்குறி வகையில் நடைபெறும். ஆங்கிலம், நுண்ணறிவு, பகுத்தறியும் திறன் ஆகியவற்றை கொண்டு நடைபெறும். இதில் தகுதிப்பெறும் நபர்கள் முதன்மைத் தேர்விற்கு தகுதிப் பெறுவார்கள். இத்தேர்வு கொள்குறி வகையில் 200 மதிப்பெண்களுக்கு நடைபெறும். 30 மதிப்பெண்களுக்கு விரிவாக விடையளிக்கும் வகையில் அமையும். ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளில் வினாத்தாள் அமையும்.

நிர்வாக அதிகாரி பதவிக்கு தேர்வாகும் நபர்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ.50,925 ஆகும். அதன்படி, ரூ.50,925 முதல் 96,765 வழங்கப்படும். ஒரு மாதத்திற்கு தோராயமாகும் ரூ.85,000 சம்பளம் வழங்கப்படும்.

இப்பணியிடங்களுக்கு https://orientalinsurance.org.in/careers என்ற இணையதளத்தில் ஆன்லைன் லிங்க் வெளியிடப்பட்டுள்ளது. அதில் உரிய ஆவணங்களை கொண்டு விண்ணப்பிக்க வேண்டும். தமிழ்நாட்டில் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருச்சி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தேர்வு மையம் அமைக்கப்படும்.

# சுற்றுலா: கொல்லிமலைக்கு போன இந்த இடத்த மிஸ் பண்ணாம பாருங்க...



கிழக்குத் தொடர்ச்சி மலைகளின் உச்சியில் உள்ள காடுகளின் வழியாக திகைப்பூட்டும் மிகவும் வளைந்து செல்லும் சாலை. தென்னிந்தியாவின் அதிக எண்ணிக்கையிலான ஹேர்பின் வளைவுகளில், முகத்திற்கு எதிராக குளிர்ந்த காற்றுடன் உலாவி வளைந்து செல்வது ஒவ்வொரு பைக்கருக்கும் ஒரு சொர்க்கமே தவிர வேறில்லை.

கொல்லிமலை தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்தது. திருச்சி போன்ற முக்கிய மையங்களிலிருந்து வெகு தொலைவில் இல்லை. கொல்லிமலையின் பல தனித்துவமான அடையாளங்களில், சுழலும் 70 ஹேர்பின் வளைவுகளை மோட்டார் சைக்கிள் ஆர்வலர்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டும். மலை மீது சவாரி செய்யும் போது, வெப்பநிலை வெப்பத்திலிருந்து குளிர்ச்சியாக மாறுகிறது, மேலும் மாறிவரும் காட்சிகள் வியத்தகு ஒன்றாகும். முகத்தை எதிர்க்கும் குளிர் காற்று, வளைவுகளும் சாலையும் ஒருபோதும் முடிவடையப்போவதில்லைஎன்பது போல ஒவ்வொரு வளைவின் வழியாகவும், சவாரி செய்பவரை சிலிர்ப்பின் அடுத்த கட்டத்திற்கு அழைத்துச் செல்கிறது.

நீலநிறமலைகளின்பின்னணியில் ஷட்டர்பக்குகள் ஒரு அற்புதமான புகைப்படத்தை எடுக்கக்கூடிய கண்கவர் இயற்கைக்காட்சியை வழியெங்கும் காட்டுகின்றன. இந்த மலைப்பாதையானது தினசரி சலிப்பூட்டும் அலுவலகப் பயணத்தில் இருந்து விலகி, மேலும் மேலும் பயணம் செய்வதற்கான ஆற்றலைப் புதுப்பிக்கிறது. இந்த அற்புதமான இடத்தின் சிறந்த காட்சிகளைப் பார்க்க ஒரு காவற்கோபுரம் உள்ளது.

ஆராயப்படாத நிலப்பரப்பு மற்றும் அடர்த்தியான தாவரங்கள் காரணமாக இந்த இடம் விசித்திரமாகவும் வினோதமாகவும் இருக்கிறது. தமிழ்நாடு வனத்துறையானது அரியூர் சோலை, குண்டூர் நாடு மற்றும் புளியஞ்சோலை ஆகிய மூன்று காப்புக்காடுகளை நிர்வகிக்கிறது.

காபி, மிளகுத் தோட்டங்கள், செம்மேடு தவிர வேறெதுவும் இல்லாத நெல் வயல்களின் மண்டலம் அனைத்தையும் கடந்து சென்ற பிறகு. செம்மேடு ஒரு சில கடைகள், தேநீர் கடைகள் மற்றும் இரண்டு ஹோட்டல்களுடன் உள்ளது. சீக்குபாறை காட்சி முனை மற்றும் ஆகாய கங்கை நீர்வீழ்ச்சிகள் நீண்ட தூரத்தில் நின்று உணரும் இடங்களாகும். நீல வானத்தினை பார்த்தவாறு அமைக்கப்பட்ட பழுப்பு நிற மலைகளால் உச்சரிக்கப்படும் பச்சை பள்ளத்தாக்கின் காட்சி நிச்சயமாக மூச்சடைக்கக்கூடியதாக இருக்கும்.

மலைகள் காபி தோட்டங்கள் மற்றும் பழத்தோட்டங்களுடன் அதிக உயரத்தில் பசுமையான அரியூர் சோலா காடுகளுக்கு உறைவிடமாக உள்ளது. கொல்லிமலைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைக்கும் பிரமாண்டமான நீர்வீழ்ச்சிகள் வானிலிருந்து வரும் கங்கையைத் தவிர வேறில்லை. முதன்மையான சுற்றுலா தலங்களின் பட்டியல் ஆகாயகங்கையில் தொடங்குகிறது, அதாவது வானத்தின் கங்கை என்று பொருள்படும். குன்றின் மீது விழும் மருந்து கலந்த நீர் வெண்ணிறமாக மாறுவதால் இது பார்ப்பதற்கு மிக அழகு.

இது அனைத்து இயற்கை ஆர்வலர்கள், மலையேற்ற ஆர்வலர்கள், சுற்றுலா பயணிகள், தியானம் செய்பவர்கள் மற்றும் பலரை இணைக்கும் களஞ்சியமாகும்.

மாசிலா நீர்வீழ்ச்சி மற்றும் நம்ம அருவி ஆகியவை அருகிலுள்ள மற்ற சிறிய சுற்றுலா இடங்களாகும். அறப்பளீஸ்வரர் சாத்தம் என்பது சங்க காலக் கவிதையாகும், இது அறப்பளீஸ்வரரைப் பற்றி பேசுகிறது, அவருடைய கோவில் மலையடிவாரத்தில் உள்ளது. அறப்பளீசுவரர் மலையிலுள்ள அனைத்து உயிர்களுக்கும் காவலாக நிற்கிறார். இந்தக் கோயில் எட்டுகை அம்மன் அல்லது கொல்லிப்பாவையின் சன்னதியாகவும் உள்ளது, இத்தலம் அதன் பெயரைப் பெற்றது.

மலை உச்சிக்கு பைக் சவாரி செய்வது கடல் மட்டத்திலிருந்து 1400 மீட்டருக்கும் அதிகமான உயரத்தில் இருக்கும், மேலும் தெய்வீக அமைதியான மேகங்கள் மற்றும் மூடுபனிக்கு உங்களை நேரடியாக அழைத்துச் செல்லும்.

சீக்குபாறை வியூபாயின்ட்டில் இருந்து கொல்லி மலையின் கீழ் அடிவாரப்பகுதியில் அமைந்து இருக்கும் காரவள்ளி, சேந்தமங்கலம், பேளுக்குறிச்சி, நாமக்கல், காளப்பநாயக்கன்பட்டி, புதன்சந்தை உள்ளிட்ட ஊர்களின் அழகிய தோற்றத்தை கண்டு ரசிக்கலாம். புகைப்பட பிரியர்கள் மற்றும் இயற்கை ஆர்வலர்களுக்கு மிகவும் ஏற்ற இடம் இது.

## இலங்கையில் சிக்கிய 29 பேர் சென்னை வருகை

**சென்னை, டிச.4:**

சென்னை சேர்ந்த 14 பெண்கள், குழந்தைகள் உட்பட 29 பேர் கடந்த நவம்பர் 25 ம் தேதி 6 நாட்கள் சுற்றுலாவாக சென்னையில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் இலங்கை சென்றனர்.

இலங்கையில் மழை, வெள்ளம், நிலச்சரிவு இருந்ததால், 29 பேரும் தங்கள் பயணத்தை பாதியில் முடித்து விட்டு விமானம் மூலம் சென்னை திரும்ப முடிவு செய்தனர்.

ஆனால் விமான சேவைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டு விட்டதால், இலங்கையிலேயே ஒரு கிராம பகுதியில் தங்கினர்.

இதுபற்றி தகவல் அறிந்ததும், தமிழக முதல்வர் நடவடிக்கை எடுத்ததன் மூலம், இலங்கையில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் மற்றும் இலங்கையின் முன்னாள் கவர்னர் செந்தில் தொண்டைமான் உடனடியாக பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவிகளை செய்தனர்.

அவர்கள் பாதுகாப்பாக சென்னை திரும்புவதற்கு நடவடிக்கை எடுத்தனர். இந்நிலையில், நேற்று இலங்கையில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானத்தில் 29 பேரும் சென்னை திரும்பினர்.

விமான நிலையத்தில் அவர்கள், இலங்கையில் சிக்கி தவித்த எங்களை பத்திரமாக மீட்க நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம் என்றனர்.

## 2.11 லட்சம் ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் நீரில் மூழ்கி சேதம்: அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் தகவல்

**சென்னை, டிச.4:**

தமிழகத்தில் மழையால் 2.10 லட்சம் ஏக்கர் பரப்பளவிலான பயிர்கள் நீரில் மூழ்கி சேதமடைந்துள்ளதாகவும் ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் இழப்பீடு வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளதாகவும் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, சுற்றுவட்டாரப் பகுதிகளில் பெய்து வரும் மழை மற்றும் டிட்வா புயல் பாதிப்புகள் குறித்து எழிலகத்தில் உள்ள மாநில பேரிடர் கட்டுப்பாட்டு மையத்தில் வருவாய்த்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: டிட்வா புயல் காரணமாக இன்று காலை வரை மழை விட்டுவிட்டு பெய்யும் எனவானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை காலை இந்த காற்றழுத்த தாழ்வு மண்டல, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாற வாய்ப்புள்ளது. அப்படி மாறும் பட்சத்தில் மாமல்லபுரத்தில் இருந்து தமிழகத்தின் உள் பகுதிகள் வழியாக செல்லக் கூடும்.

தமிழகத்தில் முதல்கட்ட கணக்கின்படி, 2.11 லட்சம் ஏக்கர் (85,521 ஹெக்டேர்) பரப்பளவிலான பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. மழைநீர் வடிந்த பிறகு சரியான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு நிவாரணம் வழங்கப்படும். மழை பாதிப்பால் இதுவரை 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை, 582 கால் நடைகள் இறந்துள்ளன. 1,601 குடிசை வீடுகள் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்க மாவட்ட நிர்வாகம் கணக்கெடுத்து வருகிறது. கடந்த அக்டோபரில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட வேளாண் பயிர்களுக்கு ஹெக்டேருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

மழை பாதிப்பையொட்டி மொத்தம் 54 நிவாரண முகாம்கள் அமைக்கப்பட்டு, 3,534 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தேவையான உணவு, உடை வழங்கப்பட்டுள்ளது என்றார்.

## புத்தக வாசிப்பு இயக்கம்

**திருச்சி, டிச.4:**

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்க மாநில துணைத் தலைவர் எழுதிய ‘அழகனும் அழகிகளும்’ புத்தக வாசிப்பு இயக்கம் ஞாயிறன்று திருச்சியில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ரெங்கராஜன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சீத்தா வெங்கடேஷ் முன்னிலை வகித்தார். பெண்கள் கிளைத் தலைவர் பாலின் வரவேற்றார். பெண்கள் கிளைச் செயலாளர் செசிலி சிறப்புரை ஆற்றினார். மாநில துணைத்தலைவர் நீலா கள அனுபவங்கள் குறித்து பேசினார். மலைக்கோட்டை கிளை பொருளாளர் சந்திரா நன்றி கூறினார்.

## குந்தவை நாச்சியார் கல்லூரி பருவத்தேர்வு முடிவு வெளியீடு

**தஞ்சாவூர், டிச.4:**

தஞ்சாவூர் மாவட்டம் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரியில் (தன்னாட்சி) 2025-2026 ஆம் கல்வியாண்டின் இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகளுக்கான பருவத் தேர்வு (நவம்பர்- 2025) முடிவுகளை, தேர்வு நெறியாளர் முனைவர் தெ.மலர்விழி, வழங்கியதைத் தொடர்ந்து, திங்கட்கிழமை கல்லூரி முதல்வர் முனைவர். து. ரோஸி, துறைத் தலைவர்கள் முன்னிலையில் வெளியிட்டார். இதன் விவரம் WWW.KNGAC.AC.IN என்ற கல்லூரி இணையதளத்தில் 01.12.2025 திங்கள்கிழமை மாலை வெளியிடப்பட்டது. மறு கூட்டல் மற்றும் ஒளிநகல் பிரதிக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 05.12.2025 மற்றும் மறு மதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள் 10.12.2025 ஆகும். விண்ணப்பிக்க விரும்பும் மாணவிகள் கல்லூரியின் தேர்வு நெறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என கல்லூரி நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வார ஓய்வு நேரத்தை அதிகரித்திடுக! அகில இந்திய ரயில் ஓட்டுநர்கள் சங்கத்தினர் உண்ணாவிரதப் போராட்டம்

**திருச்சி, டிச.4:**

வார ஓய்வு நேரத்தை 30 மணி நேரத்தில் இருந்து 46 மணி நேரமாக மாற்றி அமைக்க வேண்டும். ரயில் ஓட்டுநர்கள் காலிப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும். பயணப்படிக்கு ஏற்ப கிலோமீட்டர் அலவன்சை 25 சதவிகிதம் உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அகில இந்திய ரயில் ஓட்டுநர்கள் சங்கம் சார்பில் திருச்சி ரயில் நிலையம் அருகில் 48 மணிநேர தொடர் உண்ணாவிரதப் போராட்டம் செவ்வாய் அன்று துவங்கியது. உண்ணா விரதப் போராட்டத்திற்கு அகில இந்திய ரயில் ஓட்டுநர்கள் சங்க கோட்டச் செயலாளர் கண்ணையன் தலைமை தாங்கினார். உண்ணாவிரதத்தை சிஐடியு மாநகர் மாவட்டச் செயலாளர் ரெங்கராஜன் துவக்கி வைத்தார். கோரிக்கைகளை விளக்கி டி.ஆர்.இ.யு கோட்டச் செயலாளர் கரிகாலன், கோட்ட தலைவர் சிவக்குமார், துணைப்பொதுச் செயலாளர் ராஜா, ஏ.ஐ.எஸ்.சி.எஸ்டி தென்மண்டல பொதுச் செயலாளர் இசக்கிமுத்து, டி.ஆர்.இ.யு.சி.சி.ஆர்.சி கிளை தலைவர் எஸ்.எஸ். கணேசன் ஆகியோர் பேசினர்.

## மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முதலிடம்: உதயநிதி பெருமிதம்

**சென்னை, டிச.4:**

*மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் ‘நம்பர் ஒன்’ மாநிலமாக திகழ்வதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார்.*

*சிஎஸ்ஐ மெட்ராஸ் டையோசீஸ் சார்பில் நடைபெற்ற தடைகளைத் தாண்டிய சாம்பியன்கள் (சாம்பியன்ஸ் பியாண்ட் பேரியர்ஸ்) விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் வழங்கும் நிகழ்ச்சி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் நடைபெற்றது. துணை முதல்வர் உதயநிதி வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, சான்றிதழ்களை வழங்கினார்.*



*பின்னர் அவர் பேசியதாவது: மாற்றுத்திறன் குழந்தைகளும், சிறப்பு குழந்தைகளும் தடைகளை உடைத்து உண்மையான சாம்பியன்களாக உருவாகி கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் இருந்து ஏராளமான பாரா தடகள விளையாட்டு வீரர்கள் தொடர்ந்து பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றனர்.*

*அதற்கேற்ப மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதில் இன்றைக்கு தமிழகம் தான் இந்தியாவிலேயே ‘நம்பர் ஒன்’ மாநிலமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது.*

*கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் 250 மாற்றுத்திறன் வீரர், வீராங்கனைகளுக்கு ரூ.30 கோடிக்கு உயரிய ஊக்கத் தொகை, 500 பேருக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்க, பல்வேறு சர்வதேச, தேசிய போட்டிகளில் கலந்துகொள்ள தமிழ்நாடு சாம்பியன்ஸ் பவுண்டேஷன் மூலம் ரூ.8 கோடி, தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகள், பாராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று சாதனை படைத்த 5 மாற்றுத்திறன் வீரர், வீராங்கனைகளுக்கு 3 சதவீத இட ஒதுக்கீட்டின்படி அரசு வேலை உள்ளிட்டவை வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 25 மாற்றுத்திறன் வீரர்களுக்கு அரசு வேலை வாய்ப்பை உருவாக்கித் தர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறன் வீரர், வீராங்கனைகள் பயிற்சி பெறுவதற்காக, தலா ரூ.1.50 கோடியில் 5 மாவட்டங்களில் சிறப்பு பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் புதிதாக 6 மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.*

*அதே போல் சென்னையிலும், நவீன வசதிகளுடன் கூடிய பாரா பேட்மிண்டன் அகாடமி முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் பேசினார்.*

*இந்நிகழ்வில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, மனோ தங்கராஜ், மாநகராட்சி மேயர் பிரியா, மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் ஜோ.அருண், விளையாட்டுத் துறை செயலர் அதுல்யா மிஸ்ரா, மெட்ராஸ் டயோசீஸ் பிஷப் பால் ஃபிரான்சிஸ் ரவிச்சந்திரன், சிஎஸ்ஐ மெட்ராஸ் டையோசீஸ் நிர்வாகிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

# பொது நல மனுதாக்கல் செய்து பணம் பறிக்கும் செயலை அனுமதிக்க கூடாது: உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவு

மதுரை, டிச.4:

பொதுநல வழக்குகளைத் தாக்கல் செய்து, அவற்றின் மூலம் பணம் பறிக்கும் செயல்பாடுகளை அனுமதிக்கக் கூடாது என உயர் நீதிமன்ற மதுரை அமர்வு உத்தரவிட்டுள்ளது.

காரைக்குடியை சேர்ந்த பூல் பாண்டி என்பவர், காரைக்குடி நகராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க கோரி, 2021-ம் ஆண்டில் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் பொதுநல மனு தாக்கல் செய்தார்.



இந்த மனு நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் மனுவை திரும்பப் பெறுவதாக தெரிவிக்கப்பட்டது. இதை ஏற்க மறுத்த நீதிபதிகள், "பொதுநல மனுகளை தாக்கல் செய்து, அதன் மூலம் பணம் பறிக்கும் நிலை உள்ளது. பணம் கிடைத்தவுடன் பொதுநல மனு திரும்பப் பெறப்படுகிறது. இது ஏற்கத் தக்கதல்ல. மேலும், நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்கும் செயலாகும். எனவே, இந்த வழக்கில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். இந்த வழக்கு 4 ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. பொதுநல மனுவை சிலரின் தனிப்பட்ட நோக்கங்களை பூர்த்தி செய்வதற்காக பயன்படுத்துவது நீதிமன்றத்துக்கு வருத்தத்தையும், அதிர்ச்சியையும் அளிக்கிறது.

இதுபோன்ற நடவடிக்கைகளை ஊக்குவிக்கக் கூடாது. அரசு அலுவலர்களும் இதில் நோட்டீஸ்கூட அனுப்பாமல் இருந்தது ஏற்கத்தக்கதல்ல. தற்போது தான் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பொதுநல மனு தாக்கல் செய்பவர்கள் முறையான காரணம் இல்லாமல் மனுவை திரும்பப் பெற அனுமதி கோரினால், அதிக அபராதம் விதிக்கப்படும். மனுதாரர் வரும் 9-ம் தேதி நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

## தொழில்நுட்ப / அறிவியல் செய்திகள்

### சிறிய மரங்கொத்திப் பறவைகளுக்கு எப்படி ஆற்றல் கிடைக்கிறது?



*1. சிறிய மரங்கொத்திப் பறவைகளுக்கு எப்படி ஆற்றல் கிடைக்கிறது? அவற்றின் அலகு, சுவாச அமைப்பு, இடுப்பு, கழுத்து தசைகள், வால் என சகலமும் ஒருங்கிணைந்து செயல்படுவதால்தான். தங்கள் எடையைவிட, 30 மடங்கு அதிக விசையுடன் அவை மரங்களைக் கொத்துகின்றன என்கிறது 'ஜர்னல் ஆப் எக்பெரிமென்டல் பயாலஜி' இதழ்.*

*2. சிம்பன்ஸி குரங்குகள், புதிய ஆதாரங்கள் கிடைத்தால், அவை தங்கள் முந்தைய நம்பிக்கைகளைத் திருத்திக்கொள்கின்றன என்கிறது, 'சயன்ஸ்' இதழில் வெளியான ஓர் ஆய்வு. இது, பகுத்தறியும் சிந்தனைத் திறன், மனிதர்களுக்கு மட்டுமே உண்டு என்ற கருத்தை கேள்விக்கு உள்ளாக்குகிறது.*

*3. கொலராடோ பல்கலை கணினி விஞ்ஞானிகள், விலங்குகளின் தோலின் மேலுள்ள, ஒழுங்கற்ற புள்ளிகளையும் கோடுகளையும் ஆராய்ந்தனர். ஆய்வின் முடிவில், அந்த வடிவங்கள், சீரற்றவை அல்ல, உயிருள்ள திசு இயக்கவியலின் விளைவாக உருவாகும், கணித ரீதியில் 'ஒழுங்கான' வடிவங்களே என்பதை கண்டறிந்தனர்.*

*4. மோனாஷ் பல்கலை ஆய்வாளர்கள், 36 வகை பாம்புகள் கடிப்பதை, 'ஸ்லோ மோஷனில்' படம் பிடித்தனர். ஆய்வின் முடிவில், ஒவ்வொரு பாம்புக்கும் விஷப்பல் அமைப்பும், இரையை கடித்து விஷத்தை செலுத்தும் விதமும் வெவ்வேறாக இருப்பதை கண்டறிந்தனர்.*

*5. பெரிய கருப்பு எறும்புக் கூட்டத்தில் கிருமிகள் தொற்று ஏற்பட்டால், அவை தங்கள் கூட்டின் சுரங்கப்பாதைகளை அகலப்படுத்துகின்றன. வரிசையில் ஊறும்போது இடைவெளி விடுகின்றன. இது மனிதர்கள்பெருந்தொற்றை தவிர்க்க சமூக இடைவெளியை கடைப்பிடிப்பதற்கு இணையானது என்கின்றனர், பூச்சியியல் ஆய்வாளர்கள்.*

# சஞ்சார் சாத்தி செயலியை முன்கூட்டியே செல்போன்களில் நிறுவுவது கட்டாயம் இல்லை: மத்திய அரசு

புதுடெல்லி, டிச.4:

மக்களவையில் நடந்த விவாதத்தின் போது நேற்று, தகவல் தொடர்பு மற்றும் வடகிழக்கு பிராந்தியத்தின் மேம்பாட்டுத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய சிந்தியா, பொதுமக்களின் பரிந்துரைகள் மற்றும் கருத்துகளின் அடிப்படையில் சஞ்சார் சாத்தி குறித்த விதிகளைத் திருத்த அரசாங்கம் தயாராக இருப்பதாக தெரிவித்தார்.




சஞ்சார் சாத்தி செயலியை ஆப்பிள் மற்றும் ஆண்ட்ராய்டு செல்போன்களில் கட்டாயமாக இடம்பெறச் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு அண்மையில் உத்தரவிட்டது. இதற்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்நிலையில், 'சஞ்சார் சாத்தி' செயலி வழியாக மக்களை உளவு பார்க்க மத்திய அரசு முயற்சிக்கிறது என்ற குற்றச்சாட்டும் அரசியல் கட்சித் தலைவர்கள் மத்தியில் பரவலாக எழுந்தது. இதனிடையே, மத்திய அரசு சஞ்சார் சாத்தியின் அம்சங்கள் குறித்தும் விளக்கியுள்ளது. மத்திய அரசு இத்தனை நன்மைகளைப் பட்டியலிட்டாலும் கூட இந்த செயலிக்கு எதிர்ப்பு பரவலாக இருக்கிறது.

அதுவும் ஆப்பிள் இன்க் நிறுவனம் இந்திய அரசின் இந்த உத்தரவு ஏற்புடையது அல்ல என்று தெரிவித்துள்ளது. இந்தச் சூழலில் தற்போது செல்போன்களில் சஞ்சார் சாத்தி செயலி கட்டாயமாக முன்கூட்டியே நிறுவப்பட வேண்டும் என்ற அறிவிப்பை மத்திய அரசு திரும்பப் பெற்றுள்ளது.

# 'ரோடுஷோ' அனுமதிக்காக தொடர் முயற்சி: புதுச்சேரி முதல்வருடன் புஸ்ஸி ஆனந்த் சந்திப்பு!

புதுச்சேரி, டிச.4:

ரோடு ஷோ நடத்த அனுமதி கோரி புதுச்சேரி முதல்வர் ரங்கசாமியை தவெக பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் இன்று (புதன்கிழமை) மீண்டும் சந்தித்தார். இம்முறை ஈசிஆரில் நடத்த அனுமதி கோரினார். ஆனால், காவல்துறை அதிகாரிகள் ரோடு ஷோ நடத்த திட்டவட்டமாக அனுமதி மறுத்தனர். அதற்குப் பதிலாக பொதுக்கூட்டம் நடத்த விண்ணப்பிக்கலாம் என்றனர்.

புதுவையில் தவெக தலைவர் விஜய் டிச.5-ம் தேதி ரோடு ஷோ நடத்த முடிவு செய்து காவல்துறையிடம் தவெக தரப்பில் அனுமதி கேட்கப்பட்டது. கரூர் துயரச் சம்பவத்தை தொடர்ந்து தமிழகத்தில் ரோடு ஷோ நடத்த அனுமதி வழங்கப்படவில்லை. மேலும், ரோடு ஷோவுக்கு விதிமுறைகள் வழங்குவது தொடர்பான வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இதனிடையே, தவெக பொதுச்செயலர் புஸ்ஸி ஆனந்த் புதுச்சேரி வந்து காவல்துறை அதிகாரிகள், முதல்வரை சந்தித்தார். நேற்று தவெக பொதுச் செயலர்கள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா நேரில் வந்து 4-வது முறையாக முதல்வர், காவல்துறை அதிகாரிகளை சந்தித்தனர். இருப்பினும் ரோடுஷோ நடத்த அனுமதி மறுக்கப்பட்டது.

இதைத்தொடர்ந்து இன்று காலை சட்டப்பேரவையிலுள்ள முதல்வர் அறைக்கு காவல்துறை டிஜிபி ஷாலினி சிங், ஐஜி அஜிஸ்குமார் சிங்ளா, டிஐஜி சத்தியசுந்தரம் உள்ளிட்டோர் வந்தனர். அதைத்தொடர்ந்து சட்டத்துறை அமைச்சர் லட்சுமி நாராயணனும் வந்தார். அவர்கள் முதல்வர் ரங்கசாமியுடன் ஆலோசனை நடத்தினர்.

அதில், விஜய் பங்கேற்கவிருந்த ரோடு ஷோவுக்கு புதுச்சேரியில் அனுமதி தராதது ஏன் என்பது பற்றியும், உயர் நீதிமன்ற உத்தரவு விவரமும் முதல்வர் ரங்கசாமிக்கு முழுமையாக தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

தொடர்ந்து, பயிற்சி பெற்றும் பணி வாய்ப்பு இல்லாமல் உள்ள 68 ஊர்க்காவல் படை வீரர்கள் நிலை தொடர்பாகவும் முழுமையாக விவாதித்தனர் என்றும் தெரிகிறது.

அதைத்தொடர்ந்து புஸ்ஸி ஆனந்த் மீண்டும் சட்டப்பேரவையில் உள்ள முதல்வர் அறையில் ரங்கசாமியை சந்தித்தார். அதனைத் தொடர்ந்து முதல்வர் ரங்கசாமி காவல்துறை அதிகாரிகளிடம் பேசினார். முதல்வர் சந்திப்புக்கு பின் வெளியே வந்த புஸ்ஸி ஆனந்த், செய்தியாளர்களின் கேள்விக்கும் பதில் அளிக்கவில்லை.

# தொழில்நுட்பக் கோளாறு: நாடு முழுவதும் பல்வேறு விமான நிலையங்களில் விமான சேவை பாதிப்பு!

புதுடெல்லி, டிச.4:

நாடு முழுவதும் நேற்று (டிச.3) டெல்லி, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு விமான நிலையங்களிலும் ஏற்பட்ட கணினி தொழில்நுட்பக் கோளாறு காரணமாக, செக்-இன் அமைப்புகள் பாதிக்கப்பட்டு பல்வேறு விமான சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இதுபற்றி வாரணாசி விமான நிலைய பயணிகளுக்கு வெளியிடப்பட்ட ஓர் அறிவிப்பில், 'மைக்ரோசாப்ட் விண்டோஸில் உலகளவில் பெரிய அளவிலான சேவை செயலிழப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனால் விமான நிலையங்களில் தொழில்நுட்ப சேவைகள்/செக்-இன் அமைப்புகள் பாதிக்கப்பட்டுள்ளன' என்று தெரிவிக்கப்பட்டது.



தொழில்நுட்ப கோளாறுகள் காரணமாக இண்டிகோ, ஸ்பைஸ்ஜெட், ஆகாசா ஏர் மற்றும் ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் ஆகிய நான்கு விமான நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. இதுகுறித்து மைக்ரோசாப்ட் மற்றும் விமான நிறுவனங்களிடமிருந்து உடனடியாக பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஹைதராபாத்தின் ராஜீவ் காந்தி சர்வதேச விமான நிலையத்தில் இன்று காலை ஏராளமான பயணிகள், தாமதங்கள் குறித்து விமான நிறுவன உதவி மையத்தை நாடி தங்கள் விமானங்கள் பற்றிய தகவல்களைத் தேடியதால் பரபரப்பு ஏற்பட்டது.

அதேபோல, பெங்களூரு சர்வதேச விமான நிலையத்திலும் சில விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. இதனால் நான்கு விமானங்கள் தாமதமாக வந்தன. மேலும், பல இண்டிகோ விமான சேவைகள் செயல்பாட்டு காரணங்களுக்காக ரத்து செய்யப்பட்டன. 22 வருகைகள் மற்றும் 20 புறப்பாடுகள் உட்பட மொத்தம் 42 ரத்துகளை இண்டிகோ விமான நிறுவனம் பதிவு செய்தது.

நேற்று காலை டெல்லி சர்வதேச விமான நிலைய லிமிடெட் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், 'தொழில்நுட்ப கோளாறு காரணமாக சில உள்நாட்டு விமான நிறுவனங்களின் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் தாமதங்கள், நேர மாற்றம் உள்ளிட்ட பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஏர் இந்தியா எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில், ' கணிணி சேவை பாதிப்பு முழுமையாக மீட்டெடுக்கப்பட்டுள்ளது. மேலும் அனைத்து விமான நிலையங்களிலும் செக்-இன் வழக்கம் போல் செயல்படுகிறது. எங்கள் அனைத்து விமானங்களும் அட்டவணைப்படி இயங்குகின்றன. எங்கள் பயணிகளின் புரிதலுக்கு நன்றி' என்று தெரிவித்துள்ளது.

## க்ரைம் கார்னர்

### மும்பை விமான நிலையத்தில் ரூ.94 லட்சம் மதிப்பிலான உயர்ரக கஞ்சா பறிமுதல் - வாலிபர் கைது

மும்பை, டிச.4:

தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து நேற்று மும்பைக்கு விமானம் ஒன்று வந்தது. இந்த விமானத்தில் பயணி ஒருவர் அதிகளவில் போதைப்பொருள் கடத்தி வருவதாக சுங்க அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இந்த தகவலின் பேரில் அதிகாரிகள் பாங்காக்கில் இருந்து வந்த விமான பயணிகளிடம் தீவிர சோதனை நடத்தினர்.

இதில் பாந்திராவை சேர்ந்த முசாகித் இஸ்மாயில் மோமினின் (வயது27) உடமைகளில் அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது அவரது டிராலி பேக்கில் துணிகளுக்கு இடையே மறைத்து கடத்தி வரப்பட்ட ரூ.94 லட்சம் மதிப்பிலான 941 கிராம் உயர்ரக கஞ்சா இருந்ததை கண்டுபிடித்து அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். இதையடுத்து அதிகாரிகள் கஞ்சாவை கடத்தி வந்த வாலிபரை கைது செய்தனர். அவர் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். முதல்கட்ட விசாரணையில் கமிஷனுக்காக கஞ்சாவை கடத்தி வந்ததாக வாலிபர் வாக்குமூலம் அளித்ததாக அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

### கர்நாடகத்தில் 13 வயது சிறுமி கூட்டு பலாத்காரம் - 2 பேருக்கு போலீஸ் வலைவீச்சு

பெலகாவி, டிச.4:

கர்நாடக மாநிலம் பெலகாவி (மாவட்டம்) தாலுகா முர்கோடு போலீஸ் எல்லைக்குட்பட்ட பகுதியில் 13 வயது சிறுமி தனது பெற்றோருடன் வசித்து வருகிறாள். அந்த சிறுமி அங்குள்ள பள்ளியில் 7-ம் வகுப்பு படித்து வருகிறாள். இந்த நிலையில் கடந்த மாதம் (நவம்பர்) 23-ந்தேதி அந்த மாணவி, தனது வீட்டில் இருந்து 300 மீட்டர் தூரத்தில் உள்ள மாவு அரைவை ஆலைக்கு மாவு அரைக்க சென்றாள். அப்போது அங்கு அதேப்பகுதியை சேர்ந்த மணிகண்டா தின்னிமணி, ஈரண்ணா ஆகியோர் வந்தனர். அவர்கள் சிறிது தூரம் சிறுமியை பின்தொடர்ந்து சென்றுள்ளனர். பின்னர் சிறுமி கிராமத்தின் வெளிப்பகுதியில் உள்ள கரும்பு தோட்டத்தின் அருகே சென்றபோது, பின்தொடர்ந்து வந்த 2 பேரும் திடீரென்று சிறுமியின் வாயை பொத்தி கரும்பு தோட்டத்துக்குள் தூக்கி சென்றனர். அங்கு வைத்து 2 பேரும் சிறுமியை மாறி, மாறி பலாத்காரம் செய்ததாக கூறப்படுகிறது. பின்னர் அவர்களிடம் இருந்து தப்பி ஓடிய சிறுமி, இதுபற்றி தனது பெற்றோரிடம் கூறினாள். இதற்கிடையே சிறுமியின் குடும்பத்துக்கு கொலை மிரட்டல் வந்துள்ளது. இந்த சம்பவம் பற்றி வெளியே கூறினால் கொலை செய்து விடுவதாக சிலர் மிரட்டி உள்ளனர். இதனால் பயந்து போன அவர்கள் உடனே இதுபற்றி புகார் எதுவும் அளிக்கவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் சிறுமியின் பெற்றோர், கூட்டு பலாத்காரம் குறித்து முர்கோடு போலீசில் புகார் அளித்தனர். இதனை அறிந்த மணிகண்டா, ஈரண்ணா ஆகியோர் தலைமறைவாகி விட்டனர். இதுகுறித்து முர்கோடு போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து தலைமறைவாக உள்ள 2 பேரையும் வலைவீசி தேடி வருகிறார்கள்.

### திருமணத்துக்கு மறுத்த இளம்பெண் பலாத்காரம் - வாலிபர் கைது

பெங்களூரு, டிச.4:

கர்நாடக மாநிலம் உடுப்பி தாலுகா இரியடுக்கா போலீஸ் எல்லைக்குட்பட்ட நாயர்கோடு பகுதியை சேர்ந்தவர் பிரதீப் பூஜாரி (வயது 26). இவர் அதேப்பகுதியை சேர்ந்த இளம்பெண் ஒருவரை ஒரு தலையாக காதலித்து வந்துள்ளார். பிரதீப்பின் காதலை அந்த இளம்பெண் ஏற்கவில்லை. ஆனாலும் பிரதீப், அந்த இளம்பெண்ணை விடாமல் பின்தொடர்ந்து சென்று தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி தொல்லை கொடுத்து வந்ததாக தெரிகிறது. இதுகுறித்து இளம்பெண் இரியடுக்கா போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர். பின்னர் ஜாமீனில் வெளியே வந்த பிறகும், பிரதீப் இளம்பெண்ணுக்கு தொடர்ந்து தொல்லை கொடுத்து வந்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு அந்தப்பகுதியில் நடந்து சென்ற இளம்பெண்ணை வழிமறித்த பிரதீப், தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி வலியுறுத்தி உள்ளார். இதற்கு இளம்பெண் மறுத்ததாக தெரிகிறது. இதனால் அவர் இளம்பெண்ணை மறைவான பகுதிக்கு தூக்கி சென்று பாலியல் பலாத்காரம் செய்ததாக தெரிகிறது. இதுகுறித்து இளம்பெண் உடுப்பி மகளிர் போலீசில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து பிரதீப்பை கைது செய்தனர். பின்னர் அவரை போலீசார் கோர்ட்டில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

### வரதட்சணை கொடுமை: ஐஏஎஸ் அதிகாரியின் மகள் தற்கொலை

அமராவதி, டிச.4:

ஆந்திர மாநிலம் குண்டூர் மாவட்டம் தடிப்பல்லி பகுதியை சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரி சின்னராமுடு. இவரது மகள் மதுரி சஹிதிபாய் (வயது 27). இதனிடையே, மதுரி சஹிதிபாய் நந்தியால் மாவட்டத்தை சேர்ந்த ராஜேஷ் என்ற இளைஞரை காதலித்து கடந்த மார்ச் மாதம் பதிவுத்திருமணம் செய்துகொண்டார். அதேவேளை, திருமணமான சில மாதங்களில் மதுரியிடம் வரதட்சணை கேட்டு ராஜேஷ் தொல்லை கொடுத்துள்ளார். இதையடுத்து, கடந்த அக்டோபர் மாதம் மதுரி தனது பெற்றோர் வீட்டிற்கு வந்துவிட்டார். இந்நிலையில், கணவன் தொடர்ந்து வரதட்சணை கொடுமை செய்ததாலும், கணவன் தன்னை உண்மையாக காதலிக்கவில்லை என்றும், தன்னை மீண்டும் அழைத்து செல்ல வரவில்லை என்று மன வேதனையடைந்த மதுரி இன்று தனது பெற்றோர் வீட்டில் உள்ள கழிவறையில் தற்கொலை செய்துகொண்டார். தகவலறிந்து விரைந்து சென்ற போலீசார், மதுரியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# தொழிலாளர் சட்டங்களை திரும்ப பெற வலியுறுத்தி நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டம்




**புதுடெல்லி, டிச.4:**

நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாளிலேயே வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக விவாதம் நடத்தக்கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டனர். இதனால் 2 அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

இந்தநிலையில் 2-வது நாளாக நேற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இதேகோரிக்கையை வலியுறுத்தினார்கள்.

பின்னர் நாடாளுமன்ற இரு அவைகளிலும் இதே கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. இதனால் இரு அவைகளும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன. அதன்பிறகு அவை கூடியபோது மீண்டும் அமளி ஏற்பட்டது. இதனால் நாள் முழுவதும் அவை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவையில் உறுப்பினர்கள் வெளிநடப்பும் செய்தனர். இந்த முட்டுக்கட்டைக்கு தீர்வுகாண நேற்று மாலை, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நடந்தது. அதில், வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து 9-ந் தேதி விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்தநிலையில், புதிய தொழிலாளர் சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். கடந்த 2020 ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட 4 புதிய தொழிலாளர் சட்டங்கள் நவம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்தன.

இதில், தொழிலாளர் நலன், சமூக பாதுகாப்பு கருதி 29 தொழிலாளர் சட்டங்களை ஒருங்கிணைத்து 4 சட்டத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தெரிவித்தது. இந்த சட்டங்கள் தொழிலாளர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக காங்கிரஸ், திமுக, இடதுசாரிகள் உள்ளிட கட்சிகள் எதிர்ப்புதெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், நாடாளுமன்ற குளிர்காலக் கூட்டத்தொடரின் மூன்றாம் நாள் அமர்வு தொடங்குவதற்கு முன்னதாக இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள், புதிய தொழிலாளர் சட்டத் தொகுப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினர். கார்ப்ரேட் காட்டாட்சி வேண்டாம், தொழிலாளர்களுக்கு நீதி வேண்டும் என்ற பேனருடன் எதிர்க்கட்சி எம்பிக்கள் முழக்கமிட்டு தொழிலாளர் சட்டத் தொகுப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். காங்கிரஸ் நாடாளுமன்ற குழு தலைவர் சோனியா காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# விளையாட்டு செய்திகள்

## ஆஷஸ் 2வது டெஸ்ட்: கம்மின்ஸ் விளையாட வாய்ப்பு

**பிரிஸ்பேன், டிச.4:**

ஆஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இங்கிலாந்து கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் பெர்த்தில் நடந்த முதலாவது டெஸ்டில் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்று தொடரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2-வது போட்டி காபா மைதானத்தில் நாளை தொடங்குகிறது.

இந்த நிலையில், காயம் காரணமாக முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடாத ஆஸ்திரேலிய அணியின் கேப்டன் கம்மின்ஸ் இந்த போட்டியில் விளையாட வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இருப்பினும் காபா மைதானத்தின் தன்மையை பொறுத்தே கம்மின்ஸ் விளையாடுவது குறித்து அணி நிர்வாகம் முடிவு செய்யும் என தகவல் வெளியாகியுள்ளது. இதனால் போட்டிக்கான ஆடும் லெவனை ஆஸ்திரேலிய அணி அறிவிக்கமால் இருந்து வருகிறது.

## கேலோ இந்தியா பல்கலைக்கழக போட்டிகள்; காயத்துடனேயே விளையாடி தங்கம் வென்ற பூஜா சிங்

**ஜெய்ப்பூர், டிச.4:**

ராஜஸ்தானின் 7 நகரங்களில் 2025-ம் ஆண்டிற்கான கேலோ இந்தியா பல்கலைக்கழக போட்டிகள் நடந்து வருகின்றன. இந்த போட்டிகளில் மொத்தம் 222 பல்கலைக்கழகங்களை சேர்ந்த 4,448 தடகள வீரர், வீராங்கனைகள் பங்கேற்று உள்ளனர்.

இதில், ஜெய்ப்பூர் நகரில் உள்ள சவாய் மான்சிங் ஸ்டேடியத்தில் நடந்த உயரம் தாண்டுதல் போட்டியில், ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் தங்க பதக்கம் வென்றவரான பூஜா சிங் கலந்து கொண்டார். அவர் சிறப்பாக விளையாடி தங்க பதக்கம் வென்றுள்ளார்.

போட்டியில் வெற்றிபெற்ற பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய பூஜா சிங், 1.77 மீட்டர் உயரம் தாண்டியுள்ளேன். நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். காயத்தில் இருந்து சமீபத்திலேயே குணமடைந்து வந்திருக்கிறேன். நான் பயிற்சி பெற்று 3 வாரங்களே ஆகின்றன. இன்னும் காயத்துடனேயே இருக்கிறேன்.

## உள்ளூர் கிரிக்கெட்டில் விளையாடும் விராட் கோலி

**புதுடெல்லி, டிச.4:**

ராஞ்சியில் நடந்த தென் ஆப்பிரிக்காவுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணி 17 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதில் முதலில் பேட் செய்த இந்திய அணி விராட் கோலியின் சதம் (135 ரன், 120 பந்து, 11 பவுண்டரி, 7 சிக்சர்), ரோகித் சர்மா (57 ரன்), கேப்டன் கே.எல். ராகுல் (60 ரன்) ஆகியோரது அரைசதங்களால் 8 விக்கெட்டுக்கு 349 ரன்கள் குவித்தது. தொடர்ந்து ஆடிய தென் ஆப்பிரிக்கா 49.2 ஓவர்களில் 332 ரன்னில் ஆல்-அவுட் ஆனது. விராட் கோலி ஆட்டநாயகனாக தேர்வு செய்யப்பட்டார். 2வது ஒருநாள் போட்டி இன்று நடைபெற உள்ளது.

இந்த நிலையில், வருகிற 24-ந்தேதி உள்நாட்டில் தொடங்கும் விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் டெல்லி அணிக்காக விளையாட விராட் கோலி முடிவு செய்துள்ளார். டெல்லி அணிக்காக ஆடுவதை உறுதிப்படுத்தியுள்ள அவர் எத்தனை ஆட்டங்களில் ஆடுவார் என்பது தெளிவாக தெரியவில்லை என டெல்லி கிரிக்கெட் சங்க தலைவர் ரோஹன் ஜெட்லி தெரிவித்தார். கோலி, 2010-ம் ஆண்டுக்கு பிறகு முதல்முறையாக விஜய் ஹசாரே போட்டியில் ஆட உள்ளார்.

## ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி: இந்திய அணி கால்இறுதிக்கு தகுதி

ஜூனியர் உலகக் கோப்பை ஆக்கி போட்டியில் இந்திய அணி சுவிட்சர்லாந்தை வீழ்த்தி கால்இறுதிக்கு தகுதி பெற்றது.

14-வது ஜூனியர் ஆண்கள் உலகக் கோப்பை ஆக்கி போட்டி (21 வயதுக்கு உட்பட்டோர்) சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஸ்டேடியம் மற்றும் மதுரை ரேஸ்கோர்சில் உள்ள சர்வதேச ஆக்கி ஸ்டேடியத்தில் நடந்து வருகிறது. இதில் பங்கேற்றுள்ள 24 அணிகள் 6 பிரிவாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு அணியும், தங்கள் பிரிவில் உள்ள மற்ற அணிகளுடன் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பிடிக்கும் அணிகள், 2-வது இடம் பெறும் இரண்டு சிறந்த அணிகள் என 8 அணிகள் கால்இறுதிக்கு தகுதி பெறும். 5-வது நாளான நேற்று கடைசி கட்ட லீக் ஆட்டங்கள் நடந்தன. இதில் மதுரையில் நடந்த ஒரு ஆட்டத்தில் ஸ்பெயின்- நமிபியா அணிகள் மோதின. தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஸ்பெயின் 13-0 என்ற கோல் கணக்கில் நமிபியாவை பந்தாடி 3-வது வெற்றியை சுவைத்தது. ஸ்பெயின் அணியில் புருனோ அவிலா 4 கோல் அடித்தார். இதே போல் பெல்ஜியம் அணி 10-0 என்ற கோல் கணக்கில் எகிப்தை தோற்கடித்து 2-வது வெற்றியை பெற்றது. 'டி' பிரிவில் லீக் சுற்று முடிவில் ஸ்பெயின் 9 புள்ளிகளுடன் முதலிடமும், பெல்ஜியம் 6 புள்ளிகளுடன் 2-வது இடமும் பிடித்து கால்இறுதிக்கு முன்னேறின. நமிபியா 3-வது இடமும், எகிப்து கடைசி இடமும் பெற்று நாக்-அவுட் சுற்று வாய்ப்பை இழந்தன. இறுதி லீக்கில் இந்தியா-சுவிட்சர்லாந்து அணிகள் ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற கோல் கணக்கில் சுவிட்சர்லாந்தை வீழ்த்தி தொடர்ந்து 3-வது வெற்றியை ருசித்து கால்இறுதியை எட்டியது.

# விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் மிக நீளமான கண்ணாடி நடைபாலம் திறப்பு



**விசாகப்பட்டினம், டிச.4:**

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் மிக நீளமான கண்ணாடி நடைபாலம் மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளது.

ஆந்திர மாநிலம் விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் மிக நீளமான கண்ணாடி நடைபாலம் மக்களின் பயன்பாட்டுக்கு திறக்கப்பட்டுள்ளது.இந்த கண்ணாடி நடைபாலம், விசாகப்பட்டினத் தில் கைலாசகிரி மலை உச்சியில் அமைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1,000 அடி உயரத்தில் 55 மீட்டர் நீளத்தில் கேன்டிலிவர் பாலமாக இது கட்டப்பட்டுள்ளது.

விசாகப்பட்டினம் மாநகர வளர்ச்சி ஆணையத்தால் ரூ.7 கோடி செலவில் கட்டப்பட்ட இப்பாலத்தின் கண்ணாடிகள் ஜெர்மனியில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. 40 மி.மீ. தடிமன் கொண்ட உயர்தர மூன்று அடுக்கு கண்ணாடி, 40 டன் வலுவூட்டப்பட்ட எஃகு இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த அமைப்பு மணிக்கு 250 கி.மீ. வேகத்தில் வீசும் புயல் மற்றும் சூறாவளி காற்றை தாங்கக் கூடியது.இப்பாலம் தினமும் காலை 8 மணி முதல் இரவு 9 மணி வரை பொதுமக்களுக்கு திறந்திருக்கும் எனவும் 15 நிடங்களுக்கான கட்டணம் ரூ.300 எனவும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

# வேலைக்கு செல்லாமல் பப்ஜி விளையாடியதை கண்டித்த மனைவியை கொன்ற இளைஞர் - அதிர்ச்சி சம்பவம்



**போபால், டிச.4:**

மத்தியபிரதேச மாநிலம் ரிவா மாவட்டத்தில் உள்ள கிராமத்தை சேர்ந்த இளைஞர் ரஜத். இவருக்கும் அதே பகுதியை சேர்ந்த நேஹா (வயது 24) என்ற பெண்ணுக்கும் கடந்த மே மாதம் திருமணம் நடைபெற்றது.

இதனிடையே, ரஜத் செல்போனில் பப்ஜி விளையாட்டிற்கு அடிமையாக இருந்துள்ளார். அவர் வேலைக்கு செல்லாமல் வீட்டில் இருந்தவாறு பப்ஜி விளையாடியுள்ளார். இதனால், நேஹாவுக்கும் ரஜத்திற்கும் இடையே அவ்வப்போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வேலைக்கு செல்லுமாறு கணவனை நேஹா தொடர்ந்து வற்புத்து வந்துள்ளார். இந்நிலையில், வேலைக்கு செல்லாமல் தொடர்ந்து பப்ஜி விளையாடுவது தொடர்பாக கடந்த சனிக்கிழமை இரவு ரஜத்திற்கும் நேஹாவுக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றிய நிலையில் ஆத்திரமடைந்த ரஜத் தனது மனைவி நேஹாவின் கழுத்தை நெரித்து கொலை செய்துள்ளார். பின்னர் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளார்.

நேஹா கொல்லப்பட்டது குறித்து ஞாயிற்றுக்கிழமை காலை கிராமத்தினருக்கு தெரியவந்துள்ளது. இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விரைந்து சென்ற போலீசார் நேஹாவின் உடலை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், மனைவியை கொலை செய்துவிட்டு தப்பியோடிய ரஜத்தை தீவிரமாக தேடி வருகின்றனர்.

# மத்திய அரசு உத்தரவை ஏற்று... காங்கிரஸ் ஆளும் தெலுங்கானாவில் லோக் பவன் என உடனடியாக பெயர் மாற்றம்




**ஐதராபாத், டிச.4:**

நாட்டின் மாநிலங்களில் மத்திய அரசு பிரதிநிதியாக செயல்படும் கவர்னர்கள் தங்க கூடிய கவர்னர் மாளிகை, ராஜ் பவன் என்று அழைக்கப்படுகிறது. மாநிலங்களில் கவர்னர்களும், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை கவர்னர்களும் பதவி வகித்து வருகின்றனர். இந்நிலையில் ராஜ் பவன் பெயரை, லோக் பவன் என மாற்றம் செய்து மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்தது.

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு தலைமையில் கவர்னர்களின் மாநாடு புதுடெல்லியில் உள்ள ராஷ்டிரபதி பவனில் கடந்த ஆண்டு நடைபெற்றது. இதில் துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கார், பிரதமர் மோடி, உள்துறை மந்திரி அமித்ஷா மற்றும் பல்வேறு மாநில கவர்னர்களும், யூனியன் பிரதேசங்களின் துணை நிலை கவர்னர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய தமிழக கவர்னர் ஆர். என். ரவி, ராஜ் பவன் என்ற பெயரை மாற்ற வேண்டும் என கோரிக்கையாக முன்வைத்து பேசினார். இந்த பெயர் காலனி ஆதிக்கத்தின் கீழ் நாடு இருந்தது என நினைவூட்டும் வகையில் உள்ளது என குறிப்பிட்டார்.

இந்நிலையில் ராஜ் பவன், லோக் பவன் என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது என மத்திய உள்துறை அமைச்சகம் அறிவித்தது. இதன்படி, கவர்னர் மாளிகை இனி மக்கள் மாளிகை என அழைக்கப்படும். இது நாடு முழுவதும் அமல்படுத்தப்படும் என்று கடந்த நவம்பர் 30-ந்தேதி மத்திய அரசு தெரிவித்து உள்ளது.

கடந்த ஆண்டு நடந்த கவர்னர் மாநாட்டில் கவர்னர் ரவி முன் வைத்த கோரிக்கையின் பெயரில் இந்த பெயர் மாற்றம் அமைந்துள்ளது என்றும் இதனை வரவேற்கிறோம் என்றும் தமிழக கவர்னர் ரவியின் ஆலோசகர் திருஞானசம்பந்தம் கூறினார். கவர்னர் மாளிகை வரலாற்றில் இது ஒரு மைல்கல் என்றும் அவர் கூறினார். இந்நிலையில், மத்திய அரசின் இந்த உத்தரவை தொடர்ந்து உடனடியாக, தெலுங்கானாவில் இந்த நடைமுறை அமல்படுத்தப்பட்டு உள்ளது. முதல்-மந்திரி ரேவந்த் ரெட்டி தலைமையில் காங்கிரஸ் கட்சி ஆளும் தெலுங்கானாவில் மத்திய அரசின் உத்தரவு உடனடியாக அமல்படுத்தப்பட்டு உள்ளது. ராஜ் பவன் அல்லது ராஜ் நிவாஸ் என்பதற்கு பதிலாக லோக் பவன் அல்லது லோக் நிவாஸ் என பெயர் மாற்றம் செய்யப்படுகிறது. இதுவரை 8 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் இந்த பெயர் மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது என தகவல் தெரிவிக்கின்றது.

# சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு; எடியூரப்பா மீதான விசாரணைக்கு தடை

**புதுடெல்லி, டிச.4:**

கர்நாடக மாநில முன்னாள் முதல்-மந்திரி எடியூரப்பா மீதான சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் விசாரணை நடவடிக்கைகளை சுப்ரீம் கோர்ட்டு நிறுத்திவைக்க உத்தரவிட்டது.

கர்நாடக மாநில முன்னாள் முதல்-மந்திரியும், பா.ஜனதா மூத்த தலைவருமான எடியூரப்பா கடந்த ஆண்டு தனது வீட்டுக்கு உதவி கேட்டு தாயுடன் வந்த 17 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்ததாக புகார் எழுந்தது. இது தொடர்பாக அவரது தாயார் புகார் அளித்தார். மேலும் எடியூரப்பா பணம் கொடுத்து சம்பவத்தை மறைக்க முயன்றதாகவும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதுதொடர்பாக எடியூரப்பா மீது பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாக்கும் 'போக்சோ' வழக்கு உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த விசாரணை கோர்ட்டு, எடியூரப்பா மீது மட்டுமல்ல, சாட்சியங்களை அழிக்க முயன்றதாக மேலும் 3 பேர் மீது புதிய வழக்குப்பதிவு செய்ய உத்தரவு பிறப்பித்து கோர்ட்டில் ஆஜராகுமாறு எடியூரப்பா மற்றும் பிற குற்றவாளிகளுக்கு சம்மன் அனுப்பியது.

இந்நிலையில் போக்சோ வழக்கை ரத்து செய்யக்கோரி கர்நாடக ஐகோர்ட்டில் எடியூரப்பா மனுதாக்கல் செய்தார். ஆனால் கர்நாடக ஐகோர்ட்டு வழக்கை ரத்து செய்ய மறுத்து விட்டது. இதை எதிர்த்து எடியூரப்பா சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு தலைமை நீதிபதி சூர்யகாந்த், நீதிபதி ஜாய்மல்யா பாக்சி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது எடியூரப்பாவை சார்பில் வாதாடிய மூத்த வக்கீல், "ஐகோர்ட்டு முக்கிய ஆதாரங்களை புறக்கணித்து விட்டது. எடியூரப்பாவை பெண் சந்தித்ததாக கூறப்படும் சம்பவத்தின் போது அப்படி எதுவும் நடக்கவில்லை என்று கூறும் அறிக்கைகளை கருத்தில் கொள்ள தவறி விட்டது. வழக்கு விசாரணையை மறைக்கும் சில அறிக்கைகள் உள்ளன. ஐகோர்ட்டு உண்மைகளை புறக்கணித்தது. அவர் 4 முறை முதல்-மந்திரியாக இருந்துள்ளார்" என கூறினார்.

இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டு வழங்கிய இடைக்கால உத்தரவில், "கர்நாடக ஐகோர்ட்டு இப்படிதான் விசாரணை நடத்த வேண்டும் என நீங்கள் எப்படி கட்டாயப் படுத்த முடியும். இந்த வழக்கை தகுதியின் அடிப்படையில் புதிய பரிசீலனைக்காக மீண்டும் ஐகோர்ட்டுக்கு அனுப்ப வேண்டுமா? என்பதை சுப்ரீம் கோர்ட்டு ஆராயும். அதுவரை எடியூரப்பா மீதான விசாரணை நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்படும். இந்த விஷயத்தை மீண்டும் ஐகோர்ட்டுக்கு மாற் றுவது குறித்து பரிசீலிப்பதற்காகவே இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது" என கூறியது.

# 10 ஆண்டுகளுக்கு முன் மாயமான மலேசிய விமானம்... ஆழ்கடலில் தேடும் பணி 30-ந்தேதி மீண்டும் தொடக்கம்

**கோலாலம்பூர், டிச.4:**

*வருகிற 30-ந்தேதி முதல் 55 நாட்களுக்கு, ஆழ்கடலுக்குள் சென்று மலேசிய விமானத்தின் பாகங்களை மீண்டும் தேடும் பணி நடைபெறும்.*

*மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் இருந்து சீனாவின் பீஜிங் நகருக்கு கடந்த 2014-ம் ஆண்டு மார்ச் 8-ந்தேதி போயிங் 777 ரக விமானம் ஒன்று புறப்பட்டு சென்றது. மொத்தம் 239 பேர் இருந்த அந்த விமானத்தில், சீன பயணிகளே அதிகளவில் இருந்தனர். விமானம், அதன் பயண பாதையில் இருந்து விலகி, தெற்கு நோக்கி சென்று பின்னர் இந்திய பெருங்கடலின் தெற்கு உள்பகுதிக்கு சென்று மறைந்தது. அது ரேடாரில் இருந்து விலகி சென்றது.*

*இதனை செயற்கைக்கோள் தரவுகள் தெரிவிக்கின்றன. விமானம் விபத்தில் சிக்கியிருக்க கூடும் என நம்பப்படுகிறது. இதற்கேற்ப, கிழக்கு ஆப்பிரிக்க கடற்கரை மற்றும் இந்திய பெருங்கடல் தீவுகளில் விமானங்களின் சில பாகங்கள் கரை ஒதுங்கின. இதனை தொடர்ந்து பல நாடுகளும் தேடுதல் பணிகளில் ஈடுபட்டும் அவை தோல்வியிலேயே முடிந்தன.*

*2018-ம் ஆண்டு ஓசன் இன்பினிட்டி என்ற அமெரிக்காவை சேர்ந்த கடல்சார் ரோபோடிக்ஸ் நிறுவனமும் தேடுதலில் ஈடுபட்டது. எனினும், கடலில் இருந்து எதுவும் கண்டறியப்படவில்லை. இந்த சூழலில், அந்நிறுவனம் வருகிற 30-ந்தேதி முதல் 55 நாட்களுக்கு ஆழ்கடலுக்குள் சென்று மீண்டும் தேடுதல் பணியில் ஈடுபட உள்ளது.*

*இதனை குறிப்பிட்டு மலேசிய போக்குவரத்து அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், இந்த சோக சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உதவும் வகையில் இந்த பணி அமையும் என தெரிவித்து உள்ளது.*

*எனினும், விமானத்தின் பாகங்கள் ஏதேனும் கண்டறியப்பட்டால் மட்டுமே அந்நிறுவனத்திற்கு ரூ.631 கோடி (70 மில்லியன் டாலர்) சம்பள பணம் கொடுக்கப்படும் என்றும் அரசு தெரிவித்து உள்ளது. இதனால், 10 ஆண்டுகளுக்கு முன் மாயமான மலேசிய விமானத்தின் பாகங்களை ஆழ்கடலில் தேடும் பணி தீவிரப்படுத்தப்பட உள்ளது.*




## இங்கிலாந்தில் டாக்டர்கள் வேலை நிறுத்த போராட்டம் மறுபரிசீலனை செய்ய அரசு வலியுறுத்தல்

**லண்டன், டிச.4:**

இங்கிலாந்தில் ஊதிய உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அங்குள்ள டாக்டர்கள் பல மாதங்களாக வலியுறுத்தி வருகின்றனர். அதன்படி கடந்த மாதம் வேலை நிறுத்த போராட்டத்தில் டாக்டர்கள் ஈடுபட்டனர். இதனையடுத்து போராட்ட குழுவினருடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தியது. இதில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை.

எனவே இந்த மாதம் மேலும் 5 நாள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக பிரிட்டிஷ் மருத்துவ சங்கம் அறிவித்துள்ளது. கடந்த 2023-ம் ஆண்டு முதல் அவர்கள் நடத்தும் 14-வது வேலை நிறுத்த போராட்டம் இதுவாகும். நோயாளிகள் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதால் இதனை மறுபரிசீலனை செய்யுமாறு போராட்ட குழுவினரை அரசாங்கம் வலியுறுத்தி உள்ளது.

## பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் நலமாக உள்ளார் - சகோதரி தகவல்

**இஸ்லாமாபாத், டிச.4:**

பாகிஸ்தான் தேசிய கிரிக்கெட் அணி தலைவராக இருந்தவர் இம்ரான் கான். பாகிஸ்தான் தெரிக்-இ-இன்சாப் என்ற பெயரில் கட்சி தொடங்கி அந்த நாட்டின் பிரதமராக பதவியேற்றார்.

பதவியில் இருந்தபோது வெளிநாட்டு தலைவர்கள் கொடுத்த பரிசு பொருட்களை விற்று சொத்து சேர்த்ததாக 'தோஷ்கானா' வழங்கில் கைதானார். பதவி பறிக்கப்பட்டு பஞ்சாப் மாகாணம் ராவல்பிண்டியில் உள்ள அடிலா சிறையில் 2023-ம் ஆண்டு அடைக்கப்பட்டார்.

தனியறையில் அடைக்கப்பட்டுள்ள அவரை சந்திக்க உறவினர்களுக்கு கடந்த ஓராண்டாக அனுமதியளிக்கப்படவில்லை. இதனால் அவர் சித்ரவதை செய்யப்பட்டு சிறையிலேயே இறந்துவிட்டதாக யூகங்கள் கிளம்பின. இந்தநிலையில் நேற்று இம்ரான் கான் சகோதரி உஸ்மாவுக்கு இம்ரான் கானை சந்திக்க அனுமதி அளிக்கப்பட்டது.

சிறையில் அவரை சந்தித்துவிட்டு பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் இம்ரான் கான் நலமுடன் இருப்பதாக தெரிவித்தார். இதுகுறித்து அவர், "இம்ரான் கான் நலமுடன் உள்ளார். ஆனால் தனியறையில் அடைக்கப்பட்டுள்ளதால் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார். சிறை வளாகத்தில் நடமாடவும் அதிக நேரம் தரப்படுவதில்லை" என்றார்.

## பாகிஸ்தான்: அரசு அதிகாரி கார் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் - 4 பேர் பலி

**லாகூர், டிச.4:**

பாகிஸ்தானில் பல்வேறு பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. குறிப்பாக, ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள கைபர் பக்துவா மாகாணத்தில் தெஹ்ரிக் இ தலிபான் என்ற பயங்கரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது.

இது ஆப்கானிஸ்தானில் செயல்பட்டு வரும் தலிபான்களின் கிளை அமைப்பாகும். இந்த பயங்கரவாத அமைப்புகள் அவ்வப்போது பாகிஸ்தானில் பாதுகாப்புப்படையினர், பொதுமக்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், கைபர் பக்துவா மாகாணம் மிரன் ஷா பகுதியில் உள்ள அரசு அலுவலகத்தில் பணியாற்றி வந்தவர் ஷா வாலி. இவர் இன்று காரில் சென்றுகொண்டிருந்தார். அவருக்கு 2 போலீசார் பாதுகாப்பிற்காக சென்றனர்.

கைபர் பக்துவா மாகாணத்தின் பனு மாவட்டத்தில் உள்ள சாலையில் சென்றபோது ஷா வாலியின் காரை இடைமறித்த பயங்கரவாதிகள் துப்பாக்கி சூடு தாக்குதல் நடத்தினர்.

இந்த துப்பாக்கி சூட்டில் ஷா வாலி மற்றும் காரில் இருந்த 2 போலீசார் உள்பட 4 பேரும் உயிரிழந்தனர். தகவலறிந்து விரைந்து சென்ற பாதுகாப்புப்படையினர் 4 பேரின் உடல்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், துப்பாக்கி சூடு நடத்திவிட்டு தப்பியோடிய பயங்கரவாதிகளை பாதுகாப்புப்படையினர் தீவிரமாக தேடி வருகின்றனர்.

## வெனிசுலாவுக்குள் புகுந்து கெட்டவர்கள் மீது விரைவில் அமெரிக்கா தாக்குதல் நடத்தும் - டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், டிச.4:**

வெனிசுலாவில் நிலத்தின் வழியே தாக்குதல் நடத்துவது எங்களுக்கு எளிது என டிரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்காவில் டிரம்ப் தலைமையிலான அரசு ஆட்சி செய்து வருகிறது. போதை பொருள் ஒழிப்புக்கான நடவடிக்கையில் டிரம்ப் நிர்வாகம் ஈடுபட்டு வருகிறது. இதனை முன்னிட்டு, கரீபியன் கடற்பகுதிகளில் போதைபொருள் கடத்தல்காரர்களின் படகுகளை, அமெரிக்க கடற்படை கடந்த செப்டம்பர் 2-ந்தேதி தாக்கி அழித்தது. இதன் தொடர்ச்சியாக கடத்தல்காரர்களின் பல படகுகளை அடுத்தடுத்து அமெரிக்கா தாக்குதல் நடத்தி அழித்தது.

இதில், 80 பேர் வரை கொல்லப்பட்டு உள்ளனர். அவர்கள் அனைவரும் போதைபொருள் கடத்தல்காரர்களா? என்ற கேள்வியும், சந்தேகமும் பல்வேறு நாடுகளுக்கும் எழுந்துள்ளது. இதனால், டிரம்ப மற்றும் அமெரிக்க அரசுக்கு எதிராக கண்டனமும் எழுந்துள்ளது.

இந்த போதைபொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் வெனிசுலா நாட்டை சேர்ந்தவர்கள் ஆவர் என அமெரிக்கா குற்றச்சாட்டை கூறி வருகிறது. இதனால், வெனிசுலாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே பதற்ற நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்காவில் மந்திரி சபை கூட்டம் ஒன்று நேற்று நடந்தது. இதில் பேசிய டிரம்ப், வெனிசுலாவுக்குள் வாழும் கெட்டவர்களை தாக்கி அழிக்கும் நடவடிக்கையை அமெரிக்கா விரைவில் மேற்கொள்ளும். நிலம் வழியாக கூட நாங்கள் இந்த தாக்குதலை தொடங்க உள்ளோம். நிலத்தின் வழியே தாக்குதல் நடத்துவது எளிது.

அவர்கள் எந்த பகுதியில் வசிக்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரியும். கெட்ட மனிதர்கள் வசிப்பிடம் எது என எங்களுக்கு நன்றாக தெரியும். விரைவில் நாம் தாக்குதலை தொடுக்க உள்ளோம் என்று கூறினார்.

டிரம்ப்பின் இந்த பேச்சால், வெனிசுலாவுக்குள் புகுந்து அமெரிக்கா விரைவில் தாக்குதல் நடத்த கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது நிலைமையை இன்னும் மோசமடைய செய்ய கூடும் என்றும் பார்க்கப்படுகிறது.

## இந்தோனேசியா: வெள்ளத்திற்கு 700 பேர் பலியான நிலையில் மீண்டும் தாக்கிய நிலநடுக்கம்



**பாலி, டிச.4:**

இந்தோனேசியாவில் கனமழை, சூறாவளி மற்றும் அதன் தொடர்ச்சியாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுக்கு 700 பேர் பலியாகி உள்ளனர். பலர் காயமடைந்தும், காணாமல் போயும் உள்ளனர். வடக்கு சுமத்ரா, மேற்கு சுமத்ரா மற்றும் அசே ஆகிய 3 மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளன.

இந்த நிலையில், வடக்கு சுமத்ரா மாகாணத்தில் இன்று அதிகாலை 2.20 மணியளவில் நிலநடுக்கம் தாக்கியது. இது ரிக்டர் அளவுகோலில் 4.4 ஆக பதிவாகி உள்ளது. இந்நிலநடுக்கம் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இதனை தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்து உள்ளது. ஏற்கனவே புயல், வெள்ளத்தில் சிக்கி மக்கள் பலியாகி, நிவாரண பொருட்கள் கிடைக்க முடியாமல் திணறி வரும் சூழலில், நிலநடுக்க பாதிப்பும் அவர்களை துயரில் தள்ளியுள்ளது.

27 கோடி பேருக்கும் கூடுதலான மக்கள் தொகை கொண்ட இந்தோனேசியாவில் நிலநடுக்கம், எரிமலை வெடிப்புகள் மற்றும் சுனாமி பாதிப்புகள் அடிக்கடி ஏற்படுவது உண்டு. வடக்கு சுமத்ரா மாகாணத்தில் கடந்த நவம்பர் 26-ந்தேதி ரிக்டர் அளவுகோலில் 4.4 அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டது. கடந்த அக்டோபரிலும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலையில், நடப்பு ஆண்டின் இறுதியில் மலாக்கா ஜலசந்தியில் ஏற்பட்ட சென்யார் சூறாவளி புயலானது, அந்நாட்டை கடுமையாக பாதித்து உள்ளது.

## உயிரியல் பூங்காவில் தடுப்புச் சுவரை தாண்டி குதித்த வாலிபரை தாக்கி கொன்ற சிங்கம்

**பிரேசிலியா, டிச.4:**

*பிரேசிலின் ஜோவா பெசோவா நகரில் ஜூபோடானியோ அருடா கமாரா உயிரியல் பூங்கா அமைந்துள்ளது. அங்கு சிங்கம், புலி உள்ளிட்ட விலங்குகள் பராமரிக்கப்படுகின்றன. இதனை காண நண்பர்கள் சிலர் அங்கு சென்றிருந்தனர். அதில் மச்சாடோ (வயது 20) என்ற வாலிபர் ஆர்வ மிகுதியில் தடுப்புச்சுவரை தாண்டி உள்ளே சென்றார். பின்னர் அங்கிருந்த ஒரு மரம் வழியாக கீழே இறங்க முயன்றார்.*

*அப்போது அங்கிருந்த ஒரு சிங்கம் அவரை தாக்கி இழுத்து சென்றது. இதில் படுகாயம் அடைந்த மச்சாடோ சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனையடுத்து உயிரியல் பூங்கா தற்காலிகமாக மூடப்பட்டு சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.*

*மேலும் இந்த சம்பவம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.*



## மாடல் அழகியை கொன்று சூட்கேசில் அடைத்த முன்னாள் காதலன் - ஆஸ்திரியாவில் பரபரப்பு



**வியன்னா, டிச.4:**

ஆஸ்திரியாவை சேர்ந்த பிரபல மாடல் அழகி ஸ்டெபானி பைபர். மாடல் அழகியான இவர் அழகுக்கலை நிபுணராகவும் இருந்தார். எனவே சமூகவலைதளங்களில் அவரை லட்சக்கணக்கானோர் பின்தொடர்கின்றனர். இந்த நிலையில் கடந்த மாதம் 23-ந்தேதி திடீரென அவர் மாயமானார்.

இதுகுறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர்.

இதில் அவரது முன்னாள் காதலன் மீது போலீசாருக்கு சந்தேகம் ஏற்பட்டது. அதன்பேரில் போலீசார் அவரை கைது செய்து விசாரித்தனர். அப்போது காதலை கைவிட்ட ஆத்திரத்தில் கழுத்தை நெரித்து கொன்றதாக அவர் ஒப்புக்கொண்டார். மேலும் ஸ்லோவேனியா எல்லை அருகே சூட்கேசில் வைத்து அவரை புதைத்ததாக கூறினார்.

இதனையடுத்து அந்த சூட்கேசை தோண்டி எடுத்த போலீசார் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த கொலைக்கு உதவியதாக வாலிபரின் தந்தை மற்றும் சகோதரனிடமும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ரஷிய கப்பல்கள் மீது தாக்குதல்... உக்ரைனை கடலில் இருந்தே துண்டித்து விடுவோம்: புதின் மிரட்டல்

**மாஸ்கோ, டிச.4:**


உக்ரைன் துறைமுகங்கள் மீது ரஷியா தாக்குதலை விரிவுப்படுத்தும் என்றும் புதின் கூறினார்.

ரஷியா மற்றும் உக்ரைன் இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. இந்நிலையில், கருங்கடலில் சென்று கொண்டிருந்த ரஷியாவின் 2 கப்பல்களை கடந்த வாரத்தில், நீருக்கடியில் இருந்து ஆளில்லா விமானம் கொண்டு உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இது ரஷியாவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு ரஷிய அதிபர் விளாடிமிர் புதின் கடும் கண்டனம் தெரிவித்து உள்ளார். மிரட்டல் விடும் வகையில் பேசியுள்ளார்.

இந்நிலையில், ரஷியாவின் முன்னணிசெய்திநிறுவனத்தில் வெளியிடப்பட்ட செய்தியில், உக்ரைனை கடலில் இருந்தே துண்டித்து விடுவதே, இந்த தாக்குதல்களை தடுத்து நிறுத்துவதற்கான வழியாக இருக்கும் என புதின் கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து, கருங்கடலில் கப்பல்களை உக்ரைன் தாக்குவது என்பது திருட்டுத்தனம் ஆகும். பொதுவான கடல் பகுதி கூட இல்லாமல், மற்றொரு நாட்டின் சிறப்பு பொருளாதார மண்டல பகுதியில் தாக்குதல் நடந்திருப்பது என்பது திருட்டுத்தனம் ஆகும். உக்ரைனின் இந்த திருட்டுத்தனத்திற்கு ஆதரவு தரும் நாடுகளின் கப்பல்களுக்கு எதிராக பதிலடி நடவடிக்கைகளை எடுப்பது பற்றி ரஷியா பரிசீலனை மேற்கொள்ளும் என குறிப்பிட்டு உள்ளார்.

உக்ரைன் துறைமுகங்கள் மீது ரஷியா தாக்குதலை விரிவுபடுத்தும். இந்த துறைமுகங்களுக்குள் நுழையும் கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என்றும் புதின் கூறினார்.



இந்த தாக்குதல்களில் அந்த இரு கப்பல்களும் கடுமையாக சேதமடைந்து உள்ளன. செயல்பாட்டை முற்றிலும் நிறுத்தி விட்டன என உக்ரைன் வட்டாரங்கள் தெரிவித்தன. இது, ரஷிய எண்ணெய் போக்குவரத்துக்கு ஒரு பெரிய பாதிப்பை உண்டு பண்ணியிருக்கும் என்றும் தெரிவித்தது. கடந்த வெள்ளி மற்றும் சனி கிழமைகளில் அடுத்தடுத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன.

நேட்டோவில் சேரும் முடிவை உக்ரைன் கைவிட கோரியும், ராணுவ நடவடிக்கை என்ற பெயரிலும் உக்ரைன் மீது 2022-ம் ஆண்டு பிப்ரவரி 24-ந்தேதி ரஷியா தாக்குதலில் ஈடுபட்டது. உக்ரைனை நிலம், நீர் உள்ளிட்ட பகுதிகளில் சூழ்ந்து கொண்டு ரஷியா தீவிர போர் தொடுத்தது.

தொடக்கத்தில் உக்ரைனின் கீவ், கார்கிவ், டொனெட்ஸ்க் உள்ளிட்ட பல நகரங்களை ரஷியா கைப்பற்றியது. எனினும், அவற்றை உக்ரைன் பதிலடி கொடுத்து பின்னர் மீட்டது. போரானது 3 ஆண்டுகளை நிறைவு செய்தும் தொடர்ந்து நீடித்து வருகிறது.

உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் ஆயுதங்கள் மற்றும் நிதி உதவியை வழங்கி வருகின்றன.

ரஷியாவுக்கு, நட்பு நாடான வடகொரியா, ராணுவ தளவாடங்கள் மற்றும் வீரர்களை அனுப்பி மறைமுக உதவி செய்கிறது என கூறப்படுகிறது. போரால் பெண்கள், குழந்தைகள் மற்றும் வீரர்கள் என இரு தரப்பிலும் ஆயிரக்கணக்கில் பலியாகி உள்ளனர். லட்சக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு உள்ளனர். லட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு அடைக்கலம் தேடி வேறு இடங்களுக்கு தப்பியோடி விட்டனர். போரை முடிவுக்கு கொண்டு வரும் அமெரிக்காவின் மத்தியஸ்த பேச்சுவார்த்தை முயற்சியில் பெரிய அளவில் பலன் ஏற்படவில்லை.